
விரைவில் தீர்வு எட்டப்படும் பக். 5

பரிதாபமாகச் சாவு பக். 7

பக். 22

பக். 23




கூடிய வெப்பநிலை 27 °c
குறைந்த வெப்பநிலை 22 °c
பனி கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.


# உதயன்

பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 | கதிர்: 079 | வள்ளுவர் ஆண்டு: 2045 | மாசி 01, வியாழன் 13.02.2014


## இரண்டே நாள்களில் 11 விபத்துச் சாவுகள்

யாழ்ப்பாணம், பெப் 13
வடக்கில் கடந்த இரண்டு நாள்களில் இடம்பெற்ற கோர விபத்துக்களில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். நேற்றும் விபத்துகளால் யாழ்ப்பாணத்தில் ஒருவரும் முல்லைத்தீவில் ஒருவரும் வவுனியாவில் இருவரும் சம்பவ இடங்களிலேயே உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில்.
நேற்று யாழ். நகரை அண்மித்த ஆனைப்பந்தியில் மோட்டார் சைக்கிள் - ஓட்டோ விபத்தில் மோட்டார் சைக் கிளில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் தலையில் அடிபட்டு வாய், மூக்கு பகுதிகளால் இரத் தம் வெளியேறிய நிலையில் யாழ். போதனா வைத்திய சாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சில நிமிடங்களில் உயிரிழந்தார்.
கோப்பாய் மத்தியில் வசித்து வந்தவரான வசந்தராஜா சுதாகரன்

21 ஆம் பக்கம் பார்க்க

### விபத்துக்கள் திடீர் அதிகரிப்பு

யாழ். குடாநாட்டில் நேற்று மாத்திரம் குறைந்தது மூன்று இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் நான்குபேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

23 ஆம் பக்கம் பார்க்க


நேற்றைய மீட்புப் பணி

## 61

மன்னார், பெப் 13
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து நேற்றுப் புதன் கிழமையும் மேலும் 2 மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. இவற்று

21 ஆம் பக்கம் பார்க்க

# போர் தொடுக்கவா?

## தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண சம்பந்தனிடம் ரகசியமாகக் கேட்டறிந்தது பா.ஜ.க.

சென்னை, பெப்ரவரி13
இலங்கை மீது போர் தொடுத்துத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமா என்று பா.ஜ.கவின் தமிழகத் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் வினவியுள்ளனர் என 'த ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
அத்துடன் ஈழத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயம் தமது தேர்தல் அறிக்கையில் உள்ளடக்கப்படும் என்றும் அவர்கள் உறுதியளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தல் மே மாதம் இடம்பெறவுள்ளது.
இந்தத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.கவினரே ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இவ்வாறானதொரு நிலையில், தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும் நடவடிக்கைகளில் பா.ஜ.க. ஈடுபட்டுள்ளது. இதற்காக ஒரு குழு செயற்பட்டு வருகின்றது.
ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் இந்தியா திடமான நடவடிக்கை எடுக்கும் என்பதற்

21 ஆம் பக்கம் பார்க்க

### ஜெனிவாவுக்கு செல்லமாட்டேன்

*வடக்கு முதலமைச்சர் கூறுகிறார்*

யாழ்ப்பாணம், பெப்.13
ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடருக்குச் செல்லப் போவதில்லை என்று தெரிவித்த வடக்கு முதலமைச்சர், அங்கு செல்வதற்குப் பொருத்தமானவர் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தான் என்று

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவா விசாரணையே தமிழர்களின் எதிர்பார்ப்பு

### நோர்வே தூதுவரிடம் வெளிப்படுத்தினார் யாழ்.ஆயர்

யாழ்ப்பாணம், பெப்.13
போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் - நீதி கிடைப்பதற்கு போர்க் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே தமிழ் மக்கள் விரும்புகின்றார்கள்.
இதுவே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், நோர்வேயிலிருந்து வருகைதந்த விசேட ஆலோசனை


நோர்வேத் தூதருடன் சந்திப்பில் யாழ். ஆயர்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு, கிழக்கு பகுதியில் மேலும் பல புதைகுழிகள்

### அம்பலப்படுத்துவேன் என்கிறார் சம்பந்தன்

கொழும்பு, பெப். 13
"மன்னாரில் மாத்திரம் மனிதப் புதைகுழி இல்லை. வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்கள் எல்லாவற்றிலும் இவ்வாறு புதை குழிகள் இருக்கின்றன. அதற்குரிய தரவுகளும் எம்மிடம் இருக்கின்றன. இதனைப் பகிரங்கப் படுத்த வேண்டிய
இடங்களில் - சந்தர்ப்பம் வரும்வேளையில் நாம் உரிய வகையில் எடுத் துக் கூறுவோம்."
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்று தெரிவித்தார்.
மன்னார் மனிதப் புதைகுழி விவகாரம் குறித்து கருத்து

23 ஆம் பக்கம் பார்க்க

### ஜெனிவாவில் தீர்மானம் வெற்றி பெறும்

லண்டன், பெப்.13
இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் சபை அமர்வில் சமர்ப்பிக்கப்படும் தீர்மான வரைவு வெற்றி பெறும் என்று பிரிட்டன் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## காணி பறிப்பு விவகாரமும் ஜெனிவாப் பிரேரணையில்

### கூட்டமைப்பு நம்பிக்கை

கொழும்பு, பெப். 13
வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் திட்டமிட்ட அடிப்படையில் அரங்கேற்றப்படும் காணி அபகரிப்புக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையினூடாக இம்முறை சர்வதேச சமூகம் காட்டமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரிட்டனில் நடைபெற்ற நில ஆக்கிரமிப்பு குறித்த மாநாட்டில் பங்கேற்ற சர்வதேச பிரதிநிதிகள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.
அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணையில், தமிழர் தாயகத்

21 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் விசாரணை நாளை

### கோப்பாயில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.13
காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகளுக்குரிய ஏற்பாடுகள் யாவும் யாழ். மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், விசாரணைகள் நாளை வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பமாகும் என்றும் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் பகிரங்க அமர்வுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. கடந்த மாதம் கிளிநொச்சியில் அமர்வுகள் இடம்பெற்றிருந்த நிலையில் இந்த

21 ஆம் பக்கம் பார்க்க

### வடமாகாண சபைக்கு அரசு அழைப்பு

கொழும்பு, பெப். 13
வடக்கிலுள்ள பிரச்சினைகள் குறித்து தம்மோடு பேச வருமாறும், தீர்வுகளை முன்வைக்க தாம் எப்போதும் தயார் நிலையிலேயே உள்ளதாகவும் வட மாகாண சபைக்கு அரசு நேற்று அழைப்பு விடுத்தது.
புலம்பெயர் தமிழர்கள் பயன்

21 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் அபிவிருத்தி; ஐ.நா, அரசுடன் பேச்சு

### மாகாண சபை விரைவில் நடத்தும்

யாழ்ப்பாணம், பெப்.13
வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் ஐ.நா. சபை, இலங்கை அரசு மற்றும் எங்களுக்கு உதவி வழங்கும் நாடுகளின் தூதுவர்கள் இடையிலான கலந்துரையாடல் ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்

23 ஆம் பக்கம் பார்க்க

## கமலை பிணை எடுக்க மேல் நீதிமன்றில் மனு

யாழ்ப்பாணம், பெப் 13
நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷயனின் கொலைக் குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளவர்களில் பிரதான சந்தேக நபரான ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும் வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவருமான கந்த சாமி கமலேந்திரனை (கமல்) பிணையில் விடுவிக்கக் கோரி யாழ்.மேல் நீதிமன்றில்

21 ஆம் பக்கம் பார்க்க

## புதன்கிழமைகளில் மக்கள் முதல்வரைச் சந்திக்கலாம்

*யாழ்ப்பாணம், பெப்.13*
*பொதுமக்கள் தன்னை வாரம் தோறும் புதன் கிழமைகளில் சந்திக்கலாம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.*
*பொதுமக்களைச் சந்திப்பதற்கு வாரம் தோறும் புதன்கிழமையை ஒதுக்கியுள்ளேன். அன்றைய தினம் மக்கள் சந்திப் புத்தான் இடம்பெறும்.*

23 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா சமரை முறியடிக்க தயார் நிலையில் இலங்கை

## கள நகர்வுக்கான வியூகங்கள் அமைப்பு என்கிறது அரசு

கொழும்பு, பெப்.13

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையை எதிர்கொள்வதற்கான வியூகங்களை வகுக்கும் இராஜதந்திர செயற்பாடுகளில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளது என அமைச்சர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

"ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை முன்வைக்கும் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய மேற்குலக நாடுகள் ஈராக் போன்ற நாடுகளில் தாம் இழைத்த குற்றச்செயல்கள் குறித்து முதலில் கவனம் செலுத்த வேண்டும்" என்றும் அமைச்சர் நேற்று சுட்டிக்காட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊட கவியலாளர் மாநாடு கொழும்பில் அமைந்துள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று மதியம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, ஜெனிவா இராஜதந்திரச் சமரை எதிர்கொள்ள அரசு என்ற ரீதியில் நாம் தற்போது தயாராகிக் கொண்டு வருகிறோம். ஏன், இதற்கு முகம் கொடுக்கவும் நாம் தயாராகி விட்டோம். ஆனால், இது குறித்து அரசு ஊடகவியலாளர் மாநாடுகளை வைக்க, கூட்டங்களை வைக்க வேண்டிய தேவை இல்லை. இதுவிடயத்தில் ஒருபோதும் அரசு அலட்டிக்கொள்ளாது.

அதேநேரத்தில் அச்சமரை முறியடிப்பதற்கான அனைத்து செயற்பாடுகளிலும் அரசு இராஜதந்திரமான முறையில் வியூகங்களை முன்னெடுத்து வருகிறமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே, அரசின் செயற்பாடுகளின் பிரதிபலன்கள் ஜெனிவாவில் உரிய நேரத்தில் தெரிய வரும்.

அத்தோடு, இலங்கைக்கு எதிராக பிரேரணைகளை முன்வைக்கும் அமெரிக்க, பிரிட்டன் போன்ற நாடுகள் முதலில் தாம்மால் பாதிக்கப்பட்ட ஈராக் போன்ற நாடுகள் குறித்தே கவனம் செலுத்த வேண்டும். அதை விடுத்து இலங்கை விடயத்தில் தலையிடுவது முறையானதல்ல" என்றார். (சி)

**ஜெனிவா இராஜதந்திரச் சமரை எதிர்கொள்ள அரசு என்ற ரீதியில் நாம் தற்போது தயாராகிக் கொண்டு வருகிறோம். ஏன், இதற்கு முகம் கொடுக்கவும் நாம் தயாராகிவிட்டோம்.**

**அச்சமரை முறியடிப்பதற்கான அனைத்து செயற்பாடுகளிலும் அரசு இராஜதந்திரமான முறையில் வியூகங் களை முன்னெடுத்து வருகிறமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. ஆகவே, அரசின் செயற்பாடுகளின் பிரதி பலன்கள் ஜெனிவாவில் உரிய நேரத்தில் தெரிய வரும்.**

# உலக நாடுகளிடமிருந்து இலங்கை தன்னை தனிமைப்படுத்த முடியாது

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

டில்லி,பெப்.13


இலங்கை உலக நாடுகளிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித், நாம் அனைவரும் ஐ.நாவின் பங்காளிகள் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அடுத்த மாதம் அமெரிக்காவினால் தீர்மான வரைவு கொண்டு வரப்படவுள்ளது. இதில் சர்வதேச விசாரணை உள்ளடக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில் இலங்கை அதை இன்னமும் மறுத்து வருகின்றது. இவ்வாறானதொரு நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

டில்லியில், இலங்கை ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியா ஆரம்பத்தில் உறுதியாக இருந்தது. இந்தச் சட்டத் திருத்தம் என்பது ஓர் ஆரோக்கியமான ஆலோசனை தானே தவிர, இது திணிக்கப்பட்ட விடயமல்ல. அன்றைய காலத்தில் இருநாட்டு அரசுகளும் இணங்கியதாலேயே இந்தச் சட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. ஆக, இணக்கமில்லாமல் அதனை நாங்கள் இலங்கை அரசிடம் திணிக்கவில்லை.



இந்திய வெளிவிவகார அமைச்சர் சல் மான் குர்ஷித்

மனித உரிமைகள் தொடர்பான விவகாரத்தில் இலங்கை, சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்தக் கூடிய வகையில் நடுத்தரமான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். இலங்கை சர்வதேச சமூகத்திடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ள முடியாது.

இலங்கை அரசு, ஏதாவதொன்று நடக்கின்றது என்பதைச் சர்வதேச சமூகத்துக்குக் காட்டி அதனூடு கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் அனைவரும் ஐ.நாவின் பங்காளிகள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எங்களுக்கு எங்கிருந்து நிர்ப்பந்தங்கள் வருகின்றன என்பதைக் கண்டறிய வேண்டும்.

நாங்கள் இலங்கைக்கு உத்தர விட முடியாது. ஆனால் ஆலோசனைகளைச் சொல்ல முடியும் - என்றார். (த-5)

# சிங்களம் கற்பிக்குமாறு கோரினர் வன்னி மாணவர்

## ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்

சென்னை,பெப்.13

கிளிநொச்சியில் கல்வி பயிலும் மாணவர்கள் தமக்குச் சிங்களம் கற்க ஆசிரியர்களை அனுப்புமாறு கோரிக்கை விடுப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டினுள் குரோத மனப்பாங்கு கொண்டவர்களை உருவாக்குவதைச் சர்வதேச சமூகங்கள் கைவிடவேண்டும் என்றும் கூறினார்.

'மதர் ஸ்ரீலங்கா' அமைப்பு கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகம் செய்துள்ள நடைமுறை வேலைத்திட்ட கருத் திட்டத்தின் கீழ் பல்வேறு ஆளுமையுள்ள மாணவர்களைப் பாராட்டி விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் சுகததாஸ உள்ளக அரங்கில் இடம்பெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இது நீங்கள் பிறந்த நாடு. நீங்கள் வாழும் நாடு. நீங்கள் இறந்த பின் நல்லடக்கம் செய்யப்படப் போகும் நாடு. எனவே உங்கள் தாய் நாட்டை நேசியுங்கள். அதற்காகத் தயாராகுங்கள். உங்கள் எதிர்காலம் ஒளிமயமாக வேண்டும். அதற்காக நாம் சகல வசதிகளையும் வழங்குவோம்.

**ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்**

நாட்டுக்குள் விரோத மனப்பான்மை கொண்டவர்களை உருவாக்குவதை சர்வதேச சமூகம் கைவிடவேண்டும். அதேவேளை, நாட்டுக்காக உழைக்கும் பிரஜைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு முற்படவேண்டும்.

அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் சமூகத்தைப் பாதிப்படைய செய்வதற்கு எந்தவொரு சக்தியாலும் இயலாது. கொழும்புப் பாடசாலைகளுக்கு அன்று இருந்த வசதிகள் இன்று கிராமப் புறப் பாடசாலைகளுக்கும் உள்ளன.

**சுதந்திரமான கல்வி**

இன்று கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் கல்வியில் உயர்ந்து செல்கின்றனர். இந்த முறை உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வட பகுதி மாணவர்களே அதிகமாகச் சித்தியடைந்துள்ளனர். இது குறித்து பெருமை கொள்ள வேண்டும். பல வருடங்கள் துயரப்பட்ட அந்தப் பிள்ளைகளுக்கு இன்று சுதந்திரமாகக் கல்வியைப் பெற இயலுமானதே இதற்குக் காரணமாகும்.

அன்று வடக்கிலுள்ள குழந்தைகளுக்குத் தெற்குக்குச் செல்ல வேண்டாமென பிரிவினை வாதிகள் கூறினர். அன்று தென் பகுதிப் பிள்ளைகளை வடக்குக்கு அனுப்ப இயலவில்லை. கிழக்கிலிருந்து மேற்குக்கு வர இயலவில்லை. பிள்ளைகள் அச்சத்துடனேயே பாடசாலைக்குச் சென்றனர். ஒருவரை ஒருவர் விசுவாசம் இன்றிப் பார்த்த யுகம் இருந்தது.

**இனத்துரோகம்**

தென்பகுதி பிள்ளைகளுக்குத் தமிழ் கற்குமாறும், வடபகுதிப் பிள்ளைகளுக்கு சிங்களம் கற்குமாறும் கூறப்பட்டபோது அதனை இனத்துரோகமாகவே பார்த்தனர். சிலர் இதற்கு எதிர்ப்பும் தெரிவித்தனர். அன்று எழுத்துக்களில் தார் பூசினர். வேறு மொழிகளில் இருந்த பலகைகளில், வாகனங்களில் தார் பூசினர். இன்று சகல பாடசாலைகளிலும் இரு மொழிகளைப் போதிக்கின்றனர்.

எமக்கு சிங்களம் படிக்க ஆசிரியர்களை அனுப்புமாறு நான் கிளிநொச்சிக்குச் சென்றபோது மாணவர்கள் என்னிடம் கோரினர். தென்பகுதிக்குச் சென்றால் தமிழ் ஆசிரியர்களை அனுப்புமாறு கூறுகின்றனர். இன்று அந்த நிலைமைக்கு நாடு மாறியுள்ளது. நாம் மொழிகளைப் பயிலவேண்டும்.

நாட்டைப் பிரிக்கும், நாட்டை அழிக்கும் தேசிய உணர்வு இல்லாத, மத உணர்வு இல்லாத, முதியோர்களை மதிக்காத, நாட்டைக் காட்டிக் கொடுக்கும் அமைப்புக்களுக்குப் பணம் வழங்காமல் நாட்டுக்கு வேலை செய்யக்கூடிய அமைப்புக்களை அடையாளம் காணுங்கள். ஐக்கியத்தைக் கட்டி எழுப்பக்கூடியவர்களை அடையாளம் காணுங்கள். அதனையே இன்று செய்ய வேண்டும் - என்றார். (த-5)

# சட்டத்துக்கு முரணாகப் பேசியிருந்தால் என் மீது யாரும் நடவடிக்கை எடுக்கலாம்

## வடக்கு முதலைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.13

சட்டத்துக்குப் புறம்பாக நான் எதைப் பேசியிருந்தாலும் வேண்டிய நடவடிக்கைகளை யாரும் எடுக்கலாம் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வரணி மகா வித்தியாலயத்தில் பேசிய உரை சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

'கர்மவினை எவரையும் விட்டு வைக்காது. நாம் முன்னர் செய்த கருமங்களுக்கே இப்பொழுது பலனை அனுபவிக்கின்றோம். சர்வாதிகாரிகளாக இருந்த எகிப்தின் முபாரக், ஈராக்கின் சதாம் ஹூசைன், பாகிஸ்தானின் முஷாரப் ஆகியோர் இருந்த நிலை என்ன என்பதையும் இறுதியில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்' என்று முதலமைச்சர் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

இந்த உரை தொடர்பில் ஜனாதிபதியால் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருந்ததாக நம்பகரமான தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் வடக்கு முதலமைச்சரிடம் கேட்டபோது,

ஜனாதிபதியிடம் இது தொடர்பில் நான் கேட்கவும் இல்லை. எனக்கு நேரடியாகத் தெரியப்படுத்தப்படவுமில்லை. நான் எனது உரையை எழுதியே வாசித்தேன். சட்டத்துக்குப் புறம்பாக நான் எதைத் தெரிவித்திருந்தாலும், வேண்டிய நடவடிக்கைகள் என் மீது எடுக்கலாம் - என்று பதிலளித்தார். (த-5)

# நியூஸிலாந்துக்கு செல்ல முயன்ற 75 பேர் கைது

சட்டவிரோதமான முறையில் நியூ ஸிலாந்து செல்ல முயன்ற மட்டக்களப்பு மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 75 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை பேருவளை, மொரகல்லவில் வைத்து இவர்களைக் கைதுசெய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ள னர். இவர்களில் ஆண்கள் 60 பேரும், பெண்கள் 9 பேரும், சிறுவர்கள் மற்றும் சிறுமிகள் மூவரும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# சட்டவிரோத மீன்பிடி இரு மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம்,பெப்.13

குடாக்கடலில் சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகக் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களம் தீடீர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின்போது இரு மீனவர்கள் கைது செய்யப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பண்ணைப்பாலத்துக்கு அருகிலுள்ள குடாக்கடலில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி இரு மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.


இது தொடர்பில் கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற அவர்கள், குறித்த இரு மீனவர்களையும் கைது செய்ததுடன் அவர்களின் படகுகள், மீன்கள் என்பவற்றைப் பறிமுதல் செய்துள்ளனர்.

மன்னாரைச் சேர்ந்த மீனவர் ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த [illegible] தடைசெய்யப்பட்ட வலையைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.நீதிவான் நீதிமன்றில் இருவரும் நேற்று முற்படுத்தப்பட்டு தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். படகுகள் இரண்டும் 5 லட்சம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டன. அத்துடன் வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷெல் வீச்சுக்களின் வடுக்கள் மாறாத நிலையில் கல்வயல் வீதி



வடு சுமந்த கல்வயல் வீதியின் பகுதி

தென்மராட்சி, பெப்.13

சாவகச்சேரி நுணாவில் கல்வயல் வீதி 2000 ஆம் ஆண்டு போர் வேளையில் இடம்பெற்ற ஷெல் வீச்சுக்களின் வடுக்களுடனேயே தற்போதும் காணப்படுகிறது.

நுணாவில் மத்தி ஏ-9 வீதியில் ஆரம்பித்து மட்டுவில்- பெருங்குளம் வீதியுடன் இணையும் சுமார் இரண்டரை கிலோ மீற்றர் நீளமான இவ்வீதி கல்வயல் நுணாவில், நுணாவில் கிழக்கு, கற்குளி, பெருங்குளம் போன்ற கிராமங்களின் பிரதான வீதியாகத் திகழ்வது டன் மட்டுவில், சரசாலை ஆகிய பிரதேச மக்களுக்கு குறுகிய போக்குவரத்து வீதியாகவும் உள்ளது.

ஏ-9 வீதியிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையும் திருத்தப்பட்ட போதும் முழுமையாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படும் இவ் வீதி சைக்கிளில் கூட பயணிக்க முடியாத அளவுக்கு ஷெல்களின் வடுக்களுடன் 14 வருடங்களாகக் காணப்படுகின்றது.

குறித்த வீதியில் பாடசாலை, முன்பள்ளிச் சனசமூக நிலையம், பொதுநோக்கு மண்டபம் உட்பட 100 இற்கு மேற்பட்ட குடியிருப்புகளும் காணப்படுகின்றன.

இந்த வீதியின் இணைப்பு வீதிகளில் சில புனரமைக்கப்பட்ட போதிலும் ஏனைய சில வீதிகளும் மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. (வ-9)

# கச்சதீவுப் படகு கட்டணம் ரூ.400

யாழ்ப்பாணம், பெப்.13

நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரிகர் ஒருவருக்கு போக்குவரத்து இருவழிக் கட்டணமாக ரூ.400 அறவிடப்படும் என்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் குமுதினி படகு, குறி காட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான போக்குவரத்தில் ஈடுபடும் எனவும் கச்சதீவுக்கான பயணச் சேவையை மேற்கொள்ளாது எனவும்-

கச்சதீவில் கடைகளை அமைக்கவுள்ள வியாபாரிகளுக்கு அவர்களது பொருள்களை எடுத்துச் செல்வதற்கு படகு ஒன்றுக்கு கட்டணமாக 30 ஆயிரம் ரூபா அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-7)

# கலை அரங்கக் கட்டடம் திறப்பு



*வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் , சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலய அதிபர் வே.கந்தசாமி ஆகியோர் கலையரங்கினைத் திறந்து வைத்தனர்.*

தென்மராட்சி,பெப் .13

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலயத்தில் 10 மில்லியன் ரூபா செலவில் ரீஎஸ்ஈபி திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட கலை அரங்கக் கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், வித்தியாலய அதிபர் வே.கந்தசாமி ஆகியோர் கூட்டாக கலையரங்கினைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் கட்டட ஒப்பந்தகாரர் சி.இராமச்சந்திரன் முதன்மை விருந்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். கட்டடக் கலைஞர்களுக்கு சிறப்பு விருந்தினரால் பரிசில் வழங்கப்பட்டன. (வ-9)

# கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் பணி ஆரம்பம்

*தெல்லிப்பழை மருத்துவமனை வளாகத்தில்*

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை வளாகத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதை அடுத்து அவற்றைப்பிடிக்கும் நடவடிக்கையில் தெல்லிப்பழை ஆதார வைத்திய அதிகாரி அலுவலகமும் வலி.வடக்கு பிரதேச சபையும் இணைந்து ஈடுபட்டுள்ளன.

கடந்த சில தினங்களாக மருத்துவமனை வளாகத்தில் கட்டாக்காலி நாய்கள் ஒன்றுகூடி அட்டகாசம் செய்வதுடன் சிகிச்சைக்காக வருகைதரும் நோயாளர்களையும் கடித்துள்ளன. 5 பேர் இவ்விதம் நாய்க் கடிக்கு இலக்காகியுள்ளனர். அதனையடுத்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை அதிகாரி அலுவலகமும் வலி. வடக்கு பிரதேச சபையும் இணைந்து கட்டாக் காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கையில் நேற்று முன்தினம் தொடக்கம் ஈடுபட்டுள்ளன.

அந்தப்பகுதி பிரதேச மக்களின் வளர்ப்பு நாய்களின் குட்டிகளே மருத்துவமனை வளாகத்துக்குள் இரவுநேரங்களில் கொண்டு வந்து விடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

# விடுதிகளில் சிகிச்சை பெறுவோருக்கு மருத்துவ அறிக்கை அட்டை விற்பனை

*யாழ்.போதனா மருத்துவமனையில்*

யாழ்ப்பாணம்,பெப் .13

யாழ்.போதனா மருத்துவமனை விடுதிகளில் சிகிச்சை பெற்று வெளியேறுபவர்களுக்கான கொப்பிகள்,மருத்துவஅறிக்கைஅட்டை போன்றன அங்குள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் விற்கப்படுவது குறித்து நோயாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வெளியேறும் நோயாளர் அவற்றை வாங்குவதற்கு மருத்துவமனைக்கு வெளியே செல்லாமல் பாதுகாப்பு நிலையத்தில் கொள்வனவு செய்வதால் தமக்கு ஏற்படும் அலைச்சல் தவிர்க்கப்படுகிறது என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை இங்கு கொப்பிகள், மருத்துவ அறிக்கை அட்டைகள் என்பன மொத்தமாக 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அவற்றின் விலை விவரங்கள் காட்சிப்படுத்தப்படாமல் உள்ளது குறித்தும் கொள்வனவு செய்யப்படும் கொப்பிகள் அட்டைகள் போன்றவற்றுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படாமைக்கும் கவலை தெரிவித்தனர். (வ-9)

# மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் செயலே

*மன்னாரில் இந்து ஆலயம் உடைப்புக்கு இந்துமகா சபை கண்டனம்*

மன்னார், பெப்.13

மன்னார் சிறுநாவல் குளத்தில் இந்து ஆலயம் உடைக்கப்பட்டமையானது மதநல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடாகவே அமையும் என்று மன்னார் மாவட்ட இந்து மகா சபை கண்டனம் தெரிவித் துள்ளது.

இதுதொடர்பில் இந்து மகா சபை வெளியிட்ட கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறுநாவல் குளம் பகுதியில் அமைந்திருந்த பிள்ளையார் ஆலயம் ஒரு சிலரால் இடித்து தரை மட்டமாக்கப்பட்டுள்ளதென நாம் அறிகின்றோம். இந்தச் சம்பவமானது இந்துக்கள் மத்தியில் கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான செயற் பாடுகள் அண்மையில் அடிக்கடி இடம் பெற்று வருகின்றன.

இது மத நல்லிணக்கத் துக்கும் ஒற்றுமைக்கும் குந்த கம் விளைவிக்கும் செயற்பாடாகவே இந்து மகாசபை கருதுகின்றது.

காணி தொடர்பான பிரச்சினைகள் ஏதாவது இருப்பின் உரிய முறையில் பேசியோ சட்ட ரீதியாகவோ அல்லது அரச மட்ட ரீதியாகவோ நடவடிக்கை மேற்கொள்வதை விடுத்து தான்தோன்றித்தனமாக ஆலயத்தை இடித்து தரை மட்டமாக்கியமை மத வழிபாட்டின் புனிதத்தன்மைக்கு பங் கம் விளைவிக்கும் செயற்பா டாகவே இந்து மகா சபை கருத்துகிறது.

குறிப்பிட்ட அறிக்கையில் மதங்களுக்கிடையே நல்லிணக்கம் சமாதானம், புரிந்துணர்வு என்பன ஏற்படக் கூடிய விதத்தில் சகல மதத் தலைவர்களும் ஒற்றுமையுடன் செயற்படுவார்கள் என்று நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (வ)

## உள்ளூராட்சிச் சபை ஊழியர் பதவி உறுதிப்படுத்தலுக்கு விவரம் சேகரிப்பு

தென்மராட்சி, பெப்.13

வடமாகாண உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் இதுவரை பதவி உறுதிப்படுத்தப்படாத உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் விவரங் களை மின் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகத்தர் பெயர், பதவி, முதல் நியமனத் திகதி, உறுதிப்படுத்தாமைக்கான காரணம் ஆகிய விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்க ளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# யாழ்.நகர் சிவன்பண்ணைப் பகுதியில் சுகாதார நிலைமை படுமோசம்

*நுளம்புப் பெருக்கத்தால் மக்கள் அவதி*

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்.நகரில் பொதுசன நெருக்கமான சிவன் பண்ணை வீதி கிழக்கு, மேற்குப் பகுதிகளிலும் கழிவுநீர் குளத்துக்குச் செல்லும் பாதையிலும் புல் பூண்டுகள் வளர்ந்து காணப் படுகின்றன. இதனால் நுளம்புகள் பெருக்கம் அதிகரித்துள் ளது. இதன் காரணமாக பிரதேச மக்கள் டெங்குத் தாக்கம் குறித்து அச்சம் கொண்டுள்ளனர். நுளம்புத் தொல்லையால் மக்கள் அவதிப்படுகின்றனர். சுகாதார நிலைமைகளும் படுமோசமான நிலையில் உள்ளது.

இந்தப் பகுதியின் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து யாழ். மாநகர சபைக்கு கடிதம் மூலம் அறிவித்தும் இது வரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று யாழ்.கொட்டடி சுகாதாரக் குழு குற்றம் சாட்டுகிறது.

**கழிவுநீர் தேங்கி சுகாதாரக் கேடு**

இது இவ்வாறிருக்க, நல்ல தண்ணீர்க் கிணற்றடி வைரவர் கோயில், நாவலடி அம்மன் கோயில்களுக்கு அருகில் [illegible] சந்திப்பகுதியில் வீட்டுக் கழிவுப் பொருள்கள் வீசப்படுவதால் பக்கத்திலுள்ள வடிகாலின் கழிவுநீரோட்டம் தடைப்பட்டு தேங்கி நிற்பதுடன் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. இது தொடர்பிலும் யாழ். மாநகர சபைக்கு அறிவித்திருந்த போதும் எதுவித பயனும் இல்லை என [illegible] சுகாதாரக் குழு தெரிவித்துள்ளது.

**கழிவுகள் குவிப்பு**

அதேசமயம் சிவன் பண்ணை வீதி, மாவடி வீதி, வெள்ளாந் தெரு சுற்று வட்டப்பிரதேசத்தில் நீண்டகாலமாக பொதுமக்கள் வீதிகளில் கழிவுகளைப் போடாத நிலை இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் இருந்து யாழ்.மாநகர சபையின் தள்ளுவண்டிகள் மூலம் குறிப்பிட்ட பகுதியில் வேறு பகுதிகளில் சேகரிக்கப்பட்ட கழிவுகள் கொண்டு வந்து கொட்டப்பட்டு பின்னர் டிராக்டர்கள் மூலம் ஏற்றிச் செல்லும் நடவடிக்கை ஆரம்பமானது. அதனையடுத்து பொதுமக்களும் அந்த இடத்தில் கழிவுகளைப் போட ஆரம்பித்தனர். அதன் பின்னர் இந்த இடம் கட்டாக் காலி நாய்களின் உறைவிடமாகிவிட்டது. இவ்வாறான நிலைமைகளால் சுகாதாரச் சீர்கேடு மோசமாகியுள்ளது என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித் தமிழீழ வாக்கெடுப்பு கோரி ஐ.நாவின் அலுவலகம் முற்றுகை

சென்னை.பெப்.13
தனித் தமிழீழத்துக்கான பொது வாக்கெடுப்புக் கோரி, சென்னையிலுள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தை மே17 இயக்கத்தினர் நேற்று முற்றுகையிட்டனர். இதனால் 150 இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சென்னை அடையாறில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக நேற்றுக் காலை இந்தப் பெரும் போராட்டம் நடத்தப்பட்டது.


ஐ.நா. அலுவலகம் முன்பாக திரண்ட கூட்டம்

நினைவு நாள்
தமிழீழ மக்கள் மீதான இனப் படுகொலையை தடுக்கக் கோரி, கடந்த 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி, ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் முன்பு முருகதாசன், தன்னுடலைத் தீயிட்டுக் கொண்டு வீரமரணமடைந்தார்.
அவரது நினைவு நாளான நேற்று, தமிழீழ இனப் படுகொலையைத் தடுக்கத் தவறியதோடு மட்டுமின்றி அதை மூடி மறைக்கும் செயலில் ஈடுபட்ட ஐக்கிய நாடுகள் சபையைக் கண்டித்தும், தமிழீழப் பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரியும் சென்னை அடையாரில் உள்ள ஐ.நா. அலுவகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடத்தப்பட்டது.
பல்வேறு அமைப்புகளின் பங்களிப்போடு நேற்றுக் காலை 11 மணியளவில் நடைபெற்ற முற்றுகைப் போராட்டத்துக்கு மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி தலைமை வகித்தார்.


திரண்டனர் மக்கள்
ம.தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்யா, விடுதலைத் தமிழ்ப் புலிகள் கட்சி நிறுவனர் குடந்தை அரசன், தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க அமைப்பாளர் பொழிலன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் தலைவர்களும், நாம் தமிழர் கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, மனித நேய மக்கள் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், பாலச்சந்திரன் மாணவர் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பு மற்றும் இயக்கங்களின் பொறுப்பாளர்களும்,திரளானதமிழுணர்வாளர்களும் இதில் பங்கேற்றனர்.
தமிழீழ இனப் படுகொலைக்கான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும், தமிழீழத்துக்கான பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் ஆகிய முதன்மைக் கோரிக்கைகள் இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.
இதன் போது ஐக்கிய நாடுகள் சபையின் கொடி எரிக்கப்பட்டது. இதன் பின்னர் ஐ.நா அலுவலகத்தை முற்றுகையிட நெருங்குகையில் பொலிஸார் போராட்டக்காரர்களைத் தடுத்தனர். அதனையும் மீறிச் செல்ல முயன்றதால் 150 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.
இதேவேளை ஐ.நா தலைமையகமான நியூயோர்க்கிலும் நேற்றைய தினம் தமிழ் உணர்வாளர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (த-5)

## வலி.கிழக்குப் பிரதேச சபையின் பட்ஜெட் நேற்று நிறைவேறியது

யாழ்ப்பாணம்.பெப்.13
வலி.கிழக்குப் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.
சபைக்குப் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட ந.குமணனாலேயே வரவு செலவுத் திட்டம் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.
வலி.கிழக்குப் பிரதேச சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் சபைத் தவிசாளர் அ.உதயகுமாரினால் கடந்த ஆண்டு முன்வைக்கப்பட்டிருந்தது.குறித்த வரவுசெலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டிருந்தது. இதனால் தவிசாளர் அ.உதயகுமார் பதவியிழந்திருந்தார்.
வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படாமையினால் ஊழியர்களுக்கான கொடுப்பனவு உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்க முடியாத நிலைமைக்குச் சபை தள்ளப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த 7 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஊடாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை செயலாளருக்கு வழங்கியிருந்தார்.
இந்தநிலையில் சபையின் பதில் செயலாளராகக் கடமையாற்றி வந்த திருமதி ஜெயந்தா சோமராஜின் பதவிக் காலம் முடிவடைந்திருந்த நிலையில் புதிய செயலாளராக ந.குமணன் நேற்று முதல் நியமிக்கப்பட்டிருந்தார்.
புதிய செயலாளர் நியமிக்கப்பட்ட பின்னர் சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் பெப்ரவரி மாதத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (த-5)

## பெப். 15 முதல் உணவகங்களில் விலைப்பட்டியல் கட்டாயமானது

யாழ்ப்பாணம்,பெப் 13
யாழ். குடாநாட்டில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத உணவகங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் மாவட்ட இணைப் பதிகாரி த.வசந்தசேகரன் அறிவித்துள்ளார்.
இதன்படி எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து உணவகங்களிலும் விலைப் பட்டியல் காட்சிப்படுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து மாவட்ட இணைப் பதிகாரி மேலும் தெரிவிக்கையில்,
உணவகங்கள் உள்ளிட்ட வியாபார நிலையங்கள் அனைத்துக்கும் ஏற்கனவே விலைப்பட்டியல் காட்சிப்படுத்தவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த அறிவித்தலை உணவக உரிமையாளர்களோ அல்லது வியாபார நிலையங்களின் உரிமையாளர்களோ பின்பற்றுவதாகத் தெரியவில்லை.
எனவே இதுவரை விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாதவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் காட்சிப் படுத்தவேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் தீடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுடன் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.
வியாபார நிலையங்கள் அனைத்திலும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்த வேண்டியது வியாபார நிலைய உரிமையாளர்களின் கடமையாகும்.
புடைவைக் கடைகளில் விலையினைக் காட்சிப்படுத்த வேண்டுமே தவிர குறியீட்டு எண்களைக் காட்சிப்படுத்தக் கூடாது.அவ்வாறு காட்சிப்படுத்தினால் அது குறித்த வியாபார நிலையத்தைச் சார்ந்தவர்களால் மட்டுமே விளங்கிக் கொள்ள முடியும்.
எனவே நுகர்வோரின் நலனைக் கருத்திற்கொண்டு விலைப்பட்டியலைச் சரியான முறையில் காட்சிப்படுத்த வேண்டும். மீறுவோருக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (த-14)


யாழ்.முற்றவெளியில் அமைந்துள்ள தனியார் பஸ் நிலையக் கட்டடம் நேற்று யாழ்.மாநகர சபையினரால் இடிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் கனரக வாகனங்கள் மூலம் கட்டடத்தை இடிக்கும் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. யாழ்.முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்துக்கு முன்பாக புதிய தனியார் பஸ் நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளதை அடுத்தே நேற்று இந்தக் கட்டடம் இடித்து அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (த-17)

## இறப்பில் சந்தேகம்

யாழ்ப்பாணம், பெப்.13
வண்ணார் பண்ணைப் பகுதியில் உயிரிழந்த பெண்ணின் இறப்புத் தொடர்பில் சந்தேகம் உள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரம் நேற்றுத் தெரிவித்தது.
வீட்டில் மயங்கிய நிலையில் காணப்பட்ட பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர். ஏற்கனவே வெளிவந்த செய்திகளில் கூறப்பட்டது போன்று அவர் தூக்கில் தொங்க முயற்சிக்கவில்லை என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.
வண்ணார் பண்ணையைச் சேர்ந்த சிவகுரு கலைச்செல்வியின் (வயது-43) உடற்கூற்றுப் பரிசோதனையும் இறப்பு விசாரணையும் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது.
அதில், உயிரிழந்த பெண்ணின் கழுத்தில் கயிறு உரசிய அடையாளம் காணப்படுவதாகவும் இதனால் அவரது இறப்பில் சந்தேகம் நிலவுவதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது. நேற்று சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அதனைப் புதைக்குமாறு உத்தர விடப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (உ-4)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்


தோற்றம் 1940 * 04 * 14

மறைவு 2014 * 01 * 14



அமரர் சபாபதி கதிரவேலு

கடந்த 2014.01.14 அன்று செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சபாபதி கதிரவேலு அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் 2014.02.11 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 2014.02.13 மு.ப. 11.30 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் நனடபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
ஆலடி, உடுவில் தெற்கு, சுன்னாகம். குடும்பத்தினர்.




## சர்ச்சை ஏற்படுத்திய புத்தகத்தை மீளப்பெற்றது பென்குயின்

சென்னை, பெப்.13
'இந்து சமயத்தின் வரலாறு' எனும் தலைப்பில் முன்னணி அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் எழுதி இந்தியாவில் வெளியான புத்தகங்களை திரும்பப் பெறுவது என்று அதன் பதிப்பாளர்கள் முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.
வெண்டி டானிகர் எனும் குறித்த பெண் எழுத்தாளர் இந்துசமயவிடயங்கள்குறித்து ஆழ்ந்த அறிவு கொண்டவர் என்று கருதப்படுகிறது.
சிக்ஷா பச்சாவ் அந்தோளன் எனும் அமைப்பினர், இந்தப் புத்தகம் இந்து மத உணர்வுகளைப் புண்படுத்தியுள்ளது என்றும், அதில் பல தவறுகள் உள்ளன என்றும் கூறி வழக்குத் தொடரப்பட்டது. (வ)

## முழு நிலா கருத்தாடல் நிகழ்வு

சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் முழுநிலா கருத்தாடல் நிகழ்வு ஆடியபாதம் வீதியில் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு முன்பாக அமைந்துள்ள செயற்திறன் அரங்க இயக்கத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ்"க்கு முன்னரான அரசியல்நிலைமைஎன்றதலைப்பில் கருத்தாடல்இடம்பெறவுள்ளது.
நிகழ்வின் தொடக்கவுரையை கே.ஏ.சீவரட்ணமும், கருத்துரையை யாழ். பல்கலைக் கழக சிரேஸ்ட விரிவுரையாளர் சோமசுந்தரி கிருஸ்ணகுமாரும் வழங்கவுள்ளனர்.
இறுதியில் கலந்துரையாடல் நடைபெறும் எனவும் இந்த நிகழ்வில் கலை, இலக்கிய ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ-10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகரிக நங்கைகளின் நரித்தனம் மாட்டியது

வலி.வடக்கு, பெப்.13

நவநாகரிக உடை உடுத்து 'ஸ்கூட்டிபெப்' மோட்டார்சைக்கிளில் வந்திறங்கினர் இரு இளம் சிட்டுகள் கடை வாசலில். கடை உரிமையாளர் ஏற இறங்கப் பார்த்தார். இருவரும் கடைக்குச் சென்றனர். இரண்டொரு பொருள்களை அவர்கள் கேட்டனர். உரிமையாளர் அவற்றை எடுக்க உள்ளே சென்றார். அவ்வேளை 'லபக்' கென இரு பெரிய சோடாப் போத்தல்களை எடுத்து மோட்டார் சைக்கிளின் இருக்கையின் கீழ் வைத்து மடக்கி விட்டனர் அந்தப் பெண்கள். ஆனால் இளைஞர் ஒருவரின் கெட்டித்தனத்தால் அவர்கள் இருவரும் மாட்டிக்கொண்டனர். இந்தச் சம்பவம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் முன்பாக உள்ள கடையில் கடந்த திங்கட்கிழமை நண்பகல் நடைபெற்றது.

சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

உரிமையாளர் கடையின் உள் சென்று குறிப்பிட்ட பொருள்களை எடுத்து வர முற்பட்ட வேளையில் கடையின் வெளியே வைக்கப்பட்டிருந்த இரண்டு பெரிய சோடாப் போத்தல்களைத் திருடி மோட்டார் சைக்கிள் இருக்கையின் கீழ் மறைத்து வைத்துள்ளார்கள்.

கடை உரிமையாளர் பெண்கள் கேட்டவற்றைக் கொடுத்து பணத்தைப் பெற்றுக் கொண்டார். அடுத்த கணமே பெண்கள் 'ஸ்கூட்டி'யில் ஏறிக் கிளம்பினர். சம்பவத்தை அவதானித்த இளைஞர் ஒருவர், பெண்கள் சோடாப் போத்தல்களை எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்று கடை உரிமையாளரிடம் தெரிவித்தார்.

அதனையடுத்து பின் தொடர்ந்து சென்ற உரிமையாளர் மோட்டார் சைக்கிளை மறித்து சோதனையிட்ட வேளையில் கடையில் திருடிய சோடாப் போத்தல்கள் இருப்பதைக் கண்டுகொண்டார். மக்கள் கூடிய போதிலும் பெண்கள் என்ற வகையில் அவர்களைக் கடுமையாக பொதுமக்கள் மத்தியில் எச்சரித்த பின்னர் செல்ல அனுமதித்தார்.

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பதை எம்மவர்கள் யதார்த்தமாக நிரூபித்துள்ளார்கள் என்று இளைஞர்கள் முணுமுணுத்தனர். இந்த நடவடிக்கையில் இளைஞன் ஒருவன் ஈடுபட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்...? (வ-86)

## நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள்

யாழ்ப்பாணம்.பெப்.13

யாழ்.குடாநாட்டின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் நோக்குடனும், விவசாயிகளின் பயிர்ச் செய்கையின் உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தியை மேம்படுத்தும் நோக்குடனும் 500 விவசாயிகளுக்குத் தூவல் நீர்ப்பாசனத் தொகுதி மானிய விலையில் வழங்கப்படவுள்ளதாக யாழ்.குடாநாட்டு விதை உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் விவசாயிகளின் பயிர்செய்கையை மேம்படுத்தும் நோக்குடன் 500 விவசாயிகளுக்கு இந்தத் தூவல் நீர்ப்பாசனத் தொகுதி வழங்கப்படவுள்ளது. குடாநாட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் விவசாயக் காணிகளையும் கொண்ட விவசாயிகள் மானிய விலையில் இந்த நீர்ப்பாசனத் தொகுதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொன்றும் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த நீர்ப்பாசனத் தொகுதி விவசாயிகளுக்கு மானிய விலையில் 22 ஆயிரத்து 500 ரூபாவுக்கு வழங்கப்படவுள்ளது. தகுதியுடைய விவசாயிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்.குடா நாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்துடனோ அல்லது அந்தந்தப் பகுதி விவசாயப் போதனாசிரியர் நிலையங்களுடனோ தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்று உரிய காலத்தில் நீர்ப்பாசனத் தொகுதியை பெற்றுக்கொள்ளலாம் - என்றார். (த-14)



**இயந்திரம் மூலம் அறுவடை**

யாழ்ப்பாணம் செம்மணியில் உள்ள வயல்களில் விளைந்த நெல் தற்போது இயந்திரம் மூலம் அறுவடை செய்யப் படுகிறது. இந்த வயல்களில் ஆட்டக்காரி நெல் விதைக்கப் பட்டதாகக் கூறும் செய்கையாளர்கள் இம்முறை நல்ல விளைச்சல் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கின்றனர். (ஓ-51)

## விவசாயிகள் 16 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

யாழ்ப்பாணம்,பெப் .13

நெடுந்தீவு விவசாயிகள் 16 பேருக்கு மானிய அடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்டீன், நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி ஆகியோர் நேற்று முன்தினம் அவற்றை வழங்கினர். நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அப்பகுதி விவசாயிகள் பெருமளவில் கலந்து கொண்டனர். மேலும் பத்து விவசாயிகளுக்கும் மானிய அடிப்படையில் நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

## நிழல் பிரதி இயந்திரம் பாடசாலைக்கு அன்பளிப்பு

தென்மராட்சி, பெப்.13

சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நோர்வே கிளையினர் மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்துக்கு ஒரு லட்சத்து 55 ஆயிரம் ரூபா பெறுமதியான நிழற் பிரதி இயந்திரத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ள னர். பாடசாலை அதிபர் திருமதி ஆ.இராசரத்தினம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் நோர்வே கிளைத் தலைவர் சிவபாலன் நிழல் பிரதி இயந்திரத்தை தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமாரிடம் கையளித்தார். (வ-9)

## வியாபார உரிமத்தை பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம்,பெப் .13

யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட வியாபார நிறுவனங்கள் அனைத்தும் தங்கள் நிறுவனங்களுக்குரிய வியாபாரவரி மற்றும் வியாபார உரிமக் கட்டணம் என்பவற்றை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாநக ரசபை நானாவித இறைவரிப் பகுதியில் செலுத்தி வியாபார உரிமத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

வியாபார உரிமம் பெற்றுக் கொள்ளத் தவறுவோருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் ஏற்கெனவே வியாபார உரிமக்கட்டணம் செலுத்தாதோர் மீது வழக்குத் தாக்கல் செய்து வியாபார வரி அறவிடப்பட்டுள்ளதாகவும் மாநகர சபையின் பிரதம இறைவரிப் பரிசோதகர் கா.ஜெயராஜ சிங்கம் தெரிவித்துள்ளார். (வ-7)

## நெற்செய்கை பாதிப்பு; நட்டஈட்டுப் படிவம் விநியோகம்

தென்மராட்சி, பெப்.13

சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பிற்குட்பட்ட பகுதிகளில் காலபோக நெற் செய்கை பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டுப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் உரிய இழப்பீட்டுப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து வழங்குமாறு அமைப்பின் செயலாளர் ஜீ.கே.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-9)

## நிலுவையை ரத்துச் செய்துவிட்டு மீண்டும் வேலணைக்கு குழாய்நீரை வழங்குங்கள்

### புதிய கட்டணத்தை ஒழுங்காக வழங்குவ்தாக உறுதிமொழி

யாழ்ப்பாணம், பெப்.13

வேலணைப் பிரதேசத்துக்கான குழாய் நீர் விநியோகத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கும் மக்கள் அதற்கான கட்டணத்தை இனி ஒழுங்கான முறையில் செலுத்த முன்வந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வேலணைப் பிரதேசத்துக்கான குழாய் நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் குறித்து தெரிய வருவதாவது:

வேலணைப் பிரதேசத்தில் கடந்த ஒரு மாத காலமாக குழாய் நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. மக்கள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு குடி தண்ணீருக்காக வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை வழங்காததாலேயே நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

இந்த நிலுவைப் பணத்தை வழங்குவதாகவும் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்தை தொடரும்படியும் சிலர் கோரிக்கை விடுத்திருந்த போதும் இதுவரை அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய நிலுவைப் பணம் வழங்கப்படவில்லை எனவும் ரூபா பத்து லட்சம் வரை பொது மக்கள் செலுத்த வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அநேகர் இடம்பெயர்ந்தும் உள்ள நிலையிலும் தற்போதய கஷ்டநிலை காரணமாகவும் பொதுமக்கள் தமது நிலுவைப் பணங்களைச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர் என்றும்-

அதனால் குறிப்பிட்ட நிலுவைத் தொகையை முற்றாக ரத்துச்செய்துவிட்டு நீர்விநியோகத்தை மேற்கொள்ளும் பட்சத்தில் உரிய தொகையைத் தாம் ஒழுங்காகச் செலுத்தத் தயார் என்றும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வேலணை பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான கு.சிவகுலசிங்கம், எஸ்.சிவப்பிரகாசம் ஆகியோர் பொது மக்களுடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுக்களை நடத்தி உரிய தீர்வைக் காண முயற்சிப்பதாக உறுதியளித்துள்ளனர் எனவும் கூறப்பட்டது. (ஓ-7)

## குறைந்த விளைச்சல்; அறுவடை ஆரம்பமானது

தென்மராட்சி,பெப் .13

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு, மறவன்புலோ, நுணாவில், கைதடி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற் செய்கையின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

தாழ்வான பகுதிகளில் ஓரளவு நெல் விளைச்சல் காணப்பட்ட போதிலும் பெரும்பாலான வயல்களில் நெற்கதிர் வெளிவராத நிலையில் பயிர்கள் காய்ந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ந-9)

## மாநகர சபையின் ஒப்பந்தப் பணிகள், சோலை வரி அறவீடு: ச.ச.நிலையங்கள் சம்மதம்

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்.மாநகர சபையால் வழங்கப்படும் ஒப்பந்த வேலைகளை பொறுப்பேற்கவும் சோலைவரி அறவிடுவதற்கான ஒத்துழைப்பை மாநகர சபைக்கு வழங்கவும், மாநகர சபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் சம்மதம் தெரிவித்துள்ளன.

நகர அபிவிருத்தி மாநகர சபையின் வேலைத் திட்டங்களில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பைப் பெறுதல் குறித்த கலந்துரையாடல் திங்கட்கிழமை யாழ்.மாநகர ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தலைமையில் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சுமார் அறுபது சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் வரை கலந்து கொண்டனர்.

இதன்போது மாநகர சபை ஆணையாளர் மற்றும் சனசமூக உத்தியோகத்தர் எஸ்.லோகசிவம் ஆகியோர் கருத்துக்களை முன்வைத்தனர்.

ரூபா 20 லட்சம் வரையானவ் ஒப்பந்த வேலைகளை சனசமூக நிலையங்களிடம் வழங்குவதன் மூலம் அந்தப் பகுதி மக்களின் வசதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றக் கூடியதாக இருக்கும் என்பதுடன் சனசமூக நிலையங்கள் கணிசமான வருமானத்தை பெறவும் முடியும். கட்டுமானப் பணிகளுக்கான உபகரணங்கள் சபையால் வழங்கப்படும். தொழிலாளர்கள் சனசமூக நிலையங்களைச் சேர்ந்த மக்கள் பணியில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும். சோலை வரியை மக்களிடமிருந்து இலகுவாகப் பெறக் கூடியதாக சனசமூக நிலையங்களின் ஒத்துழைப்புக் கிடைத்தால் அதில் பத்து வீதம் சனசமூக நிலையங்கள் பெறக் கூடியதாக இருக்கும். சன சமூக நிலையங்களின் செயற்பாடுகளுக்கு இவை உறு துணையாக இருக்கும் என்பதுடன் வேலைத் திட்டங்களையும் குறுகிய காலத் தில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாகவும் அமையும் என்றனர்.

குறித்த விளக்கங்களை அடுத்து சனசமூக நிலையப் பிரதிநிதி கள், ஒப்பந்த வேலைகள்- சோலை வரி அறவிடல் தொடர்பான விடயங்களுக்கு தமது ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்தனர்.

ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்ளச் சம்மதித்த நிலையங்களும் சோலைவரியைப் பெற உதவ முன்வந்த நிலையங்களும் தமது விவரங்களை மாநகர சபையின் இரு பிரிவுகளிலும் பதிவு செய்து கொள்ளுமாறும் ஆணையாளர் அறிவித்தார். கூட்டத்தில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளுடன் மாநகர சபையின் உறுப்பினர்களும் சபையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்ட னர். (வ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப் பிரச்சினை குறித்து விரைவில் தீர்வு எட்டப்படும்

## பேச்சுக்களின் பின்னர் இந்தியா - சீனா உறுதி

புதுடில்லி, பெப்.13
இந்தியா மற்றும் சீனா இடையே நிலவி வரும் எல்லைப் பிரச்சினை தொடர்பாக விரைவில் தீர்வு எட்டப்படும் என்று இரு நாடுகளும் அறிவித்துள்ளன.
இருநாடுகளுக்கும் இடையே உருவாக்கப்பட்டுள்ள எல்லைப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தை விரைவில் செயற்படுத்துவதே இந்தப் பிரச்சினைக்குரிய சிறந்த தீர்வாக அமையும் என்றும் அவை மேலும் தெரிவித்துள்ளன.
கடந்த இரு நாள்களாகப் புதுடில்லியில் இருநாட்டுச் சிறப்புப் பிரதிநிதிகளுக்கு இடையே நடை பெற்ற 17 சுற்றுப் பேச்சுக்களின் பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. கடந்த 8 ஆண்டுகளாக இருநாடுகளின் எல்லைப் பிரச்சினை தொடர்பான பேச்சுக்க ளில் ஈடுபட்டு வரும் இருநாடுகளின் சிறப்புப் பிரதிநிதிகள் அடங்கிய இந்தச் சிறப்புக் குழு, இருநாடு களுக்கு இடையே நிலவி வரும் எல்லைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருநாடுகளின் எல்லைக் கோடுகள் திட்ட வட்டமாக வரையறை செய்யப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளது.


இந்திய சீன எல்லையில் பாதுகாப்புக் கடமையில் உள்ள இந்தியச் சிப்பாய்

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் சையத் அக்பருதீன்,
"எல்லைப் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் நாள்களில் இரு நாடுகளிடையே ஏற்படுத்தப்பட வேண்டிய நம்பிக்கையைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. அதன்படி கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட எல்லைப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு ஒப்பந்தத்தை விரைவில் செயற்படுத்துவது என்று இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளன" - என்று தெரிவித்துள்ளார். (ற)

## நிர்வாண 'போஸ்' கொடுத்து நரேந்திர மோடிக்கு ஆதரவு

### பொலிவூட் நடிகை அதிரடி

புதுடில்லி, பெப்.13
பொலிவூட் நடிகை ஒருவர் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடிக்கு ஆதரவு தெரிவித்து நிர்வாணப் 'போஸ்' கொடுத்துப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார். பொலிவூட் நடிகையான மேக்னா பட்டேல் என்பவரே இவ்வாறு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.


மேக்னா பட்டேல்

மேக்னா பட்டேல் உடம்பில் துணியே இல்லாமல் நின்று கொண்டு 'நரேந்திர மோடிக்கு வாக்களியுங்கள்' என்ற வாசகம் அடங்கிய அட்டையைக் கையில் பிடித்தவாறு 'போஸ்' கொடுத்துள்ளார். அத்துடன் பா.ஜ.கவின் சின்ன மான தாமரையை தன் உடலில் வைத்துக் கொண்டுள்ள புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார்.
தன்னைப் பிரபல்யப்படுத்தும் நோக்குடனேயே இந்த நடிகை இவ்வாறான பரப்புரையில் இறங்கியுள்ளார் என்று பலரும் விமர்சிக்கின்றனர். பொலிவூட் நடிகையான பூனம் பாண்டே தன்னைப் பிரபல்யப்படுத்துவதற்காக இவ்வாறு அடிக்கடி 'போஸ்' கொடுத்து பரபரப்பை ஏற்படுத்துபவர். அவர் வழியில் தற்போது மேக்னா பட்டேலும் இறங்கியுள்ளார் என்று அவர்கள் கூறுகின்றனர்.
அவர்கள் என்னதான் கூறினாலும் மேக்னா பட்டேலின் பரப்புரைக்கு அமோக ஆதரவு கிட்டியுள்ளதாம். (ற)

## செல்ல நாய் தொலைந்ததால் தீக்குளித்த பெண்

சென்னை, பெப்.13
தான் ஆசையாக வளர்த்து வந்த நாயைக் காணவில்லை என்ற சோகத்தில் தமிழகத்தில் பெண் ஒருவர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
சென்னை கொருக்குபேட்டை ரங்கநாதம் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த சந்திரன் என்பவரது மனைவி ஷர்மிளா. இவருக்கு வயது 35. அவர் வீட்டில் உயர்ரக நாய் ஒன்றை வளர்த்து வந்துள்ளார். அந்த நாய் கடந்த சில நாள்களுக்கு முன்னால் காணாமற்போய் விட்டது. ஆசையாகத் தான் வளர்த்த நாயைக் காணவில்லையே என்ற மன வருத்தத்தில் இருந்துள்ளார் ஷர்மிளா. இந்தநிலையில் நேற்று முன்தினம் வீட்டில் யாருமற்ற நேரத்தில் உடலில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துக் கொண்டார் ஷர்மிளா.
ஷர்மிளாவின் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த அக்கம்பக்கத்தார் உடனடியாக அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் அங்கு ஷர்மிளாவின் உடலைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்று தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
ஷர்மிளாவின் சாவு குறித்துப் பொலிஸாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)


இந்தியாவின் புதுடில்லி நகரத்தில் ஆறாவது இந்தியக் கலைக் கண்காட்சி விமரிசையாக நடத்தப்பட்டுள்ளது. கண்காட்சியில் பல்வேறு கலைஞர்கள் தமது படைப்புக்களைக் காட்சிப்படுத்தியிருந்தனர். (படம் : கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 'உருவகக் கோயில்' என்ற தலைப்பில் சித்தன் உபாத்யாய் என்ற கலைஞரால் உருவாக்கப்பட்ட கலைப் படைப்பு.) (ற)

## இந்தியாவின் மங்கள்யான் நூறாவது நாள் பயணத்தில்

புதுடில்லி, பெப்.13
செவ்வாய்க் கிரகத்தில் உயிரினங்கள் வாழ வாய்ப்புகள் உள்ளனவா என்பதை அறிவதற்காக இந்தியாவால் விண்ணுக்குச் செலுத்தப்பட்ட மங்கள்யான், செவ்வாய்க் கிரகத்தை நோக்கிய தனது பயணத்தில் நூறாவது நாளை நிறைவு செய்துள்ளது.
கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 5 ஆம் திகதி மங்கள்யான் செயற்கைக் கோள் செவ்வாய்க் கிரகத்தை நோக்கிச் செலுத்தப்பட்டது. முதற்கட்டமாக நவம்பர் கடைசி வரை புவியை சுற்றி வந்த மங்கள்யான், படிப்படியாக அதன் தொலைவு அதிகரிக்கப்பட்டு செவ்வாய்க் கோளை நோக்கி அது பயணிக்கும் வகையில் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டதுடன், செவ்வாய்க் கிரகத்தை நோக்கி அதன் பயணப் பாதை மாற்றப்பட்டது. அந்தச் செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தப்பட்டு நேற்றோடு நூறு நாள்களையும் நிறைவு செய்துள்ளது. தற்போதைய நிலைவரப்படி பூமியில் இருந்து சுமார் 190 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவில் பயணித்துக் கொண்டிருக்கும் மங்கள்யான், திட்டமிட்டபடி அடுத்து வரும் 210 நாள்களுக்குள் 490 மில்லியன் கிலோ மீற்றர் தொலைவைக் கடந்து எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி செவ்வாய்க் கிரகத்தின் சுற்றுவட்டப் பாதைக்குள் பிரவேசிக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (ற)

## மம்தாவுக்கே ஆதரவு- ஹசாரே

புதுடில்லி, பெப்.13
மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி எளிமையானவர். அவருக்கு ஆதரவு வழங்குவேன் என்று தெரிவித்துள்ளார் அன்னா ஹசாரே.
புதுடில்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அரசிடம் சொகுசு வீடு வழங்குமாறு கேட்டார் என்று அண்மையில் வெளியான தகவல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## விஜயகாந்த் டில்லி செல்வதால் கூட்டணி என்று கூறமுடியாது

### நாராயணசாமி கூறுகின்றார்

சென்னை, பெப்.13
தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் புதுடில்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திப்பதால் அவர்களுடன் காங்கிரஸ் தேர்தல் கூட்டணி அமைத்துள்ளது என்று உறுதியாகக் கூற முடியாது என்று தெரிவித்துள்ளார் மத்திய அமைச்சர் நாராயணசாமி.


மத்திய அமைச்சர் நாராயணசாமி

புதுடில்லியில் இருந்து சென்னை திரும்பிய மத்திய அமைச்சர் நாரா யணசாமி, சென்னை விமான நிலையத்தில் ஊடக வியலாளர் களிடம் கருத்துத் தெரிவித்தார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் கூறுகையில், "தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் பிரதமரைச் சந்திக்கப் புதுடில்லி செல்வதால் அவர்களுடன் கூட்டணி உறுதி என்று கூற முடியாது. கூட்டணி குறித்து காங்கிரஸ் மேலிடம் தான் அறிவிக்கும். சோனியா காந்தியே முறைப்படி கூட்டணி குறித்து அறிவிப்பார்.
காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் வளர்ச்சி எதுவும் இல்லை என்று மோடி கூறி வருகிறார். பொருளாதாரத்தைப் பற்றி மோடிக்கு தெரியாது. அவர் தவறான கருத்துக்களைக் கூறி வருகிறார். குரலை உயர்த்திப் பேசினால் மக்கள் நம்பி விடு வார்கள் என நினைக்கிறார். அவர் வெறும் வாய்ச் சவடால் வீரர்.
இதுபோன்றுதான் 2009ஆம் ஆண்டும் பரப்புரை செய்தனர். ஆனால் மக்கள் அதை நம்பாமல் 2004 ஆம் ஆண்டை விட அதிக இடங்களில் காங்கிரஸ் கூட்டணியை வெற்றி பெறச் செய்தனர். அதுபோன்றுதான் 2014 ஆம் ஆண்டிலும் நடக்க உள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)



# திருமஞ்சத் திருவிழா
சங்கானை நிகரை ஞான வைரவர் கோயில்
வருடாந்த உற்சவ திருமஞ்சத் திருவிழா
நாளை (14.02.2014) வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணிக்கு ஸ்நபன அபிஷேகம்
நடைபெற்று பகல் ஒரு மணியளவில் அன்னதானம்
(மகேஸ்வர பூசை) இடம்பெறும்.
அதைத்தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு
வசந்தமண்டப பூசை ஆரம்பமாகி
நாதஸ்வர மேதைகள் சிவகுமார் குழுவினரும் மற்றும் கோவிந்தசாமி குழுவினரும் கான மழை பொழிய, தென்னிலங்கை குழுவினரும், அளவையூர் குழுவினரும் இணைந்து
வாண வேடிக்கை முழங்க, வல்வையூரான் குழுவினரின்
இராட்சத வெளிச்ச கூடுகளும் விண்ணில் ஏவப்படும் காட்சியுடன்
மின்ஒளியினால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் வீதி உலாவரும்
அரும் பெரும் காட்சி இடம்பெறும்.
அடியார்கள் அனைவரும் இஷ்ட சித்திகளைப்
பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறார்கள்.
நிகரை வீதி, சங்கானை.
10 ஆந் திருவிழா உபயகாரர்கள்.

## விற்பனைக்கு
Nikon D 80 பற்றரி Charger body மாத்திரம், லென்ஸ் இல்லை தனியார் பாவனைக்கு மாத்திரம். UK Model நல்ல நிலையில் உள்ளது.
Rs. 23000.00 Fixed Price
இடம்: கனகரத்தினம் வீதி,
அரியாலை.
077 033 8250 (சி/12038)(7.6)

## வீடு விற்பனைக்கு
அளவெட்டி கிழக்கு, பக்தர்கடவை கனேஸ்வரத்தில் 2½ பரப்புக் காணியுடன் சகல வசதியுடைய வீடு (சசி வாச) விற்பனைக்குண்டு. (2200000)
தொடர்பு: 077 622 0670 (44647)(7.6)

## வீடு காணி விற்பனைக்கு
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி நுணாவில் சந்தி - பருத்தித்துறை றோட்டில் 17 பரப்புக் காணி விசாலமான வீட்டுடன் விற்பனைக்குண்டு. காணி வாங்குபவருக்கு உகந்ததாக பிரித்தும் விற்கப்படும். (நுணாவில் சந்தியில் இருந்து 1 Km) தொடர்பு: S.பத்மநாதன் -021 205 7581

## தேவை
அலுவலகம் ஒன்றில் பணிபுரிவதற்கு A/L படித்த பெண் பிள்ளைகள் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை. (44644)(7.6)
தொடர்பு: 077 762 4526



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவில் பனிப்பொழிவு: இயல்புநிலை பாதிப்பு

பீஜிங், பெப்.13
சீனாவில் ஏற்பட்டுள்ள கடும் பனிப் பொழிவு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
பனிப்பொழிவால் சீனாவின் உயரமான சிகரமாகக் கருதப் படும் பகுதியிலுள்ள லிவ் கோங்க்போ குடியிருப்புதான் அதிக பாதிப்புக்கு உள்ளாகியுள் ளது என்று கூறப்படுகின்றது.
பனிப் பொழிவு காரணமாக தண்ணீர் மற்றும் மின்சார விநியோகம் பல இடங்களில் தடைப்பட்டுள்ளது. இந்த மலைப் பகுதியில் உள்ள மக் கள் இரண்டு முக்கிய நீரா தாரங்களை நம்பியே உள்ள னர். ஆனால் அந்த நீர்நிலை கள் கடும் பனிப்பொழிவால் உறைந்துவிட்டன என்று கூறப்படுகின்றது. அதனால் விவசாயப் பணிகள் பெருமள வில் பாதிக்கப்பட்டுள்ளனது டன், அந்தப் பகுதியில் குடி தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (ற)

# அல்ஜீரிய விமான விபத்தில் 77 பேர் பரிதாபமாகச் சாவு

### தெய்வாதீனமாக உயிர் தப்பினார் ஒருவர்


விபத்துக்குள்ளான விமானம்

அவும் எல் பவுகி, பெப்.13
அல்ஜீரியாவில் இராணுவ விமானம் ஒன்று விபத்துக் குள்ளாகியதில் 77 பேர் உயிரி ழந்துள்ளனர். ஒருவர் படுகாயங் களுடன் உயிர்தப்பியுள்ளார்.
சி-130 ரக விமானத்தில் இரா ணுவத்தினர் மற்றும் அவர் களது குடும்பத்தினர் பயணம் மேற்கொண்டிருந்தனர். அந்த விமானம் அவும் எல் பவுகி என்னும் இடத்துக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்தபோது, கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்புகளை இழந்தது.
அதையடுத்து அந்தப் பகுதியில் நடத்தப்பட்ட தேடுதலில் விமா னம் மலையில் மோதி நொருங் கியமை கண்டுபிடிக்கப்பட்டது.
குறித்த விமானத்தில் 78 பேர் பயணம் மேற்கொண்டிருந்த னர். அவர்களில் ஒருவர் மட் டுமே காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.
தற்போது மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின் றன. விபத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், அது குறித்த விசா ரணைகள் முடுக்கிவிடப்பட்டுள் ளன என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.
இதேவேளை, உயிரிழந்தவர் களை நினைவு கூர்ந்து அந்த நாட்டில் மூன்று தினங்களுக்கு துக்கதினம் கடைப்பிடிக்கப்பட வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. (ற)

# உக்ரைனுக்கு எதிராக பொருளாதார தடைகள்

### எச்சரிக்கின்றது ஐரோப்பிய ஒன்றியம்


அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடும் உக்ரைன் மக்கள்

நியூயோர்க், பெப்.13
உக்ரைனில அரசுக்கு எதி ரான போராட்டங்கள் தொட ரும் பட்சத்தில் அந்நாட்டுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை கள் விதிப்பது குறித்துப் பரி சீலிக்கப்படும் என்று எச்சரித் துள்ளது ஐரோப்பிய ஒன்றியம்.
பெல்ஜியத்தில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றியக் கூட்டத் திலேயே இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளது.
"நாட்டில் நிகழும் வன்முறை களை முடிவுக்கு கொண்டு வந்து, மக்களுக்கு எதிராக வன்முறைகளை தூண்டுப வர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும்" என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலி யுறுத்தியுள்ளது.
உக்ரைனில் ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தக ஒப்பந்தம் இரத்துச் செய்யப் பட்டதைத் தொடர்ந்து போராட் டங்கள் வெடித்தன. சில மாதங்களாக நடைபெற்று வரும் இந்தப் போராட்டங்க ளில் இதுவரை 6 பேர் உயிரி ழந்துள்ளனர். அந்நாட்டு ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபடுவோர் கோரி வருகின்றனர். (ற)


எதிர்வரும் ஏப்ரல் மாதம் இந்தோனேஷிய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தநிலையில் பொதுத் தேர்த லில் வன்முறைகள் ஏற்பட்டால் அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பயிற்சிகள் இந்தோனேஷியப் பொலிஸாருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. (படம்: அந்நாட்டுத் தலைநகர் ஜகார்த்தாவில் மாதிரி கலவரக் கும்பல் ஒன்றைக் கலைக்கும் பயிற்சியில் ஈடுபடும் பொலிஸார்.) (ற)

## பிரான்ஸ் ஜனாதிபதி அமெ. பயணம்

நியூயோர்க், பெப்.13
பிரான்ஸ் ஜனாதிபதி பிரன் சுவா ஒலாண்ட் அமெரிக்கா வுக்கு உத்தியோகபூர்வ பய ணத்தை மேற்கொண்டுள்ளார்.
ஈரான் விவகாரம், வர்த்தகம் மற்றும் காலநிலை மாற்றம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன், அவர் இந்தப் பயணத்தின்போது கலந்துரையாடியுள்ளார்.
சர்வதேச ஒத்துழைப்பின் முன்மாதிரியாக இரு தரப்பு பங்களிப்பை மேம்படுத்துவ தற்கு இரண்டு நாட்டுத் தலை வர்களும் இதன்போது இணக் கம் தெரிவித்துள்ளனர். அதே வேளை பிரான்ஸ் மற்றும் அமெரிக்க அரச தலைவர்கள் நேற்றைய தினம் இரவுநேர விருந்து உபசாரத்திலும் கலந்து கொண்டனர். (ற)

## குட்டை பாவாடைக்கு பிரிட்டனில் தடை


கோப்புப் படம்


லண்டன், பெப்.13
பிரிட்டனில் உள்ள பாடசாலை ஒன்று, மாணவிகள் குட்டைப் பாவடை அணிவதற்குத் தடை விதிக்கப்போவதாக அறிவித் துள்ளது. பிரிட்டனின் நார் போக்கில் உள்ள உயர்நிலைப் பாடசாலை ஒன்றே இந்த அதிரடி முடிவை எடுத் துள்ளது.
பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகள் எதிர்வரும் செப் ரெம்பர் மாதம் முதல் குட்டைப் பாவடை அணிந்து வகுப்புக்க ளுக்கு வரமுடியாது என்று அறி வித்துள்ள அந்தப் பாடசாலை யில் கற்கும் 7 முதல் 11 வயது வரை உள்ள சிறுமிகள் மேக்கப் போடுவதற்கும் தடை விதிக்கப் படும் என்று தெரிவித்துள்ளது.
அனுமதிக்கப்பட்ட அளவை விடவும் தற்போது மிகக் குறைந்த அளவில் மாணவி கள் ஆடை அணிந்து வருவதே தமது இந்த முடிவுக்குக் கார ணம் என்றும் பாடசாலை நிர்வாகம் விளக்கமளித்துள் ளது. (ற)

# உலக சாதனை படைக்கும் குடும்பம்



லண்டன், பெப்.13
பிரிட்டனைச் சேர்ந்த குடும்பம் ஒன்று உலக சாதனை படைத்துள்ளது.
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 சகோத ரர்களின் வயதுக் கூட்டுத்தொகை 855 வருடங்கள். இந்தக் குடும்பம் உலகத்தின் மூத்த குடும்பம் எனக் கின்னஸ் குழு அறிவித்துள்ளது.
பிரிட்டனின் மிடில்ஸ்பிரக் நகரில் வசித்து வரும் 68 முதல் 89 வயது வரையுள்ள புருட்நெல் சகோதரர்கள் தான் இந்தச் சாதனைக்கு சொந்தக்காரர்கள்.
ரோபர்ட் (68), ஜோன் (69), ஜீன் (71), மேரி யன் (74), ஜேம்ஸ் (76), வின்சென்ட் (78), மே (79), மேரி (80), வின்பிரெட் (83), வில்லியம் (88) மற்றும் பெர்னாடெட்டி (89) ஆகிய இந்தச் சகோதர-சகோதரிகள் சிறு வயதில் இருந்ததைப் போலவே இப் போதும் இணைந்திருக்கிறார்கள்.
இதுபோன்று அதிக வயதுள்ள சகோதரர் கள் கொண்ட எந்த ஒரு குடும்பம் பற்றிய தகவலும் இதுவரை வெளிவரவில்லை என்று கின்னஸ் உலக சாதனைக் குழு அறிவித்துள்ளது.
இதற்கு முந்தைய சாதனையாக, 9 சகோ தரர்களின் வயதுக் கூட்டுத்தொகை 828 ஆண்டுகளாக இருந்தது. எனவே, இந்தச் சாதனையை முறியடிக்க தகுதி பெற்றுள்ள புருட்நெல் குடும்பம், கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற விண்ணப்பிக்க லாம் என்று கின்னஸ் குழு தெரிவித்துள் ளது. (ற)

# அதி நவீன ஏவுகணையை சோதனை செய்தது ஈரான்


வெற்றிகரமாக சோதனை செய்யப்படும் ஏவுகணை

தெஹ்ரான், பெப்.13
கண்டம் விட்டு கண்டம் சென்று குறித்த இலக்கைத் தாக்கும் இரண்டு ஏவுகணைகளை ஈரான் வெற்றி கரமாக சோதனை செய் துள்ளது.
இந்த ஏவுகணைகள் 2 ஆயி ரம் கிலோ மீற்றர் தொலை வுக்கு அப்பால் உள்ள இலக்கு [illegible] கொண் டவை என்று கூறப்படுகின் றது. அவற்றில் ஒரு ஏவுகணை தரையில் இருந்து தரையில் உள்ள இலக்கை தாக்கக்கூடி யது என்றும் மற்றையது விமா னத்தில் இருந்து மற்றொரு விமானத்தைத் தாக்கக்கூடியது என்றும் கூறப்படுகின்றது. அத்து டன் குறித்த ஏவுகணைகள் ரேடர் திரைகளில் தெரியாத வண்ணம் பயணிக்கும் வகை யில் நவீனமாக வடிவமைக் கப்பட்டுள்ளன என்றும் மேலும் கூறப்படுகின்றது. (ற)

## பிரிட்டன் பிரதமரின் பயணம் இரத்து

லண்டன், பெப்.13
பிரிட்டனின் பல பகுதிகள் வெள் ளப்பெருக்கில் சிக்கியுள்ள நிலையில் அந்த நாட்டு பிரத மர் டேவிட் கமரூன் மத்திய கிழக்கு நாடுகளுக்கான தனது பயணத்தை இரத்துச் செய்துள் ளார்.
தென் மேற்கு பிரிட்டனில் வெள் ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி களை நேரில் பார்வையிட்ட கமரூன், பாதிக்கப்பட்ட பகுதி களில் மீட்புப் பணிகளை மேற் கொள்ள அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள் ளும் என உறுதி அளித்துள் ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐஸ் தொழிற்சாலைக்கு மின்சார விநியோகம்

## முல்லைத்தீவில் வைபவரீதியாக வழங்கப்பட்டது

முல்லைத்தீவு, பெப்.13

முல்லைத்தீவில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலைக்கு வைபவரீதியாக மின்சார விநியோகம் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் 11 ஆம் திகதி ஐ.நா. உதவிச் செயலாளர் கோலிங் சூ ஐஸ் தொழிற்சாலைக்கான மின்சார விநியோகத்தை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

முல்லைத்தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் எஸ்.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வு, கள்ளப்பாடு கிராமத்தில் அமைந்துள்ள ஐஸ் தொழிற்சாலையில் இடம் பெற்றது.



ஐ.நா. உதவிச் செயலாளர் கோலிங் சூ மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைக்கின்றார்.

இதில் முதன்மை விருந்தினராக் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கருத்துத் தெரிவிக்கையில்:

முல்லைத்தீவில் 26 கடற்றொழிலாளர் சங்கங்கள் அமைந்துள்ளன. இந்தச் சங்கங்களில் அங்கம் வகிக்கும் கொக்கிளாய் தொடக்கம் சுண்டிக்குளம் வரையில் வசிக்கும் 5ஆயிரம் மீனவக் குடும்பங்கள் கடலில் தம்மால் பிடிக்கப்படும் மீன்களை குளிர வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்வதற்குரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யூ.என்.டி.பி. நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர், அந்த நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் கணேசராஜா ஆகியோரும், பொது மக்கள் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)

# பறங்கி ஆற்றின் மணல் வெளி மாவட்டங்களுக்கு

## மாந்தை கிழக்கு மக்கள் முறைப்பாடு

மாந்தை, பெப்.13

மாந்தை. கிழக்கில் அமைந்துள்ள ஆற்றிலிருந்து மணல் களவாக அகழ்ந்தெடுக்கப்பட்டு வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்படுவதாக மக்கள் பிரதிநிதிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக்கிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் வைத்து இம் முறைப்பாடு தெரிவிக்கப் பட்டுள்ளது.

வீட்டுத்திட்டம் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு மணலைப் பெறுவதால் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் பறங்கியாற்றிலிருந்து மணல் களவாக அகழ்ந்தெடுக்கப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு எவ்வாறு எடுத்துச் செல்லப்படுகின்றது எனவும் மக்கள் அங்கு குரல் எழுப்பினர்.

இதனைத் தடுப்பதற்கு இறுக்கமான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலருக்குத் தெரியாமலேயே களவாக மணல்கொண்டு செல்லப்படுவதாகவும் மக்களால் தெரிவிக்கப்பட்டது. (க-18)

# நொச்சிமோட்டைப் பகுதியில் போக்குவரத்துச் சிரமங்கள்

## பாலம் பழுதடைந்துள்ளதால்

வவுனியா, பெப்.13

வவுனியா, நொச்சிமோட்டைப் பாலம் பழுதான நிலையில் காணப்படுவதால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தினமும் ஆயிரக் கணக்கான பயணிகள் பயன்படுத்தும் இந்தப் பாலம் வவுனியா நகரில் இருந்து சுமார் எட்டுக் கிலோ மீற்றருக்கு அப்பால் ஏ-9 வீதியில் அமைந்துள்ளது. இந்தப் பாலத்தின் ஒரு பகுதி உடைந்துள்ளது. இதனால் ஒருவழிப் போக்குவரத்தையே மேற்கொள்ள முடிகின்றது. இதனால் இரவு வேளைகளில் வரும் வாகனங்கள் விபத்துகளைச் சந்திக்கும் அபாயம் உள்ளது.

இந்தப் பாலம் ஏற்கெனவே நான்குதடவைகள் பழுதடைந்து புனரமைக்கப்பட்டது. தற்போது ஐந்தாவது தடவை யாகவும் பழுதடைந்துள்ளது.

எனவே இனியும் தாமதிக்காது இந்தப் பாலத்தைப் புனரமைக்குமாறு பல்வேறு தரப்பினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-402)

# குரங்குகளின் கொட்டத்தால் பெரு நாசம்

வவுனியாவில் குரங்குகளின் அட்டகாசம் தொடர்கின்றது. வவுனியா நகரில் பூந்தோட்டம், குருமன்காடு, வைரவப்புளியங்குளம், பார்வீதி, முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருக்கள், பட்டாணிச்சூர், நெளுக்குளம், குட்செட் வீதி உட்பட பல்வேறு இடங்களிலும் குரங்குகளின் அட்டகாசம் தொடர்கின்றது.

வீடுகள், அரச விடுதிகள், பாடசாலை ஆகியவற்றுக்குள் நுழையும் குரங்குகள் பொதுமக்களைக் கடித்து வருகின்றன. இதுவரை ஏழு போர் குரங்குகளால் கடியுண்டுள்ளனர்.

இவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இதேவேளை இந்தக் குரங்குகள் பாடசாலைக் கூரைகளையும் சேதப்படுத்தி வருகின்றன. வவுனியா பட்டாணிச்சூர் முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் கூரை குரங்குகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டமாக வரும் குரங்குகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் பொதுமக்கள் அச்சத்துடன் வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது.

(க-402)

# மலக் கழிவு கொட்டப்பட்டதால் மக்களுக்கு அசௌகரியம்


## முள்ளியவளை கயட்டைக் காட்டுப் பகுதியில்

முள்ளியவளை, பெப்.13

முள்ளியவளை கயட்டைக் காட்டுப் பகுதியில் உள்ள மக்கள் குடியிருப்புக்கு அருகில் மலக் கழிவுகள் கொட்டப்பட்டதால் இந்தப் பகுதி மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணி யளவில் தமது முகங்களைத் துண்டுகளால் உருமறைப்புச் செய்தவாறு வந்த இனம் தெரியாதவர்கள் வாகனத்தில் எடுத்து வந்த மலக் கழிவு களைக் கொட்டி விட்டுச் சென்றுள்ளனர். இதனால் இந்தப் பகுதியில் இரவு முழுவதும் துர்நாற்றம் வீசியபடி இருந்தது.

இந்தப் பகுதி மக்கள் உணவை உட் கொள்ள முடியாத நிலை காணப் படுகின்றது. இது தொடர்பாக உடனடியாக கிராம உத்தியோகத்தருக்கும், பிரதேச சுகாதாரப் பரிசோதகருக்கும் அறிவிக்கப் பட்டது. இந்தப்பகுதியில் இறைச் சிக்காக மாடுகளை வெட்டும் பிரதேச சபைக்குரிய கொல் களமும் காணப்படுகின்றது. மாடுகளின் தோல், கால், கழிவுகள் என்பன நாய்களால் வீடுகளுக்கு இழுத்து வரப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் அவசர வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-433)



ஒட்டுசுட்டான் பால் உற்பத்தியாளர் சங்கத்தினரால் சமளங்குளம் கிராமத்தில் பால் சேகரிக்கும் நடவடிக்கைகள் மில்கோ நிறுவனத்தின் பண்ணைப் போதனாசிரியரும், வெளிக்கள உத்தியோகத்தருமான வி.தயாபரன் தலைமையில் இடம்பெற்றது. பால் சேகரிக்கும் நடவடிக்கையை சமளங்குளம் கிராம அலுவலர் திருமதி மேகலா ஆரம்பித்து வைக்க அருகில் வி.தயாபரன், பால் பண்ணையாளர் மகேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

# இளைஞர் கழகங்களின் புதிய நிர்வாகம் தெரிவு

## வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில்

வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான புதிய நிர்வாகத் தெரிவு நேற்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இளைஞர் நாடாளுமன்றத்தின் வவுனியா மாவட்டப் பிரதிநிதியும், பிரதிப் பிரதமருமான ரஜீவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா வடக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள 20 இளைஞர் கழகங்களின் நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

இங்கு வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன் உரையாற்றுகையில்;

இளைஞர்கள் வருங்காலத்தின் சிற்பிகள். இவர்களில் நல்ல இளைஞர்கள் ஏராளமாக இருக்கின்றனர். எனினும் ஒரு சில தீய சிந்தனையுள்ள இளைஞர்களால் இளைஞர்கள் சகலருக்கும் கெட்ட பெயர் கிடைக்கின்றது.

இளைஞர்கள் பெரியவர்களுக்கு மதிப்பளிக்கக் கடமைப் பட்டவர்கள்

இளைஞர்களாகிய நீங்கள் சவால்களை கையில் எடுக்க வேண்டும். இளைஞர் கழகத்தில் நான் இருந்தமையினாலேயே இன்று பிரதேச செயலராக இருக்கின்றேன். அதன் மூலம் பெறப்பட்ட தலைமைத்துவம் எனக்கு மிகவும் பயனாகவுள்ளது. எனவே இளைஞர்கள் இளைஞர் கழகங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் வவுனியா மாவட்ட உதவி பணிப்பாளர் எஸ். எம். எஸ். செனவிரத்ன, மாவட்டச் சம்மேளனத் தலைவர் ரி. அமுதராஜ், நிஸ்கோ மாவட்ட முகாமையாளர் ஜி. ஏ. சந்திரசேன ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

# யானைகளின் அட்டகாசத்தால் அச்சநிலை

வவுனியா இளமருதங்குளம் பகுதியில் யானைகளின் அட்டகாசத்தால் அச்சமடைந்த அந்தப் பகுதியில் உள்ள சிலர் இடம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்த யானைகள் வீடுகள், கடைகளை உடைப்பதுடன் விவசாயிகளின் விவசாயப் பயிர்க்ளையும் நாசம் செய்து வருகின்றன.

இளமருதங்குளத்தைச் சேர்ந்த ஒருவர் யானையால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டுவரப் பட்டதை அடுத்து பொலிஸார் யானைகளைவிரட்ட வெடிகளை வழங்கியுள்ளனர். (க-402)

# மாணவருக்கான உணவு விநியோகத்தில் சிரமப்படும் பாடசாலை அதிபர்கள்

பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் வழங்கப்படும் உணவைச் சமைத்து விநியோகிப்பதில் வவுனியாவிலுள்ள பாடசாலை அதிபர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக் குரிய உணவைத்தயாரிப்பதற்கு சமையலாட்களை வேலைக்கு அமர்த்த முடியாதநிலைகாணப்படுகின்றது.

மேலும் இந்த வேலைகளுக்கு மாணவர்களின் பெற்றோர்களை ஈடுபடுத்துவதிலும் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கான விறகைப் பெற்றுக் கொள்வதிலும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் மரக்கறி விலைகளைக் கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவுகள் ஒழுங்காக வழங்கப்படாமையால் பாடசாலை அதிபர்கள் தமது சொந்தப் பணத்தைச் செலவழித்து வருகின்றனர். சில பாடசாலைகளில் பாட சாலை அபிவிருத்திச் சங்கத் தினர் மரக்கறிகளுக்கான கொடுப்பனவை வழங்குகின்ற போதிலும் பெரும்பாலும் மரக்கறிக் கொள்வனவுக்கான கொடுப் பனவுகளை அதிபர்களே வழங்கி வருகின்றனர்.

இதேவேளை கடனுக்கு மரக்கறிகளைக் கொள்வனவு செய்த அதிபர்கள் சிலர் அவற்றுக்கான பணத்தை வழங்க முடியாத நிலையில் தொல்லைகளை அனுபவித்து வருகின்றனர். இதனால் இத்தகைய பாடசாலைகளில் உணவு விநியோகத்தை இடைநிறுத்த வேண்டி நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஏழை மாணவர்களே பாதிக்கப்படு வார்கள்.

எனவே மரக்கறிக் கொள்வனவுக்கான கொடுப்பனவுகளை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் அதிப[illegible] கோரிக்கை விடுத்[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன ரீதியான நியமனத்தால் சிறுபான்மையினருக்கு அநீதி


## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,பெப்.13
கிழக்கு மாகாணத்தில் திறமையின் அடிப்படையில் அல்லாமல் இன ரீதியான விகிதாசார அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர் நியமனங்களை வழங்க முயன்றதால் தமிழ், முஸ்லிம் விண்ணப்பதாரிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் மாகாணத்தில் வெற்றிடமாகவிருந்த முகாமைத்துவ உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் , நேர்முகத் தேர்வு. நியமனம் வழங்கலில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று தமிழ் விண்ணப்பதாரி ஒருவரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



பூ.பிரசாந்தன்

இன விகிதாசார பின்பற்றலானது, புதிதாக மேற்கொள்ளப்படுகின்ற முகாமைத்துவ உதவியாளர் நியமனத்தை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில் நியமனம் பெற்ற ஒட்டு மொத்த முகாமைத்துவ உதவியா ளர்களையும் கவனத்தில் கொண்டு விகிதாசாரப்படி கிழக்கு மாகாணத்தில் சிங்கள அரச சேவை உத்தியோகத்தர்கள் போதிய அளவுக்குச் சேவையில் இல்லை என்ற அடிப்படையில் இந்தப் புதிய நியமன வழங்கல்களில் அவர் களுக்கு முன்னுரிமை வழங் கப்பட்டது.

அதனால் திறமையாக சித்தி எய்திய தமிழ், முஸ்லிம் விண்ணப்பதாரிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் பணியாளர்களை இணைத்துக் கொள்ளும் போது கிழக்கு மாகாணத்தில் பின்பற்றப்படுகின்ற இனவிகிதாசார முறைமையானது கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தாமல் அதனை தேசிய ரீதியான கொள்கையோடு மாற்றி அரச சேவையில் விண்ணப்பதாரிகளாக இணைத்துக் கொள்ள அரசு முன்வரவேண்டும்.

எனவே அரசியல் இலாபங்களுக்கு அப்பால் கிழக்கு மாகாண இன நல்லிணக்கத்தை சீர்குலைக்காமல் அதனை பாதுகாத்து செயற்பட முன்வர வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## நகரசபை தலைவர் தாய்லாந்து பயணம்



ஹில்மி மஹ்ரூப்

மட்டக்களப்பு,பெப்.13
தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெறவிருக்கும் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோரம் பேணல் சம்பந்தமான ஒருவார கால விசேட கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கென கிண்ணியா நகர சபைத் தலைவர் ஹில்மி மஹ்ரூப் தாய்லாந்து பயணமானார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சின் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோரம் பேணல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழிப்புணர்வு செயற்றிட்டத்தில் கலந்து கொள்வதற்காக மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் சந்தன உட்பட மேலும் பலர் தாய்லாந்துக்கு சென்றுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கரையோர பாதுகாப்பு சம்பந்தமான விசேட அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள் ளனர். (ச)

## அணை கட்டும் நடவடிக்கையில் ரொட்டவெவ விவசாயிகள்

திருகோணமலை,ஹொரவப்பொத்தான பிரதான வீதியினூடாக புல்மோட்டை கடலுக்கு செல்லும் யான் ஓயா ஆற்றை மறித்து அணைக்கட்டு அமைக்கும்நடவடிக்கையில் ரொட்டவெவ, எத்தாபெந்திவெவ, விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கடும் வறட்சியால் விவசாயச் செய்கையில் நட்டம் ஏற்பட்டதனால் விவசாயிகள் ஒன்றிணைந்து வீணாக கடலுக்குச் செல்லும் நீரைக் குளங்களுக்குத் திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத் திட்டத்தை பார்வையிடுவதற்கு பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே அணைக்கட்டு அமைக்கும் பகுதிக்கு சென்று பார்வையிட்டதுடன் நீர்ப்பாசன திணைக்கள பொறியியலாளரிடம் இது தொடர்பாக தமக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார். (ச)



திருகோணமலை, அன்புவழிபுரம் கலைமகள் மகாவித்தியாலய சமூகம் செவ்வாய்க்கிழமை திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து டெங்கு நோய் விழிப்புணர்வு ஊர்வலத்தை நடத்தியுள்ளது.

இந்த ஊர்வலத்தில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பழைய மாணவர்கள், சிவில் பாதுகாப்புக் குழுவினர், பொது சுகாதார பரிசோதகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-40)

## மின்பாவனை குறித்துச் செயலமர்வு

கல்முனை,பெப்.13
கல்முனைப் பிரதேச செயலகத்தில் 'சிக்கனமாக மின்சார பாவனை' என்ற தொனிப்பொருளிலான செயலமர்வு இடம்பெற்றது. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தச் செயலமர்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எம். எம். மனாஸ், திட்டமிடல் சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.எம்.அஸ்ஹர், அபி விருத்தி ஒருங்கிணைப்பாளர் கே. எல். யாசின் பாவா உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-10)


7ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்
35ஆம் ஆண்டு பிறந்தநாள் வாழ்த்தும்

அமரர்
நவரட்ணம் மனோராஜ் (ராஜ்)

மண்ணில்
13*02*1979

விண்ணில்
05*01*2007



ஆயிரம் ஆயிரம் உறவுகள் எம்மோடு இருந்தாலும்
தம்மைப்போல் இனிதொன்று காணோம்
அன்பில் அன்னையாய் அறிவில் ஆதவனாய்
எமக்கு கிடைத்த அரும் பொக்கிஷம் நீர்
இனிமையான குணமும், நியாயமான பேச்சும்
எதற்கும் அஞ்சா நெஞ்சமும்
அனைவருக்கும் உதவிட முன்நிற்கும் கால்களும்
வான்நோக்கி சென்றதேனோ! காலம் தான் விரைந்ததோ!
இல்லை காலனவன் விளையாடினானோ!
எண்ணற்ற கனவுகள் கண்டோம் நீர் எம்மோடு வாழ
உம் நினைவில் தவிக்கும் எம்மைவிட்டு
இறைவனின் குரல்கேட்டு சென்றுவிட்டீரோ
தாம் மறைந்தாலும் தம் நினைவில் நாம் என்றும்
உம்மோடு வாழ்கின்றோம்
ஏன் எங்களை விட்டு சென்றுவிட்டீர்
விடைகேட்டு தவிக்கின்றோம்!

*உங்கள் துயரத்தில் வாழும்*
குடும்பத்தினர்.

இல.38, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்,யாழ்ப்பாணம்.

(44631) (7.6.3)



31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி இரத்தினம் நடராசா
(ரத்தினக்கா)

மலர்வு
11.01.1933

உதிர்வு
14.01.2014



கடந்த 14.01.2014 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி இரத்தினம் நடராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.02.2014) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னராது இல்லத்தில் இடம்பெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுவதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது பிரிவுச்செய்தி கேட்டு உடன் வந்தும் அனுதாபச் செய்திகள் ஊடாகவும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும், அன்னாரது இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்

அம்பனை,
சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்.

(44465)(45.3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான்கு நாள் பயணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை வந்துள்ள ஐ.நா.உதவிச் செயலாளர் நாயகமும் ஆசிய பிராந்தியத்துக்கான ஐ.நா.அபி விருத்தித் திட்டப் பணிப்பாளருமான ஹவுலியாங் யூ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். (வ)

# வேட்பாளர் விதிமுறைகளை மீறினால் வாக்களிக்காதீர்

## *அமைச்சர் டலஸ் வேண்டுகோள்*

கொழும்பு, பெப்.13

சொத்து விவரங்களை வெளியிடாத தேர்தல் விதிமுறைகளை மீறுகின்ற வேட்பாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக இருந்தாலும் அவர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலை உட்பட நெடுஞ்சாலைகளில் வேட்பாளர்களின் பெயர்கள், இலக்கங்களை எழுதி பரப்புரை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.



*அமைச்சர் டலஸ் அழகப்பெரும*

தேர்தலில் வெற்றி பெறவேண்டும் என்ற நோக்கத்துக்காக வீதியின் சூழலின் அழகை இல்லா தொழிக்க வேண்டாம் என்று அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து போட்டியிடும் சகல வேட்பாளர்களும் தேர்தல் ஆணையாளரின் வேண்டுகோளின்படி சொத்து விவரங்களை வெளியிட்டு விட்டார்கள் என்று அமைச்சர் கூறினார்.

இதேவேளை தேர்தல் விதிமுறைகளை மீறி வேட்பாளர்களால் வைக்கப்படும் பதாதைகளை அகற்றும் முழு அதிகாரமும் பொலிஸாருக்கு உண்டு.

அரச சொத்துக்களை தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்காக பயன்படுத்தினாலும் அதனை தடுக்கவும் பொலிஸாருக்கு உரிமை உண்டு என்று அமைச்சர் சுசில்பிரேமஜயந்த சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தேர்தல் ஏற்பாடு குறித்து ஆராயும் கூட்டம் இன்று

கொழும்பு, பெப்.13

மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் முதலாவது கட்சித் தலைவர் கூட்டம் இன்று வியாழக்கிழமை தேர்தல் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர்கள், செயலர்கள் மற்றும் கட்சிப் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர் என்று தேர்தல் ஆணையாளர் ரத்நாயக்க கூறினார்.

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் தேர்தல் பரப்புரை நடவடிக்கை, பாதுகாப்பு ஏற்பாடு, அரச சொத்துக்கள் பயன்படுத்தப்படும் விவகாரம், தேர்தல் மோசடிகளை தடுத்தல் உட்பட பல விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. (ச)

# சிகரெட் பைக்கற்றுக்களில் புகைப்பட அறிவுறுத்தல்கள்

## *மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பு மே 12 இல்*

கொழும்பு,பெப்.13

சிகரெட் பைக்கற்றுகளில் புகைப்பட அறிவுறுத்தல்களை இடம்பெறச் செய்யும் வழக்குத் தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் மே 12 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்படும்.

சுகாதார அமைச்சும், இலங்கை புகையிலை நிறுவனமும் தமது சமர்ப்பணங்களை நீதி மன்றில் சமர்ப்பித்துள்ளன.

புகைப் படங்களுடன் கூடிய அறிவுறுத்தல்களை வழங்க தற்போதுள்ள சட்டத்தில் இடமில்லை என்று புகையிலைக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சிகரெட் பைக்கற்றுக்களில் 70 வீத அறிவுறுத்தல்களை உட்படுத்த இயலாது என்று புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய பிரமாணங்களை நடைமுறைப்படுத்த அதிக கால அவகாசத்தை வழங்க அரசு விருப்பம் கொண் டிருந்ததாக அரச சட்டத்தரணி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இராணுவத் தளபதியின் பதவிக்காலம் நீடிப்பு



*லெப். ஜெனரல் தயா ரட்நாயக்க*

கொழும்பு, பெப்.13

இலங்கை இராணுவத்தளபதி லெப். ஜெனரல் தயா ரட்நாயக்கவின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இலங்கையின் இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள லெப். ஜெனரல் தயா ரட்நாயக்கவின் சேவைக் காலம் இந்த மாத இறுதியுடன் முடிவடையவுள்ளது.

எனினும் அவரது பதவிக்காலம் 2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)




# சாரதி லைசென்ஸ் பெற புதிய கட்டுப்பாடுகள்

## *நடைமுறைப்படுத்தவுள்ளது போக்குவரத்து அமைச்சு*

கொழும்பு,பெப்.13

பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களே அதிகமாக இடம் பெறும் வீதி விபத்துக்களுக்கு காரணமாக இருப்பதனால் போக்குவரத்து அமைச்சு பஸ் சாரதிகளுக்கான புதிய தகுதிக் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்தத் தீர்மானித்துள்ளது.

25 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கு மாத்திரமே பஸ் சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரத்தை வழங்க வேண்டும் என்ற புதிய சட்டப் பிரமாணத்தை போக்குவரத்து அமைச்சு நடைமுறைப்படுத்த உள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றினால் தண்டிக்கப்பட்டவர்களுக்கு பஸ்களை செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் வழங் கக்கூடாது என்று இந்த சட்டப் பிரமாணங்கள் வலியுறுத்து கின்றன.

இரண்டு ஆண்டுகள் வாகனாங் களை ஓட்டிய அனுபவமுடைய வர்களே பஸ் சாரதிக ளுக்கான அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பம் செய்ய முடியும் என்று சட்டப் பிரமாணத்தில் குறிப்பி டப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து வைத்திய நிலையத்தில் இருந்து வைத்திய சான்றிதழைப் பெற்ற பின்னரே இதற்கு விண்ணப் பம் செய்ய வேண்டும் என்று சட்டப் பிரமாணங்கள் வலியு றுத்துகின்றன.

பஸ்ஸொன்று இடை வழியில் இயந்திரக் கோளாறினால் ஓட முடியாத நிலை ஏற்பட்டால் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் இயந்திரக் கோளாறுகளை கூடிய விரைவில் திருத்தம் செய்வதற்கான பயிற்சியைப் பஸ் சாரதிகள் பெற வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் திறமை மிக்கவர்களுக்கே இனிமேல் பஸ் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.

அதனால், பஸ் விபத்துக்களின் எண்ணிக்கையை கணிசமான அளவு குறைக்க முடியும் என்று போக்குவரத்து அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொருத்தமான நிலைநின்று வடக்கு முதல்வர் வெளிப்படுத்தி உள்ள கூர்மைகொள் கருத்து

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வடக்கு மாகாண சபையைக் கைப்பற்றும் என்று தெரிந்திருந்தும் கூட, தாமும் தமது அரசும் ஜனநாயக விழுமியங்களைப் பேணுவதில் அதீத விருப்பமும் நம்பிக்கையும் கொண்டதாலேயே அதற்கான தேர்தலை நடத்துவதாக தேர்தல் காலத்திலும் அதற்கு முன்னரும் ஜனாதிபதி கூறிவந்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில், இந்தியா உட்பட ஏனைய பல நாடுகள் கரிசனை காட்டியமையும், அதன் பாற்பட்டு வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது என்பதும் மற்றொரு பக்கம்.

வடக்கு மாகாண சபை இயங்கத் தொடங்கிய பின்னர், அதன் மீதான அரசின் கடைக்கண் பார்வை கூட உகந்த வடிவில், உரிய முறைப் பிரகாரம் விழுகிறதா என்ற வினாவுக்கு, விடை கிடையாத மிக மந்த நிலையே விரிந்து, பரந்து வருகிறது!

வடக்கு மக்களின் வாழ்க்கை நிலையையும், மாகாணத்தின் வளர்ச்சியையும் நாடி, அவர்களின் அமோக ஆதரவுடன் உருவான சபை, நொண்டிக் குதிரையின் நிலைமை போன்று, தனக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி அவசரமாகத் தேவைப்படும் பணிகளைத் தானும் முன்னெடுக்க இயலாத இக்கட்டான நிலைமை மேலெழுந்துள்ளது. அது தளர்வுறும் என்று எதிர்பார்க்கவும் இயலவில்லை!

தமது முதல்வர் பதவியை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் ஏற்று, நல்லுணர்வையும், நல்லிணக்க சூழலையும் உருவாக்கப் பிள்ளையார் சுழி போட்டவர், முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

இந்தியாவின் அனைத்து மாநில மட்டத்தில் விற்பனையாகும் "த ஹிந்து" நாளிதழுக்கு, கடந்த ஓகஸ்ட் மாதத்தில் வழங்கிய செவ்வி ஒன்றில், 'கணவன்-மனைவி பிரச்சினையில் வெளியார் தலையிடத் தேவை இல்லை'- என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பதில் அளித்தவர், கொழும்பு அரசுடன் நல்லுறவுடன் பணியாற்றும் தமது பெருவிருப்பத்தைப் பகிரங்கப்படுத்தியவர்.

ஆனால் அரை ஆண்டு கழிந்தும், அவரது நல்லெண்ணத்துக்கும் நட்பார்ந்த மனதுக்கும் நாட்டின் தலைவரோ அவரது அரசோ மதிப்பளித்துச் செயற்படும் வழிக்குத் திரும்பவில்லை. அவ்வழியில் தடம் பதிப்பது குறித்து சிறிதளவிலேனும் புலன் செலுத்தியதாக, மனம் கொண்டதற்கான சமிக்ஞையைத் தானும் காணோம்...!

ஜனநாயகம் என்ற தடித்த போர்வையின் கீழ், நாட்டின் தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய அரசியல் மற்றும் அபிவிருத்தி சார் பணிகளை வடக்கு மாகாணசபை முன்னெடுக்க முடியாத அளவுக்கு, கொழும்பு அரச இயந்திரம் சுற்றுகிறது.

சிறுபான்மையினரான தமிழர்கள் மீதும், அவர்களின் அரசியல் தலைவர்கள் மீதும், தாம் விரும்பியவாறு-விருப்பு வெறுப்புக்கு அமைய-எதனையும் செய்யலாம், திணிக்கலாம் என்ற வன்மப் போக்கு கலையும் என்று கற்பனை தானும் செய்ய முடியவில்லை. அந்த அளவுக்கு மேலாதிக்கம் இந்நாட்டில் பருத்துப் பெருத்து வருகிறது.

அத்தகையதொரு சூழமைவில், மூன்றாம் தரப்பு ஒன்றின் ஒத்துழைப்புடனேயே தமிழ் மக்கள் முன்னேற்றம் காணமுடியும் என்ற முதலமைச்சரின் அண்மைய, கடைசியான, கருத்து முற்றிலும் யதார்த்தமானது. ஐக்கிய நாடுகள் சபையின் உதவிச் செயலாளர் ஹஒலியாங் ஸுவுடன் நடத்திய சந்திப்பின்போது அதனை வெட்ட வெளிச்சமாக அவர் எடுத்துரைத்து உள்ளார்.

மூன்றாம் தரப்பின் ஒத்துழைப்புடனேயே தமிழ் மக்களால் இந்நாட்டில் முன்னேற்றம் காணமுடியும் என்று ஐ.நாவின் உதவிச் செயலாளரிடம் முதலமைச்சர் விவரித்திருக்கிறார், விளக்கி உள்ளார்.

தமது ஆறுமாத பதவிக் காலத்தில் எதிர்கொண்ட, அனுபவித்த அதர்மிஷ்டத் திணிப்பை அப்பட்டமாக அனைத்துலக அமைப்பின் உயர் அதிகாரியிடம் அவர் வெளிப்படுத்தியமை மெத்தவும் பொருத்தமானதே. அரசுடன் இணைந்து தமது மக்களுக்கு உதவலாம், சேவையாற்றலாம் என்று நம்பியவர், இப்போது அதன் கபடப் போக்கை வெளிப்படுத்தி உள்ளார். மக்கள் கருத்து நிலையும் அதுவாகவே அமையும் என்று கொள்ளலாம்.

# நாட்டின் நிலைமை கவலைக்கிடம் பணிந்துபோவதுதான் ஒரே வழி

கந்தவனம்
கோணேஸ்வரன்

இலங்கையின் 66 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் தொடர்பாக, 'மக்கள் இப்போதுதான் நிறைவான சுதந்திரத்தை அனுபவித்து வருகிறார்கள்' என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது சுதந்திரதின உரையின்போது பெருமையுடன் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மக்களைக் கேடயமாகப் பயன்படுத்திக்கொண்டு இலங்கை விவகாரத்தில் ஊடுருவ முனைகின்ற வெளிநாட்டுச் சக்திகளுக்கு தாம் ஒருபோதும் இடங்கொடுக்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி உறுதிபடத் தெரிவித்திருந்தார். கசப்பான அனுபவங்களை மறந்துவிடுமாறும் அவர் தமிழ் மக்களைக் கேட்டிருக்கின்றார்.

இலங்கை சுதந்திரமடைந்த காலந்தொட்டு தமிழ்மக்களின் அனுபவங்கள் அத்தனையும் கசப்பானவையாகவே இருந்து வருகின்றன. இனிப்பானவை என்று அரசு தமிழர்களுக்குச் சொல்பவை அத்தனையும், விஷம்பூசிய இனிப்புகளாகவே அமைந்திருக்கின்ற நிலையில் கசப்பான அனுபவங்களே வாழ்வாகிப் போன தமிழ் இனம் இந்தக் கசப்புகளை மறந்தால் அவர்களின் எதிர்கால இருப்புக்கான உத்தரவாதத்தை யார் தருவது?

இலங்கையை ஆண்டுவந்த எந்த அரசாங்கத் தரப்பிலிருந்தும் தமிழர்களின் தாயகபூமி சிதைக்கப்படமாட்டாது என்ற பாதுகாப்பு உத்தரவாதம் தரப்பட்டதா? தமிழினத்தின் செறிவு குறைக்கப் படமாட்டாது என உத்தரவாதம் கிடைக்கப்பெற்றதா? தமிழர் தாயகம் சிங்கள மக்களின் வலிந்த குடியேற்றத்தால் கபளீகரம் செய்யப் படமாட்டாது என அரசால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா? என்ற வினாக்கள் எல்லாவற்றுக்கும் ஒரே விடை இல்லை என்பதுதான். இந்தநிலையில் தமிழ் மக்களுக்கு உவப்பான செய்தி என்று எதையாவது அரசு விட்டு வைத்திருக்கின்றதா என்பதை ஆளுந்தரப்பினர்தான் கூற வேண்டும்.

58,77,78,83 என இனக்கலவரங்கள் உருவானதற்கான காரணம் சிங்களத் தலைமைகள் விரும்பும்வண்ணம் வாழ்க்கையை அமைத்துக்கொண்டு, அவர்கள் தயவில் வாழ்கின்ற இனமாக தமிழர்களையும் மாற்றியமைப்பதற்கான நோக்கமாகத்தானே இருந்திருக்கின்றன.

தமிழர்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதும், அவர்களது சாத்வீகப் போராட்டங்கள் அரசால் அலட்சியப்படுத்தப்படபட்டதும் தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்துவதற்கு காரணங்களாயமைந்தன.

இன்று அவர்களது செயற்பாடுகள் முடக்கப்பட்டாலும் இலங்கை அரசாங்கத்தின் கவனத்துக்கும், உலக நாடுகளின் கவனத்துக்கும் இப்போராட்டங்கள் தான் தமிழர்களின் விருப்பையும் வேண்டுகோள்களையும் வெளிப் படுத்தி நிற்கின்றன.

தமிழர் தரப்பின் ஜனநாயகப் போராட்ட முயற்சிகள் அனைத்தும் உதாசீனப் படுத்தப்பட்டதற்குப் பின்னர், அது ஆயுதப் போராட்டமாக மாறி, இலங்கையில் இடம்பெற்ற சீரழிவுகள் காரணமாக ஆயுதப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருகின்றோம் என்ற போர்வையில் நிகழ்த்திய கோரஅவலத்துக்கும், இலங்கையின் அரசாங்கங்களே காரணமாக இருந்து வந்திருக்கின்றன.

தமிழர்கள் சிங்கள மக்களை ஆள்வதற்காகப் போராடவில்லை. அவர்களது போராட்டங்கள் எல்லாம் தங்கள் தாயக நிலத்தில் தாங்கள் அமைதியாக வாழ வேண்டும் என்பதற்காகவே இடம் பெற்று வந்துள்ளன; வருகின்றன. தங்கள் நிலப்பரப்பு பிறரால் கபளீகரம் செய்யப்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும், தங்கள் சந்ததியினர் இன அடையாளங்களை இழந்துவிடக் கூடாது என்பதற்காகவுமே தமது தாயகத்தில் தன்னாட்சி முறைமையைக் கோரி நிற்கிறார்கள். ஜனாதிபதி கூறியதுபோல குருவிகூட தன் கூட்டில் சுதந்திரமாக வாழுகின்றபோது, தமிழர்கள் தமது தாயகத்தில் சுதந்திரமாக வாழக்கூடாதா என்றுதான் கேட்கிறார்கள்.

தமிழர்களை அடக்கிவைக்க வேண்டும் என்ற மேலாதிக்கச் சிந்தனையை சிங்கள அரசியல்வாதிகள் களைந்தாலே தமிழர்களின் போராட்ட நியாயங்களை உணர்ந்து கொள்ள முடியும். தமிழர்களையும் இலங்கையின் சமபிரஜைகளாக ஏற்கின்ற அரசியல் அமைப்பு முறையை அறிமுகப்படுத்துவதற்கான துணிவு தோன்றும். துரதிஷ்டவசமாக ஆட்சியாளர்களுக்கு அத்தகைய சிந்தனைகள் தோன்றாததால்தான் நாடு சீர்கெட்டுக் கிடக்கிறது.

தொடர்ந்துவந்த ஆட்சியாளர்களின் செயற்பாடுகளால் தான் இன்று நாடு இரண்டுபட்டுப்போய் நிற்கிறது. நாட்டின் சுதந்திரத்தால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைக்கூடத் தமிழ்மக்கள் கொண்டாட முடியாத நிலை காணப்படுகிறது. இலங்கையர் என்ற உணர்வுடன் தேசியக்கொடியை ஏற்றுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தால் அவர்கள் நிச்சயம்மாக அதைச் செய்தே இருப்பார்கள். ஆனால் உண்மைகள் அவ்வாறில்லையே.

இந்தநிலையில், வடக்கு மக்களைப் பயன்படுத்தி இலங்கை விவகாரங்களில் உள் நுழைவதற்கு மேற்கு நாடுகள் முயல்கின்றன என ஜனாதிபதி கவலைப்படுவதில் என்ன நியாயம் இருக்கிறது? ஜனாதிபதிகூட வடக்கு மக்களை வைத்துத்தானே அரசியல் செய்து கொண்டிருக்கிறார். முள்ளிவாய்க்கால் முடிவின் மூலம் தமிழரின் எழுச்சியை அடக்கி விட்ட நாயகனாகத் தன்னை விளம் பரப்படுத்தித் தானே இன்றுவரை சிங்கள மக்களிடம் வாக்கு வேட்டை யாடிக்கொண்டிருக்கிறார். வடக்கு மக்களுக்கு ஜனநாயக உரிமைகளை மீட்டுக் கொடுத்தவர் தான் என்றல்லவா அரசியல் தம்பட்டம் அடிக்கிறார்.

ஆனால், முள்ளிவாய்க்கால் அவலங்களுடன் ஐ.நா. செயலாளரை இலங்கைக்கு அழைத்து 2009 மே 26 இல் ஐக்கியநாடுகள் அவைச்செயலாளர் நாயகத்துடன் தமிழ்மக்களுக்குப் பிரச்சினை உண்டு : அவற்றை தீர்த்து வைக்கிறேன் என்று உடன்படிக்கை செய்துவிட்டு அதனை மீறியதால்தானே இலங்கை ஆட்சியாளர்களுக்கு இன்று இந்த நிலை. ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டன. 2012, 2013ஆம் ஆண்டுகளில் மனித உரிமைகள் சபையில் இலங்கை யின் நிலைமைகள் பற்றி ஆராயப்பட்டு மனித உரிமைகளை மேம்படுத்துவ தற்காக உலகநாடுகள் கொடுத்த வாய்ப்புகளும் இலங்கை அரசால் புறந்தள்ளப்பட்டன. வெளிநாடுகளிலிருந்துப் பணத்தைப் பெற்று வீதிகளை அபிவிருத்தி செய்து தனது ஆட்சி அதிகாரங்களைப் பலப்படுத்துவதிலும், ஆளும் இனக் குடிமக்களை தமிழர் பகுதிகளில் குடியேற்றுவதிலும், புத்தர் சிலைகளை வீதிக்குவீதி அமைப்பதிலும் கவனம் செலுத்தி வருகின்ற அரசு, தமிழர்களின் உள்ளக் குமுறல்களைப் புரிந்து கொள்ளாமலேயே தொடர்ந்தும் இயங்கி வருகிறது.

தமிழர்களுடைய போராட்டம் இலங்கை ஆட்சியாளர்களின் கடுமையான போக்குக்கெதிரானதே. ஆட்சியாளர்கள் தமது கடுமையான போக்கைக் கைவிட்டுத் தமிழர்களையும் இணைத்துச் செயற்பட முன்வருவார்களேயானால் தமிழர்களும் இணைந்து செயல் படக் காத்திருக்கிறார்கள். அதற்கான வழி புதிய ஆட்சிமுறைமை ஒன்றை ஏற்படுத்துவதுதான். இலங்கையில் தமிழர்களின் வாழ்வுக்கு இனிமேல் அச்சமில்லை என்ற நல்லெண்ணத்தை சிறப்பான ஆட்சி முறையின்மூலம் விதைப்பதுதான்.

ஆனால், இலங்கை ஆட்சியாளர்கள் இவை எவற்றுக்கும் தயாராக இல்லை. தமிழர்கள் தமது நடைமுறைகளைப் பணிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்ப்பார்க்கிறார்கள். எங்கள் பிரச்சினைகளுக்கு உள்நாட்டிலேயே பேசி எங்களால் முடிவுகாண முடியும் என்று உலகத்துக்குச் சொல்லிக் கொண்டு, தமிழர்களின் உறுதியைக் குலைத்து விடலாம் என எதிர்ப்பார்க்கிறார்கள்.

ஏமாற்றுத்தனங்களால்தான் இலங்கை அரசு மூன்றாவது தடவையாகவும் ஜெனிவாவில் சிக்கலுக்குள்ளாகும் நிலையில் இருக்கிறது. ஏற்கனவே இருதடவைகள் இலங்கைக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தையும் நல்லெண்ணத்தையும் இலங்கை அரசு சரிவரப் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு உலகமன்றில் பூதாகரமாக எழுந்து நிற்கிறது. இலங்கை கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய சூழலே உருவாகி வருகிறது.

இலங்கை தொடர்பாக ஐக்கியநாடுகளவையின் நிபுணர்குழு வெளியிட்ட அறிக்கையை தனிநபர் அறிக்கையென இலங்கை அரசு கேலி செய்தது. தானே நியமித்துப் பெற்றுக்கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் தொடர்பான அறிக்கையையும் கிடப்பில் போட்டுவிட்டது. இலங்கையில் மனிதஉரிமைகள் மேம்பாடு பற்றியும், செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் பற்றியும் ஆராய்வதற்காக இலங்கை வந்திருந்த மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளையை இலங்கை அரசு சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை. மாறாக அவரை அவமதிக்கும் வகையில் செயற்பட்டது.

அதன்பின்னர் இலங்கைக்கு யார்யாரோ எல்லாம் வந்தார்கள் : சென்றார்கள். தற்போதுகூட ஐக்கிய நாடுகள் அவையின் உதவிச்செயலாளர் நாயகம் ஹாவோ லியாங் ஸு இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஆனால் இலங்கை அரசு தான்கூறுபவற்றைச் சரியென்று ஏற்றுக்கொள்பவர்களைத் தவிர அனைத்து இராஜதந்திரிகளையும் தலைவர்களையும் நிராகரித்து வருகின்ற போக்கையே கடைப்பிடிக்கிறது.

இம்முறை இலங்கைக்கு உதவப்போவதில்லை என்பதை இந்தியா தெளிவாகவே கூறி விட்டது. இலங்கை சார்பாகக் கடந்த காலங்களில் செயல்பட்ட நாடுகளுக்குத் தமது பிரேரணையின் நியாயங்களை எடுத்துச் சொல்வதற்காக பிரிட்டனும் அமெரிக்காவும் இப்போதே களத்தில் இறங்கிவிட்டன.

வடமாகாண சபையின் போர்க்குற்ற விசாரணைக்கான தீர்மானம் சர்வதேச அரங்கில் இலங்கை ஆட்சியாளர்களுக்கு பெரும்தாக்கத்தை ஏற்படுத்தலாம் என நம்பப்படுகிறது. புலம்பெயர் தமிழர்களின் பரப்புரைகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நடவடிக்கைகளும் இம்முறை இலங்கைக்குக் கடுமையான விளைவுகளைத் தர வல்லனவாக அமைகின்றன.

இந்தநிலையில் இலங்கையின் நிலைமை கவலைக்கிடமாகவே இருக்கிறது. உலக அரங்கில் சிறுமைப்படுவது அப்படி யொன்றும் கஷ்டமான விடயமல்ல என்று இலங்கை தன்னைத்தானே தேற்றிக் கொள்ளவும் கூடும். எவ்வாறெனினும் இலங்கை ஜெனிவா விடயத்தில் நிச்சயம் பணிந்தே தீரவேண்டும் என்பதுதான் இன்றைய யதார்த்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலோன்ருடே கட்டுரையிலிருந்து
ரம்யன்

# வல்லரசுகளின் முடிவுகளை குறைத்து மதிப்பிட்டு வந்துள்ளது இலங்கை

## ஆனால் தனது இராஜதந்திரம் மிகையானது எனக் கருதி தவறுக்கு மேல் தவறு செய்து இன்று திணறுகிறத அரசு




2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை இராணுவம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை தோற்கடித்ததிலிருந்து பெரும்பாலும் எல்லா தேர்தல்களிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிங்கள மக்களின் தேசப் பற்றுணர்வுகளைத் தட்டியெழுப்புவதன் மூலம் வென்று வருகிறார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இப்பொழுது சர்வதேச விசாரணையொன்று நடத்தப்படுவதை எப்படியாவது தடுத்து விடுவதற்கு இலங்கை அரசு முயன்று வருகின்றது.

போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ராஜபக்ஷ அரசின் மீது சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்க அதிகரிக்க நாட்டின் 75 வீத சிங்கள மக்கள் தொகையைக்கொண்ட சிங்களமக்கள் அவரைச் சுற்றி நெருக்கமாகிக் கொண்டு வருகிறார்கள்.

தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை இலங்கை இராணுவம் தோற்கடித்ததன் பின்னர் நடைபெற்ற ஒவ்வொரு தேர்தலிலும் அநேகமாக அவர் வெற்றி பெற்று வருகிறார். அந்த மக்களின் தேசப்பற்று உணர்வை தட்டி எழுப்பி விடுவதன் மூலம் அவருடைய தோல்விகளை மறந்து மக்கள் அவரைத் தம் இரட்சகராக மதிக்கும் படி செய்கிறார். நாட்டுக்கு அமைதியைக் கொண்டு வந்தமைக்காகவும் சுயாதீனத்தை நிலைநாட்டியமைக்காகவும் இந்த வகையில் மக்கள் கைமாறு செய்ய விரும்புகிறார்கள். இந்தப் போக்கில் இன்று றொக்கட் வேகத்தில் விலைவாசிகள் உயர்ந்திருப்பதை அவர்கள் பிரச்சினையாகக் கருதவில்லை. அது போலவே ஊழல் குற்றச்சாட்டுக்கள், உறவினர்களுக்கு உயர் பதவிகள், எதேச்சாதிகாரம், பொருளாதார சீர்கேடுகள் மற்றும் பௌத்த தர்மத்துக்கு மாறான சூதாட்ட கலாசாரம் போன்றவையும் மக்களால் புறந்தள்ளப்படுகின்றன.

போர்க் குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று சர்வதேசம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் சர்வதேசத்தினால் புலிகள் ஆதரவு தமிழ் புலம்பெயர் குழுக்களின் ஆதரவுடன் தமது ஆட்சியை முறியடிப்பதற்கான சர்வதேச சதி முயற்சி என்றே அவரால் வியாக்கியானம் செய்யப்படுகின்றது. அதை அந்த மக்களும் நம்புகிறார்கள்.

இலங்கையில் நடந்த போரானது மக்களை காப்பாற்றுவதற்காகவே நடத்தப்பட்டது என்று ராஜபக்ஷ மக்களிடம் கூறி வருகிறார். பல்வேறு மனித உரிமை அமைப்புகள், ஐ.நா.சபை, அமெரிக்கா, கனடா, பிரிட்டன் மற்றும் செனல்-4 காணொலி ஆகிய அனைத்து தரப்பினராலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் ராணுவத்தின் பிரதம தளபதி என்ற முறையில் நிராகரித்துள்ளார். அவர்கள் அறிக்கைகள் இலங்கையை சர்வதேச கண்களில் வித்தியாசமான நாடாகக் காட்டினாலும், கண்ணால் பார்த்த சாட்சியங்களை முன்வைத்தாலும் தொலைக்காட்சிகள், புகைப்பட ஆதாரங்களை முன்வைத்தாலும் அனைத்தையும் மறுக்கிறார்.

மார்ச் மாதம் மனித உரிமைகள் சபை கூடவிருக்கும் நிலையில் சர்வதேச ஆதாரங்கள் அமைப்பு என்ற ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்று சில வாரங்களுக்கு முன் ராஜபக்ஷ ஆட்சிக்கு படுபாதகமான அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

இலங்கை இராணுவத்தினர் பொதுமக்களின் பெருந்தொகையான புதைகுழிகளை படிமுறையாக அழித்துள்ளனர். அதற்கான ஆதாரம் இருக்கிறது என்றும் தெரிவித்திருந்தது. இந்த அறிக்கை மனித உரிமை தொடர்பான இலங்கை அரசின் தற்காப்பு முயற்சிகளை மிகவும் பாதிப்பதாக அமையலாம் என்று கருதப்படுகின்றது.

இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய இந்த அறிக்கையை குப்பையெனக் கூறி மறுத்துள்ளார். போர்க்குற்ற ஆதாரங்கள் அறிவிக்கப்பட்டதுக்கு கண்ணால் கண்ட சாட்சியங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ள அறிக்கையின் உண்மைத் தன்மை குறித்த சந்தேகமும் எழுப்பியிருந்தார். அரசுத் தலைவர்களும் இந்த அறிக்கையை மேலும் ஒரு மேற்கத்தைய சதிமுயற்சியென்று நிராகரிப்பது சாத்தியம். சனல்-4 காணொலி காட்சிகளையும் அதன் ஆவணங்களையும் இழிவுபடுத்தி நிராகரிப்பதற்காக நடத்தப்பட்டு வரும் செயற்பாடுகளே இன்னுமொரு ஆவணத்தை உருவாக்கப் போதுமான தாகும்.

அண்மையில் களுத்துறை என்ற இடத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் ஜனாதிபதி ராஜபக் ஷ விடுதலைப்புலிகளைத் தோற்கடித்து பெரும் கஷ்டத்துடன் பெற்றுக் கொண்ட வெற்றியை தோற்கடிப்பதற்கு மேற்கு நாடுகள் சதிபுரிகின்றன என்று கூறினார். சுதந்திர தினத்தில் அவர் நிகழ்த்திய உரையில், சில வெளிநாட்டுச் சக்திகள் வடக்குத் தமிழ் மக்களை கேடயமாகப் பாவிக்க முயற்சி செய்கின்றன என்பதை அந்த மக்கள் அறிந்திருக்க வேண்டும். மனித உரிமைகளை பாதுகாப்பதாகவும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதாகவும் கூறிக்கொண்டு அவர்கள் இந்த நாடுகளில் தலையிடுகிறார்கள். அமைதியை விரும்பாதவர்களின் வெற்றியாகவே ஜெனிவா தீர்மானத்தை நாம் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

இலங்கையானது இன ரீதியில் பிரிந்துள்ள நாடு. நாட்டின் சனத்தொகையில் 14 வீதத்தைக் கொண்ட தமிழர்கள் சிங்களவர்களில் இருந்து மாறுபட்டவர்கள். 10 வீதமுள்ள முஸ்லிம்களும் மாறுபட்டவர்கள்.

ஐ.நா.அறிக்கையில் இலங்கைப் போரின் இறுதிக் காலத்தில் 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவர்கள் அநேகமாக அனைவருமே தமிழர்கள். 30 வருட கால போரில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் பாதிக்கப்படவில்லை என்பதல்ல இதன் கருத்து. ஆனால் தமிழரின் பாதிப்பு ஆழமாக உணரப்படுகிறது. அது தொடரவும் செய்கிறது. அரசின் நலத்திட்டங்கள் மீள் நல்லிணக்க முயற்சிகள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்யும் முயற்சிகள் முன்னெடுக்கப்படும் நிலையிலும் இது நீடிக்கின்றது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் நீதியைக் கேட்டு நிற்கிறார்கள். இலங்கையில் அது சாத்தியமில்லை என்பதால் சர்வதேச சமூகம் தலையிட வேண்டும் என்று எதிர் பார்க்கிறார்கள்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு மாகாண சபை ஜனவரி 27 ஆம் திகதி நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தில் போரின் இறுதிக்கட்டத்தில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது. அதேசமயம் ராஜபக்ஷ ஆட்சியினருக்கு விருப்பமில்லாத நிலையில் த.தே.கூட்டமைப்புத் தலைவர்கள் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை முதற்கொண்டு பல சர்வதேச மற்றும் அமெரிக்க பிரதிநிதிகளைச் சந்தித்து தமக்குள்ள பிரச்சினைகளைக் கூறியுள்ளார்கள். இந்த சர்வதேச பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும் தகவல்கள் முழுக்கவும் அரசு தரப்பில் தரப்படுகின்ற தகவல்களுக்கு மாறாகவே இருக்கின்றன.

அமெரிக்க ராஜாங்க அமைச்சின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி செயலாளர் நிஷா பிஸ்வால் அண்மையில் இலங்கை வந்திருந்த போது கொழும்பில் பத்திரிகையாளர்களிடம், தனிப்பட்ட நபர்களும் நிறுவனங்களும் தொடர்ந்து பயமுறுத்தவும் அச்சுறுத்தப்படுவதாக நாம் கேள்வியுற்றோம். போர் முடிந்து ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்பும் அப்படியான ஒரு சூழ் நிலை நிலவுமானால் அந்த நபர்கள் சர்வதேச செயற்பாடு ஒன்று வேண்டும் என்று கோருவதற்கு சில காரணங்கள் இருக்கத்தான் வேண்டும் என்று கூறியிருந்தார்.

ராஜபக்ஷ முகத்தில் துணிச்சலைக் காட்டிக் கொண்டாலும் அழுத்தங்களை உணரவே செய்கிறார். சர்வதேச விசாரணையொன்றுக்கு முயற்சிகள் கைகூடுவதை தடுக்கவே விரும்புகிறார். தமது செயலாளர் இலங்கையில் முதல் நிலை சிவில் சேவையாளர் லலித் வீரதுங்கவை கடந்த மாதம் வாஷிங்டனுக்கு அனுப்பி ஜனாதிபதி ஒபாமாவுக்கு நெருக்கமான வட்டாரங்களுடன் பரப்புரைகளை நடத்தியிருந்தார். ராஜபக்ஷ பாலஸ்தீன மக்கள் உரிமைகளில் அதிக அக்கறையுள்ளவராக இருந்த போதிலும் [illegible] இஸ்ரேலுக்கும் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் நோக்கங்களில் ஒன்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத் தென்யாகுக்கு ஒபாமாவுடன் உள்ள செல்வாக்கை தம் சார்பில் பயன்படுத்திக் கொள்வதற்காக இருக்கக் கூடும் என்று சில வட்டாரங்களில் கூறப்படுகிறது.

சர்வதேச விசாரணையானது ராஜபக்ஷவினால் தாமே உருவாக்கிக் கொண்டதாகவே தென்படுகின்றது. 2009 ஆம் ஆண்டு ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீமூனுடன் ராஜபக்ஷ கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் கடைசி பந்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

சர்வதேச மனித உரிமைகளின் தரங்களுக்கு அமைவாகவும் இலங்கையின் சர்வதேச கடப்பாடுகளுக்கு ஏற்பவும் இலங்கை மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கும் பாதுகாப்பதற்குமான தனது வலுவான அர்ப்பணிப்பை மீளவும் வலியுறுத்துகின்றது. செயலாளர் நாயகமானவர் சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமை சட்டத்தை மீறிய விடயங்கள் தொடர்பான பொறுப்புக்கூறும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதன் அவசி யத்தை வலியுறுத்தினார். அந்த குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

இந்தப் பந்தியில் காணப்படும் உள்ளடக்கம் உணர்வுகளின் அடிப்படையிலேயே தமக்கு ஆலோசனை கூற வென செயலாளர் நாயகம் நிபுணர் குழுவை நியமித்திருந்தார். உள்நாட்டில் நம்பகமான விசாரணை ஏதும் இடம் பெறாததை கண்ட பின்னரே இந்தக் குழுவை பான்கீமூன் நியமித்திருந்தார்

வல்லரசு நாடுகள் ஈராக்கிலும் ஆப்கனிலும் அதைவிட குற்றங்களைப் புரிந்துள்ளதாகக் கூறிக் கொண்டும் அவைகளின் தீர்மானங்களை குறைத்து மதிப்பிட்டுக் கொண்டும் தனது ராஜதந்திர சக்தியை மிகையாகக் கணிப்பீடு செய்து கொண்டும் இலங்கை தவறுக்கு மேல் தவறு இழைத்துள்ளது. ஜனநாயக அமைப்புக்களைப் பலப்படுத்த சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பின்பற்றவும் தவறியுள்ளது. இப்பொழுதும் கூட காலம் கடந்து விடவில்லை. தவறிழைத்த நாடு என்ற முகவரியை ஒட்டிக் கொள்ளாமல் இருக்க ஜனநாயகத்தை சகல விதமான தடங்கல்களில் இருந்தும் விடுவித்துக் கொள்ள தைரியம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள். முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்துப் பொழுதைக் கழிப்பீர்கள்.



**இடபம்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்யோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு கிடைக்கும்.



**மிதுனம்:** மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.



**கடகம்:** எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகும். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.



**சிங்கம்:** கடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். முன்கோபம் விலகும். வியாபாரத்தில் பழைய மிகுதிகளை விரைந்து பெறுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**கன்னி:** செயலில் வேகத்தைக் காட்டுவீர்கள். வியாபார ரீதியாக சில பிரபலங்களைச் சந்திப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.



**துலாம்:** பணப்பற்றாக்குறை நீங்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள். வாகனவசதி அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். உங்களின் பலம், பலவீனம் எது என்பது உங்களுக்கே தெரிய வரும். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.



**தனுசு:** பணவரவு திருப்தி தரும். உறவுகளால் ஆதாயம் உண்டு. வேற்றுமதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். கவனமுடன் செயற்படப்பாருங்கள்.



**மகரம்:** திறம்பட செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.



**கும்பம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.



**மீனம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.

## நாளை

**மாசி-02 வெள்ளிக்கிழமை | 14.02.2014**

திதி: பூரணை பி.இ.06.14 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
மு.இ.01.58 வரை

சுபநேரம்: 06.33-08.03 வரை
இராகுகாலம்:.11.03-12.33 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### இஷ்டம்


நான் முன்னர் சுருக்கமாகக் குறிப்பிட்ட 'இஷ்டம்' (தொழுதற் பொருட்டுத் தனக்குரிய வழிபடு தெய்வத்தைத் தேர்ந்தெடுத்தல்) என்ற கோட்பாடு, உன்னிப்பாக எண்ணிப் பார்ப்பதற்கு உரியது. ஏனெனில், சரியானபடி அதனைப் புரிந்துகொண்டால், உலகத்தில் உள்ள பல்வேறு மதங்களையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும். இஷ்டம் என்ற சொல் லஇஷ்' (விரும்பு, தேர்ந்தெடு) என்னும் தாதுவிலிருந்து பிறந்ததே. எல்லாச் சமயங்களின், எல்லாப் பிரிவுகளின் இலட்சியமும் அதுவே தான்.

துன்பத்திலிருந்து நீங்கி விடுதலை பெறுவதுதான் அது. எங்கெல்லாம் சமயங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் இந்த இலட்சியம் ஏதாவது ஒரு வடிவத்தில் செயற்பட்டுக் கொண்டிருப்பதைக் காண்கிறீர்கள். ஆனால், சமயத்தின் கீழ்நிலைகளில் அது அவ்வளவு தெளிவாகப் புலனாவதில்லை. இருப்பினும்— புலனானாலும் சரி, புலனாகாவிட்டாலும் சரி — ஒவ்வொரு சமயமும் அந்த ஒரே இலட்சியத்தை நோக்கியே சென்று கொண்டிருக்கிறது.

துன்பத்திலிருந்து விடுபட நாம் விரும்புகிறோம். உடல், உள்ளம், ஆன்மா இம்மூன்றாலும் விடுதலை பெற நாம் முயல்கிறோம்.

இந்த அடிப்படையில்தான் உலகமே செயற்பட்டு வருகிறது. இலட்சியம் என்னவோ ஒன்றுதான். ஆனால் அதை அடையும் வழிகள்தான் பல. இந்த வழிகள், நமக்கு இயல்பாகவுள்ள தனிப்பண்பு நிலைகளைப் பொறுத்தவை. ஒருவர் இயற்கையாகவே உணர்ச்சி வசப்பட்டவராக இருப்பார்; இன்னொருவர் நுண்ணறிவு படைத்தவராய் இருப்பார்; அடுத்தவர் சுறுசுறுப்புடையவராய் இருப்பார். இவ்வாறு பலவகை மக்கள் உள்ளனர். மேலும் ஒரே இயல்பில் பல பாகுபாடுகள் இருக்கலாம். சான்றாக, நாம் இப்பொழுது ஆராய்கின்ற பக்தி நெறியில் காணப்படும் அன்பை எடுத்துக் கொள்வோம்.

## துளைபோடும் தேனீக்களும் எவரெஸ்டுக்கு மேல் பறக்கலாம்



*துளைபோடும் தேனீ இதுதான்*

பம்பிள் பீக்களால் (துளை போடும் தேனீ) மிகவும் உயரமான இடங்களிலும் பறக்க இயலும் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மேற்குச் சீனாவில் உள்ள உயர்ந்த மலைப் பகுதிக்குப் பயணம் செய்து, பாம்பஸ் இம்பிடுசஸ் வகையைச் சேர்ந்த ஆறு ஆண்பம்பிள் பீக்களைச் சேகரித்தனர்.

அந்தத் தேனீக்களை ஒரு பெட்டியில் வைத்து அடைத்து, அங்குள்ள ஒட்சிசன் அளவையும், காற்றின் அடர்த்தியையும், வெப்ப நிலையையும் உயரமான பகுதிகளில் இருப்பதைப் போன்று ஆய்வாளர்கள் செயற்கையாக உருவாக்கினார்கள்.

அந்தப் பரிசோதனையில் கடல்மட்டத்திலிருந்து 13 ஆயிரம் அடி உயரத்தில் இருக்கும் சூழலில், அந்தத் தேனீக்களால் பறக்க முடியும் என்பதைக் கண்டறிந்துள்ளனர். சில தேனீக்கள் 30 ஆயிரம் அடிகளுக்கு மேல்கூடப் பறக்கக் கூடியவை என்று தெரிய வந்துள்ளது. இது எவரெஸ்ட் சிகரத்தைவிடவும் உயரமானது (29,000 அடி அல்லது 8,848 மீற்றர்).

இந்தப் பம்பிள் பீக்கள் ஒவ்வொரு முறை சிறகை அடிக்கும் போதும், தலையையும் வயிற்றையும் நோக்கித் தங்கள் சிறகின் கோணத்தை விஸ்தரித்துக்கொண்டே இருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | 8 | 3 |
| | 3 | | 7 | | 4 | 6 | | 9 |
| | | 8 | | | 9 | 4 | 1 | |
| 1 | 8 | 9 | | 5 | | 3 | | 2 |
| | | | | | | | | |
| 6 | | 3 | | 9 | | 7 | 5 | 4 |
| | 5 | 2 | 9 | | 3 | 8 | | |
| 8 | | 4 | 6 | | 2 | | 3 | |
| 3 | 9 | | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 5 | 2 | 8 | 9 | 3 | 1 |
| 1 | 3 | 5 | 9 | 4 | 6 | 2 | 7 | 8 |
| 9 | 8 | 2 | 3 | 7 | 1 | 5 | 6 | 4 |
| 2 | 4 | 3 | 8 | 5 | 7 | 1 | 9 | 6 |
| 8 | 5 | 9 | 6 | 1 | 3 | 7 | 4 | 2 |
| 7 | 6 | 1 | 2 | 9 | 4 | 8 | 5 | 3 |
| 3 | 1 | 7 | 4 | 8 | 9 | 6 | 2 | 5 |
| 5 | 9 | 6 | 1 | 3 | 2 | 4 | 8 | 7 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 9 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மாணவர்கள் தமது உயர் கல்வியை தாமாகத் தெரிவு செய்வது நன்மையே

இன்றைய கால கட்டத்தில் மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையைத் தீர்மானிப்பது உயர் கல்வியே. இந்த உயர் கல்வியில் நாம் சரியான பாடநெறியைத் தெரிவு செய்வதன் மூலமே எதிர்காலத்தில் சிறப்பான ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியும்.

ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளை ஒரு வைத்தியராக, பொறியியலாளராக, ஆசிரியராக வர வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். அதற்காக சிலர் தாம் விரும்பிய பாடங்களைபிள்ளையின்விருப்பமின்றி படிக்க வைப்பிப்பர். சிலர் தமது பிள்ளையின் விருப்பப்படி படிக்க அனுமதிப்பர். சில பிள்ளைகளின் விருப்பமும் பெற்றோரின் விருப்பமும் ஒத்துப் போகுமிடத்து அங்கு எந்தவிதப் பிரச்சினையும் இல்லாமல் பிள்ளையால் கல்வி கற்க முடிகிறது. அப்படியில்லாமல் பிள்ளையின் விருப்பம் ஒன்றாகவும், பெற்றோரின் விருப்பம் முன்னொன்றாகவும் அமையும் இடத்து அங்கு பிள்ளையின் உயர் கல்விக்குப் பிரச்சினை வருகிறது. பிள்ளை தனது இலக்கை அடைய முடியாமலும், பெற்றோர் தங்கள் விருப்பம் நிறைவேறாமலும், இறுதியில் இரண்டும் கெட்டான் நிலை ஏற்படுகிறது.

எனவே பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளையின் உயர் கல்வி குறித்து தீர்மானிப்பதை அவர்கள் கையிலே விடுங்கள். உங்கள் கையில் எடுத்து அவர்களின் எதிர்கால வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்காதீர்கள்.

*இனியவள், புலோலி*

# அன்புக்கு அன்னை

அன்புக்கு அன்னை ஓர் அகராதி
அரிச்சுவடியும் கூட
பத்து மாதங்கள் என்னைத் தன்
கருவறையில் சுமந்தவள்
நிஜமாக துடிக்கின்றேன் - என்ன
தவஞ் செய்தேனோ - நான்
உன்னுடனே உயிர்வாழ
உனக்கு யார் ஈடு இந்த உலகத்தில்?
ஒவ்வொரு நாளும் தேடி அலைகின்றேன்
கேட்டுப்பார் விண்மீனை
உன் அன்புக் கதை சொல்லும்
சொற்பேசும் என் வாயில்
உனது பெயர் சொன்னால்
முகம் மலரும் உன்முகம் பார்த்தவுடன்
உதிக்கின்ற சூரியனே ஒளிவீசும்
உனது வருகையால்
ஏழேழு ஜென்மங்கள் தேவையில்லை
ஒரு ஜென்மமே போதும் - நீ
என்னருகில் இருந்தால்
என் கவிதையில் முழு வரியும் நீயே
என் கவியும் நீயே.

*க.நிரஞ்சன், கண்டி வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி*



எழுதுகோல் கரம்பிடித்து
இன்முக மலர்வுடனே
இதயத்தில் உன் நினைவு
ஏற்றியது ஒளிதீபம்

கல்லூரி வாழ்வினிலே
காந்தமும் இரும்புமாய்
கல்வியதைச் சிந்தைதனில்
கருத்துறவே கற்று வந்தோம்


உயர்கல்வி வாய்ப்பதுவும்
உருவாக எனைப் பிரிந்தாய்
உண்மை அன்பு அழிந்திடுமோ
உன் நினைவு நீங்கிடுமா !

வாழ்வினிலே ஒளி வீச
வாசமலர் வந்திடுமா
ஏந்தலனின் உள்ளமது
ஏங்கித் தினம் தவித்திடுதே

இறைவனது பதம் தொட்டு
தினம் தினமும் சிரம் தாழ்த்தி
உனக்காக வேண்டுகின்றேன்
உன் வரவைத் தேடி நிதம்

*எஸ்.ரவீந்திரன்,*
*மன்னார்*

# ஆகாய நிலவே...



வானப் புத்தகத்தில்
எழுத்துக்கள் சிதறிக்கிடக்கின்றன
- நட்சத்திரங்கள் -

நடுப் பக்கத்தில் வழமை போல்
சோக கவிதைகள் தான்
- அமாவாசை இரவு -

அட்டைப் பக்கத்தில்
அழகான தேவதையின் முகம்
- நிலா -

கவிதைகளால் எழுதும்
முன்னுரை
- அதிகாலைப் பொழுது -

நீண்டு கொண்டு போகும்
ஏழுவரிக் கவிதை
- வானவில் -

சின்னச் சின்ன ஹைகூக்களின்
அணிவகுப்பு
- வெண் மேகங்கள் -



இதோ கவிதைகளின் காதலன்
வருகிறான்
- சூரியன் -

*தமிழ்நிலா, சாவகச்சேரி*

# விமர்சனம்

## சமூகச் சீர்கேட்டுக்கான காரணம்

**தகவல் தொழில்நுட்பமா? மாறி வரும் கலாசாரமா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.



# இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பி வையுங்கள்.

பெயர் :-..........................................................
முகவரி :- ..........................................................
..........................................................
.......................... ..........................

'இளவல்கள் வட்டம்',
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் பிரதேச சபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவி வெற்றிடங்களை நிரப்புதல் - 2014

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் மன்னார் பிரதேச சபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விவரங்களுக்கு அமைவாகவும் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின்NP/05/01/GE/6/UNS/இலக்க08.02.2013 ஆம் திகதிய கடிதத்திற்கமை வாகவும் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புதிட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சேவைநிபந்தனைகள்
1) இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.
2) ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
3) நியமனம் பெறுபவர்கள் மூன்று வருடகால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

அடிப்படைத் தகைமைகள்
1) விண்ணப்பதாரி இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2) விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18வயதிற்கு குறையாதவ ராகவும் 45வயதிற்குமேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஒய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர் பில் உரிய வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
3) நன்னடத்தையுடையவராகவும் சிறந்ததேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
4) விண்ணப்பதாரி மன்னார் பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)
5) தொழில்நுட்பம் சார் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் பதவி தொடர்பானஅத்துறையில் ஆழ்ந்தஅறிவும் மற்றும் செயன்முறைஅனுபவங்களையும் கொண்டிருத்தல்வேண்டும்.
6) பிரதேச சபையில் கடமைபுரிபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
7) தெரிவுசெய்யப்படும் முறைஅரசாங்க மாகாணசேவைஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப் பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் தகைமைகளும் பரிசீலிக்கப்படும். பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சை ஒழுங்குவிதிகளுக்கமைய ஒழுகுதல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை
1. மன்னார் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா 100/= செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று உரிய திகதிக்கு முன்பதாக எமக்கு கிடைக்க கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்தில் உரியமுறையில் தேவையானதகவல்கள் பூரணப்படுத்தப்படா திருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு செயலாளர், மன்னார் பிரதேச சபை, பேசாலை என்ற முகவரிக்கு 28.02.2014ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். அதற்கு பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
4. தபால் உறையின் இடதுபக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் இலக்கம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
5. வழங்கப்படும் தகவல்கள் பொய்யானது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனம் இரத்துச் செய்யப்படும்

பதவிகள் பற்றிய விவரங்கள்

| பதவி இல | பதவியும் தரமும் |
|---|---|
| 01 | காரியாலயகாரியசகாயர் - தரம் III |
| 02 | வேலைத்தொழிலாளி - தரம் III |
| 03 | சுகாதாரத் தொழிலாளி - தரம் III |

சம்பளஅளவுத்திட்டம்: PL-1-2006-A(11730-120x10-130x10-145x10-160x10 -17600)
கல்வித்தகைமை
1. கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்குமேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.
2. போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 08 சித்தி பெற்றிருத்தல் கவனத்தில் கொள்ளப்படும்.

| பதவி இல | பதவியும் தரமும் |
|---|---|
| 04 | மின்னாளர் - தரம் III |

தொழில்சார் தகைமைகள்
இப் பதவிகளுக்குவிண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி விண்ணப்ப இறுதித்திகதி அன்று06 மாதங்களுக்கு குறையாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பயிற்சி சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.தேவை ஏற்படின் தொழிற்தகைமை பரிசீலிக்கப்படும்.
சம்பள அளவுத்திட்டம்: PL -2- 2006-A(12210-130x10-145x10-160x10-170x12-18600)
கல்வித்தகைமை
கல்விப் பொதுத்தராதரசாதாரணப்பரீட்சையில் இரண்டிற்குமேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது ஆறு (06)பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| பதவி.இல | பதவியும் தரமும் |
|---|---|
| 05 | நூலக பரிசாரகர் - III |

சம்பளஅளவுத்திட்டம்: PL-1-2006-A(11730-120x10-130x10-145x10-160x10 -17600)
கல்வித்தகைமை
கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாகஆகக்குறைந்தது ஆறு (06)பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

| பதவி.இல | பதவியும் தரமும் |
|---|---|
| 06 | சாரதி தரம் - தரம் III |

சம்பளஅளவுத்திட்டம்: PL-3- 2006-A (12,470-130x10-145x10-160x10-170x12-18860)

1. கல்வித்தகைமை
1. கல்விப் பொதுத்தராதரசாதாரணப் பரீட்சையில் இரண்டிற்குமேற்படாதஅமர்வுகளில் இரண்டுதிறமைச் சித்திகள் உள்ளடங்கலாகஆகக்குறைந்தது ஆறு (06)பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.
2. போதியவிண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதபட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை ஒன்றில் தரம் 08 சித்தி பெற்றிருத்தல் கவனத்தில் கொள்ளப்படும்.

ஏனைய தகைமைகள்
1. விண்ணப்பதாரிமோட்டார் போக்குவரத்துதிணைக்களஆணையாளரினால் வழங்கப்பட்ட வாடகை/தனியார் மோட்டார் கார் 24 அந்தருக்கு குறையாத பார ஊர்தி செலுத்தக் கூடிய சாரதி அனுமதிப் பத்திரத்தை விண்ணப்ப இறுதித் திகதிக்கு 03 வருடத்திற்கு முன்னர் பெற்றிருக்க வேண்டும்.
2. மோட்டார் வாகன சாரதியாக 03 வருட அனுபவத்திற்கான சான்றிதழ்.
3. விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 05அடி 2½ அங்குலம் உயரம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரி இரவுபகல் எந்நேரமும் சேவையாற்றக்கூடியஉடல் உறுதியை கொண்டிருப்ப துடன் சிறந்த கண்பார்வையை கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
5. பெருந்தெருக்கள் விதிமுறைகள் பற்றிய சிறந்த அறிவை கொண்டிருத்தல் வேண்டும்.
6. விண்ணப்பதாரி கழிவகற்றும் உழவு இயந்திரம் உட்பட அனைத்து வாகனங்களும் செலுத்துதல் வேண்டும்

★ குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்பாக அதனுடன் தொடர்புடைய அனு பவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சிறில் மரியநாயகம் யேசுநேசன்
செயலாளர்
மன்னார் பிரதேச சபை.
(சி/12021)(7.3)

## ஐ.ஐ.எஸ்.சிற்றி கம்பஸ் பட்டமளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்.பெப்.13
ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸின் 18 ஆவது நிறுவுன தின நிகழ்வும் பட்டமளிப்பு விழாவும் நாளைமறுதினம் சனிக் கிழமை காலை 9 மணிக்கு மின்சார நிலையவீதியில்அமைந் துள்ள ஹற்றன் நஷனல் வங்கியின் பசுமைக் கட்டடத்தின் பிரதான மண் டபத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் 2013/2014 ஆம் ஆண்டில் தமது கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சிறப்பு விருதுகளும் வழங்கப் படவுள்ளன.
(வ-14)

## திக்கம் பாலர் பாடசாலை கால்கோள் விழா

நெல்லியடி, பெப்.13
திக்கம் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் பாலர் பாடசாலையின் கால்கோள் விழா, நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் நிலையத் தலைவர் க.சுதேஸ் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி ஸ்ரீவடிவாம்பிகை சிவராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன், பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் பூ.சஞ்சீவன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஓ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது பௌதிகவியல் ஆசிரியர்
உயர்திரு
கனகரட்ணம் சிவசுதன்
(B.Sc)
அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு
நியமனம் பெற்றமைக்காகவும்
க.பொ.த.உயர்தரப் பரீட்சையில்
நாம் சிறந்த பெறுபேறுகளைப் பெற கற்பித்து
வழிவகுத்தமைக்காகவும், அவரது பணிகள் மேன்மேலும்
தொடரவும் இறை ஆசியுடன் வையகத்தில்
பல்லாண்டுகாலம் வாழ்வாங்கு வாழவும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள்
த.சிவதால் - 3A தேசியமட்டம் 6ஆம் இடம்
சகானன் - 3A மாவட்டநிலை 1 (கிளிநொச்சி)
கிருஷிகா - 3A மாவட்ட நிலை - 24
கௌதமி 2AB மாவட்ட நிலை - 43

## பெயர் மாற்றம்

3ஆம் குறுக்குத்தெரு, அராலி வீதி, பொம்மவெளி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சிங்காரவேலு சத்தியசீலன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை சிங்காரவேலு அப்துல் றகுமான் பசீர் எனப் பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத் தருகின்றேன்.
சி.அப்துல் றகுமான் பசீர் (44634)(7.6)

## விநியோகஸ்தர்கள் தேவை

கீழ்க்காணும் உற்பத்திகளை தயாரிக்கும் எமது நிறுவனத்திற்கு வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களுக்கு விநியோகஸ்தர்கள் தேவை. உற்பத்திகளாவன இனிப்புப் பொருள்கள், தண்ணீர்ப் போத்தல், பழரசப் பானம், பப்படம், நூடில்ஸ், ரொபி வகைகள், சரக்குப் பொருள்கள் இன்னும் பல.
தொடர்புகளுக்கு:
A.G.S.R Confecneries Pvt Ltd
(Wattala)
T.P. - 077 825 0019, 077 251 7952
011 319 3731 (43156)(7.6)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நல்லறிவும் நற்குணமும் நாடி வந்து
நலமிகு நன்மைகள் நாளும் ஆற்றி
நல்லவர் என்பதன் நாமம் விளக்கி
நயமுடன் பணியாற்றும் நம் தாயே! வாழ்க!

எமது மாவட்டத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு
அரும்பணியாற்றி, யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகத்தின் 29ஆவது பட்டமளிப்பு
விழாவில் முதுகலைமாணி (திறமைச்சித்தி)
பட்டம் பெற்ற, கிளிநொச்சி கல்வி வலயத்தின்
தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர்
திருமதி பிறேமா மதுரநாயகம்
(B.A(Hons)P.G.Dip.in Ed. (merit)
M.Ed.(Hons)S.L.T.S -I)
அவர்கள் இன்னும் பல சிறப்புப் பட்டங்களைப்
பெற்று இறையருளால்
அரும்பணியாற்ற பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
தமிழ்ப்பாட ஆசிரியர்கள்-கிளிநொச்சி
கல்வி வலயம் -கிளிநொச்சி
(43519)(5.6) Congratulation

## பதவி வெற்றிடங்கள்

வவுனியா நகர எல்லைக்குள் இயங்கும் ஆடை தயாரிப்பு கம்பனி (பெண்களால் இயக்கப்படும்) ஒன்றுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கணக்காளர் தேவை (Accountant)
தகைமைகள் 1) க.பொ.த உயர்தரத்தில் வணிகப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியுடன் HNDA, AAT, Intermediate or final Level or CIMA Following
2) கணக்கீடு சார்ந்த துறையில் பணியாற்றிய 2 வருட முன் அனுபவம்

* விற்பனை பிரதிநிதி தேவை (Sales Rep)
தகைமைகள் 1) க.பொ.த.உயர்தரத்தில் வணிகப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் தொடர்பான முன்னனுபவங்கள் இருப்பின் விரும்பத்தக்கது.

* களஞ்சியக் காப்பாளர் தேவை (Store keeper)
தகைமைகள் 1) க.பொ.த உயர்தரத்தில் வணிகப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2) களஞ்சியப்படுத்தல் தொடர்பான முன்னனுபவமிருப்பின் விரும்பத்தக்கது.

* பொது தகைமைகள்
1) வயது 20-40 வரை (இலங்கை பிரஜை)
2) கணினி, ஆங்கிலம் மற்றும் சிங்கள அறிவு விரும்பத்தக்கது.
3) வவுனியா மாவட்டம் மற்றும் வடக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்டவர்களுக்கும் தகுதியான பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
4) சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் வேண்டும்.
5) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 024 222 4382
**விண்ணப்ப இறுதித் திகதி : 19.02.2014**
விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
மின்னஞ்சல் : kobigarm@gmail.com
தபால் முகவரி : முகாமை இயக்குநர்
**கோபிதன் காமென்ஸ் (PVT)Ltd.**
இல. 14, 8ஏக்கர், வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா.
(43157)(7.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்வன்மைப் போட்டி

மல்லாகம் குளமங்கால் றோ.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பாடசாலையின் பதில் அதிபர் சி.சிவலோகநாதன் தலைமையில் ஸ்ரீபாஸ்கரன் மைதானத்தில் இடம்பெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி றெக்னோ அடிகளார் கலந்து கொள்வார். (வ)

◆◆◆

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்றுவியாழக்கிழமைபிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.
பிரதமவிருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணமும், சிறப்பு விருந்தினராக யாழ்.கல்வி வலய சேவைக்கால ஆங்கில ஆசிரிய ஆலோசகர் கே.சுப்பிரமணியமும் கலந்துகொள்வர். (வ-135)

◆◆◆

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய இல்ல மெய் வன்மைப் போட்டிநாளைவெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம் பெறும்.
வித்தியாலய அதிபர் திருமதி ஆ.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) வே.பாலசுப்பிரமணியமும், சிறப்பு விருந்தினர்களாக பாடசாலை பழைய மாணவியும், தென்மராட்சி கல்விவலயகணக்காளருமான திரு மதி சிவமதி நந்தகுமார், வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோ சகர் ந.ஸ்ரீகாந்தா, வலய சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர்திருமதி பு.ஈழநேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

◆◆◆

அளவெட்டி தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் இல்ல மெய் வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.
பாடசாலை அதிபர் க.சிவபாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன் கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக ஆரம்பக் கல்வி முதன்மை ஆசிரியர் ஜெ.மயில்வாகனம், யா/ கட்டுவன் புலம் மகா வித்தியாலய அதிபர் வா.தர்மபாலசுந்தரம் மற்றும் அளவெட்டி மேற்கு ஜே/ 220 பிரிவு கிராம அலுவலர் புபூாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-10)

◆◆◆

இணுவில் மத்திய கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் பி.ப 1.30 மணிக்கு நடை பெறவுள்ளது.
கல்லூரியின் பிரதி அதிபர் ம.உதயகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடற் பிரிவு) சு.தேவமனோகரனும் சிறப்புவிருந்தினராக கல்லூரியின் பழைய மாணவன் க.பகீரதனும் கலந்து கொள்வார். (வ-10)

◆◆◆

ஏழாலை மகா வித்தியா லயத்தின் இல்ல மெய்வன் மைப் போட்டி இன்று பி.ப ஒருமணிக்கு பாடசாலை மைதா னத்தில் நடைபெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் மா.ஆனந்தகுமார் தலை மையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்குபிரதம விருந்தி னராக பழைய மாணவனும் ஓய்வு பெற்ற ரயில் நிலைய அதிபருமான ரி.ரி. சம்பந் தரும் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற வடபிராந்திய முகாமையாளர் சி.விக்னராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-10)

◆◆◆

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
வித்தியாசாலையின் அதிபர் தி.தேவதயாளன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சந்திரராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக இயன் மருத்துவர் ஜே.ஞானதீபன், சட்டத்தரணி கே.கிருஸ்ணவேணி மற்றும் வலி தெற்கு பிரதேச சபையின் எதிரணித் தலைவர் ஐ. அரிக ரனும் கலந்துகொள்ள வுள்ளனர். (வ-10)

◆◆◆

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடை பெற வுள்ளது.
பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண விவ சாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவி ருத்தி, நீர்ப்பாசனம் மற்றம் சுற்றாடற் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு.சற்குணராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-10)

◆◆◆

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய இல்ல மெய் வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் சு.கணேசதாசன் தலைமையில் நடைபெறும்.
பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி கோ.குலபாலசிங்கம், பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், ஆசிரிய ஆலோசகருமான திருமதி சுகுணராணி சண்முகேந்திரன் ஆகியோரும் பங்குபற்றுவர். (ஓ)

◆◆◆

பருத்தித்துறைவட இந்து ஆரம்ப பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகிலுள்ள மைதானத்தில் பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

◆◆◆


வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.
பாடசாலையின் அதிபர் திருமதி வே.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமா காண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜாவும் திருமதி தி.செல்வராஜாவும் கலந்து கொள்வர். (வ-10)

◆◆◆

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வன்மைப் போட்டிநாளை வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெற வுள்ளது.
கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலனும் சிறப்புவிருந்தினர்களாக பழைய மாணவரும் வைத்திய நிபுணருமான வைத்திய கலாநிதி அ.ரகுபதி மற்றும் திருமதி வதனி ரகுபதி ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ளனர். (வ-10)

## கும்பாபிஷேக மலர் வெளியீடும் மூத்தோர் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், பெப்.13
சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி அங்கணமக்கடவை ஸ்ரீமீனாட்சி கண்ணகை அம்மன் ஆலய கும்பாபிஷேக மலர் வெளியீடும் மூத்தோர் கௌரவிப்பும் இன்று வியாழக்கிழமை ஆலய பரிபாலன சபைத்தலைவர் செ.குமரகுருபரன் தலைமையில் ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் காலாநிதி செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் கலந்து கொள்ளவுள்ளார்.
நூல் வெளியீட்டுரையை பண்டிதர். தி.பொன்னம்பலவாணரும் வெளியீட்டுரையை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தனும் வழங்கவுள்ளனர்.
மூத்தோர்கௌரவிப்பில் ஊருணி உத்தமர் என்னும் சிறப்புப்பட்டம் வழங்கிக் கௌர விக்கப்படவுள்ளது. அமரர்களான பொ.முருகேசம்பிள்ளை, நா.சுந்தரலிங்கம், நா.விஸ்வலிங்கம் ஆகியோருக்கும் க.மளவராயர் (ஓய்வு பெற்ற அதிபர்), செல்வி நா.கற் பகவல்லி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), பிரம்மஸ்ரீ ச.சோமாஸ் கந்தக்குருக்கள் (ஓய்வு பெற்ற நிர்வாக உத்தி யோகத்தர்) ஆகியோருக்கும் இவ்விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (வ)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்றிருந்தார். அங்குள்ள முதியவர்களையும் கடமைபுரியும் அலுவலர்களையும் சந்தித்து உரையாடினார். இதன்போது அரச முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன், வடக்கு மாகாண சமூக நலத்துறைத் திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தர் த.சிறிகரன், நிதி உதவியாளர் எஸ்.சிவசுந்தரம், அரச முதியோர் இல்லத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் த.ரகுகரன் ஆகியோருடன் கலந்துரையாடினார். அங்கு தங்கியிருக்கும் முதியவர்களின் சுகநலன்களையும் அனந்தி விசாரித்து அறிந்து கொண்டார். (ஒ-51)

## இலட்சார்ச்சனை நிறைவு

தெல்லிப்பழைஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தில் இலட்சார்ச்சனை நிறைவு பூர்ணாகுதியுடன் நாளை நிறைவடையவுள்ளது. (வ)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.13
'யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறும்.
இந்தக் கூட்டத்தில் பெற்றோர்களைக்கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## நாளை இரதோற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.13
ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும், மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஓ)

## யோகா பயிற்சி

யாழ்ப்பாணம், பெப்.13
'யாழ்.யோக அரங்கத்தினர்' நடத்தும் யோகா பயிற்சிக்கான அறிமுக நிகழ்வு நல்லூர் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நாளைவெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.
யோகா வகுப்புகள் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை ஒரு மணி நேரம் தொடர்ந்து 30 நாள்கள் நடைபெறும். (ஓ)

## போதையில் ஓட்டோ செலுத்தியவருக்கு அபராதம்

சாரதி அனுமதிப் பத்திரமின்றி மது போதையில் ஓட்டோ செலுத்திய திருகோணமலை வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
இந்த நபருக்கு எதிராக பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
ஓட்டோ சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இரண்டு குற்றங்களுக்குமாக 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித் துத் தீர்ப்பளித்தார் நீதிவான். (ஓ-9)


**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம் நடத்தும்**
**முழு நிலா நாள் கருத்தரங்கு**

| | |
|---|---|
| விடயம் | : நீரிழிவுடன் நீடித்த வாழ்வு வாழ்வது எப்படி? |
| வழங்குபவர் | : Dr.தி.சிறீகரன் MBBS.M.D.MRCP(UK) (பொது வைத்திய நிபுணர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை) |
| காலம் | : 14.02.2014 வெள்ளிக்கிழமை |
| நேரம் | : பி.ப. 3.30 மணி |
| இடம் | : குமாரசுவாமி மண்டபம் |

*அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

அனுசரணை: சாரங்கா நகை மாடம்
Money Exchange (Pvt)Ltd.
(44640)(7.6)



19 ஆம் ஆண்டு நினைவுகளில்...
அமரர் தியாகராசா அரசரத்தினம்
(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி நடாத்துநர்)



மண்ணில்: 18.04.1942
விண்ணில்: 14.02.1995
திதி:13.02.2014

எங்கள் அப்பாவே!
நித்திலம் விட்டு நீங்கள்
நித்தியத் துயில்கொண்டு
பத்தொன்பது ஆண்டுகள்
பறந்தோடிப் போயினும்
உங்கள் நினைவுகளை
சுமந்தபடியே நாம்.

உங்கள் நினைவுகளோடு :
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தொல்புரம் மேற்கு, சுழிபுரம். (சி.12011)



**யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ து)**
**கேள்வி அறிவித்தல்**
**கிணற்றுடன் அமைந்த காணி**

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு சொந்தமான கிணற்றுடன் கூடிய காணி விற்பனை செய்யப்படவுள்ளது.

★ கே.கே.எஸ் வீதியில் தட்டாதெரு சந்தியில் இருந்து காங்கேசன்துறை வீதி பக்கமாக வலப்பக்கத்தில் முதலாவது ஒழுங்கையில் எதிராக உள்ள பரப்பு 02 குழி 11.56 அளவுள்ள கிணற்றுடன் அமைந்த காணி விற்பனைக்குண்டு.
★ கேள்விப்பத்திரங்களினை சமர்ப்பிக்க விரும்புவோர் தமது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம், கேள்வித் தொகை என்பவற்றினை தெளிவாக குறிப்பிட்டு தமது கையொப்பத்துடன் இடது பக்கமேல் மூலையில் **காணி கொள்வனவிற்கான கேள்வி** என குறிப்பிட்டு மூடிய கடித உறையில் **தலைவர், யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் இல.637, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 28.02.2014 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.
★ காணியினை பார்வையிட விரும்புவோர் சமாசத்தின் தொலைபேசி இலக்கத்துடன் (021 2223131) அலுவலக நேரத்தில் செயலாளருடன் தொடர்புகொண்டு பார்வை இடமுடியும்.
★ கேள்வி விண்ணப்பம் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி:28.02.2014.
★ கிடைக்கப்பெற்ற மூடிய கேள்விப் பத்திரங்கள் இயக்குநர்சபை கூட்டத்தில் திறக்கப்பட்டு விலை மதிப்பீட்டிற்கு அமைய ஆராய்ந்து காணி விற்பனை தொடர்பான இறுதி தீர்மானம் இயக்குநர் சபையால் மேற்கொள்ளப்படும்.

சமாசத்தின் இயக்குநர் சபை தீர்மானத்திற்கமைய.

**செயலாளர்,**
**யாழ். மா.சி.க.கூ.சங்கங்களின் சமாசம்.**
(C/12630)(10.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும் ஆசிரியருமாகிய

**திருமதி அரியமலர் இராஜரத்தினம்**

அவர்கள் கனடாவில் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு எமது கல்லூரிச் சமூகம் துயருறுவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். மேலும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். (44637) (10.6) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## கண்ணீர்க் காணிக்கை



எமது பாடசாலையில் தரம் 2 கல்வி கற்று 11.02.2014 அன்று அகாலமரணமடைந்த

**செல்வி யஸ்மிதா சுஜீகரன்**
**மற்றும் அவரது சகோதரன்**

ஆகியோரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவர்களது குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்கின்றோம்.

அதிபர், பிரதி அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள், (சி.12031) (45.6.3)
**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.**

## மரணஅறிவித்தல்கள்



**பொன்னம்பலம் மகேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற யாழ்.தபாலக ஊழியர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் மகேஸ்வரன் நேற்று முன்தினம்(11.02.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

16/16, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (44632)(5.6)

தகவல்: ம.சசிதரன்(மகன்)
HNB அசூரன்ஸ் முகாமையாளர்,
மாவிட்டபுரம்.



**திருமதி செல்லம்மா கனகசபை**
(தேவ இல்லம், கிழவிதோட்டம், கரவெட்டி)

யாழ். வடமராட்சி கரவெட்டி மத்தி கிழவி தோட்டத் தினை பிறப்பிடமாகவும், 2ஆம் கட்டை கோரக்கண்கட்டு பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா கனக சபை 09.02.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத் தம்பி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்க்ளான திரு.திருமதி கணபதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மரு மகளும், காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனை வியும், காலஞ்சென்ற கரவெட்டி செல்லையாவின் பாசமிகு சகோதரியும், தேவேந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்), தேவமலர் ஆகியோரின் அன்புத் தாயும், உடுவை எஸ். தில்லைநடராஜா (ஓய்வுபெற்ற முன்னாள் கிளிநொச்சி அரச அதிபர், இந்து சமய கலாசார திணைக்களப் பணிப் பாளர், மேலதிக செயலாளர் - கல்வி அமைச்சு), செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியும், புரட்சிதாசன், குலரூபன், தர்ஷிகா ஆகியோரின் அன்புப் போர்த்தியும், இஷான், மாதங்கி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.02.2014 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பரந்தன் கோரக்கண்கட்டு இந்து மயானத் தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
2ஆம் கட்டை,
கோரக்கண்கட்டு பரந்தன். (43169) (45.6)
க.தேவேந்திரன் (மகன்),
தொ.பே. 077 694 6184

### 'இயற்கை ஆடுகளம்' நடன அளிக்கைகள் நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்.இந்தியத் துணைத் தூதரகமும், திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடத்தும் இயற்கை ஆடுகளம் நடன அளிக் கைகழள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத் தூது கலை யகத்தில் இடம்பெறவுள்ளது. (வ-23)

### சமஸ்கிருத வகுப்புகள் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.பெப்.13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் யாழ்.மாவட்டத்தில் சமஸ்கிருத வகுப் புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், மகா பாரதம், தோத்திரங்கள், நாட்டிய நூல் கள் போன் றவை சமஸ்கிருத மொழியில் அமைந்திருப் பதால் அது தொடர்பான இலக்கண அறிவை ஏற்படுத்தும் நோக்குடன் இந்த வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆனைப்பந்தி, பருத்தித்துறை வீதியில் அமைந் துள்ள குருகுல மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த வகுப்புக்கள் தொடர்ந்து 3 மாத காலப் பகுதிக்கு நடைபெறும்.

ஆர்வமுடையவர்கள் சமஸ்கிருத மொழி வகுப்பு-2014, பணிப் பாளர், இந்து சமய கலா சார அலுவல்கள் திணைக் களம், 248/1, காலி வீதி, கொழும்பு-14 என்ற முகவரிக்கு தமது விவரங்களை அனுப்பி வைக்கலாம். (வ-14)

### சொற்பொழிவு

இலங்கை மனவளக் கலை மன்ற அறக்கட் டளை வழங் கும் சிறப் புச் சொற்பொழிவு இன்று நடைபெறவுள்ளது.

இணுவில் அறிவால யத்தில் பிற்பகல் 4 மணிக்கு 'மனி தனை மனிதனாக மாற்றும் மனவளக்கலை யோகா' என்ற தலைப்பிலான சொற் பொழிவே நடை பெறவுள்ளது.

இதனை இந்தியாவைச் சேர்ந்த மனவளக்கலை முதுநிலை பேராசிரி யர் டாக்டர். எஸ். இலக் குமணன் நடத்தவுள் ளார். (வ-10)

## மரண அறிவித்தல்

**திருமதி பராசக்தி தெய்வேந்திரன்**



காங்கேசன்துறையைப் பிறப் பிடமாகவும், இல.25, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டுக் குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி தெய்வேந்திரன் 11.02.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான தெய்வேந்திரம்-திலகவதி தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், தெய்வேந்திரனின் மனைவியும், யோகராணி (ஆசிரியை, யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), சந்திரகலா (லண்டன்), சத்தியமோகன் ஆகியோரின் பாசமிகு தாயும், குணாளன் (Ark Enterprises, Jaffna), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் மாமியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2014) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயா னத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(44636) (7.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

**பொன்னர் சரவணை**
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)



புத்தூர் வடக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் சரவணை நேற்றுமுன்தினம் (11.02.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்-சம்பரம் தம்பதி யரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி-பாறுவதி தம்பதியரின் மருமகனும், திருஞானத்தின் அன்புக் கணவரும், சியாமளா, சந்திரவதனா (அமரர்), அருந்ததி (டென்மார்க்), சர்வா னந்த மூர்த்தி (இத்தாலி), நந்தகோபன் (அமரர்), ஞானவேல் (அம ரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரராசா (அமரர்), தவராசா, சூரியகுமார் (டென்மார்க்), சிவரூபினி (இத்தாலி) ஆகி யோரின் அன்பு மாமனும், கஜீவ்ராஜ் (ஆசிரியர்-சென் சேபையர் மகளிர் கல்லூரி), ஜர்சன் (K.F.C யாழ்.), வினோஜன் (ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்), மிருணா (யாழ்.பல்கலைக்கழகம்), மதுராந்த் (ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி), கீர்த்தி (டென் மார்க்), அருண் (டென்மார்க்), மிமோஷா (இத்தாலி), சரண் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2014) வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது இல்லத் தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புத்தூர் இந்துசிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புத்தூர் வடக்கு, புத்தூர்.** (சி/12033) (10.6) **தகவல்: குடும்பத்தினர்.**

## பொன்னு தம்பையா

(விசுவலிங்கம்-புகையிலை வியாபாரி)



எழுதுமட்டுவாழ் தெற்கை நிரந் தர வசிப்பிடமாகவும், நல்லூரில் தற்போது வசித்தவருமாகிய பொன்னு தம்பையா நேற்று முன்தினம் (11.02.2014) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லி புரம்-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கண வரும், பாறுப்பிள்ளையின் சகோதர னும், செல்வநாயகம் (கஜன் களஞ் சியம்), மனோகரன் (சுவிஸ்), பாஸ்க ரன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சானுதேவி, புஸ்பலதா (சுவிஸ்), றஜனி (சுவிஸ்), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், கஜானன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்), சயந்தி, சங்கவி, இந்துஷன், ஆதவன், துஷா, அதிர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் இராசமணி, பாலசுப்பிரமணியம் வேல்முருகு (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்), தவமணிதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2014) வியாழக்கிழமை பி.ப 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.706,
பருத்தித்துறை வீதி, நல்லூர்.
077 613 7285
(44843) (10.6)
தகவல்:
த. செல்வநாயகம் (கிளி-மகன்).



## வருஷாப்திக அழைப்பு

கடந்த 24.02.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த

எமது குடும்பத் தலைவர்

**அமரர் பிரம்மஸ்ரீ**
**புவனசபாபதிக்குருக்கள்**
**சதாசிவக்குருக்கள்**

(திருநெல்வேலி சிவன்கோயில் பிரதம குருக்கள்)

அவர்களின் வருஷாப்திக கிரியைகள் இன்று மாசி மாதம் முதலாம் நாள் (13.02.2014) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'ஸ்ரீ சிவகாமி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வர சம்மேளன கிரம நாமார்ச்சனா'
நூல் வெளியீடும் இடம்பெறும்.

(44630) (5.6)

கல்வியங்காடு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்பு உற்பத்திக்குத் தண்டம்

கிளிநொச்சி ஜெயந்தி நகர்ப் பகுதியில் ஒரு போத்தல் கசிப்பு, கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் ஆகியவற்றை வைத்திருந்த ஒருவருக்கு கிளி நொச்சி நீதிமன்றம் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.
இதேவேளை வட்டக்கச்சிப் பகுதியில் நான்கு போத்தல் கசிப்பை வைத்திருந்த நபர் ஒரு வருக்கு 60 ஆயிரம் ரூபா தண் டமாக விதிக்கப்பட்டது. (க-18)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் அவர்களின்
அன்புத் தாயார் திருமதி பசுபதி வெள்ளையம்மா
அவர்கள் 10.02.2014) அன்று காலமாகிவிட்டார். அவரது பிரிவால் துவண்டிருக்கும் உறவுகளின் துயரில் நாமும் இணைந்திடுவோம்.

நிர்வாகிகள், அங்கத்தவர்கள்
பணியாளர் நலன்புரிச் சங்கம்,
பனை அபிவிருத்திச் சபை.

பணிப்பாளர்கள்,
பனை அபிவிருத்திச் சபை.

## கண்ணீர் அஞ்சலி

எமது தீவகக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் அதிகாரியாகப் பணியாற்றும்
திரு. வே. தவேஸ்குமார் அவர்களின் அன்புத் தாயார்
அமரர். தனலட்சுமி வேதாரணியம்
அவர்கள் 11.02.2014) அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம், வேலணை.

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் பரமலிங்கம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கு, கண்ணன் கடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பரமலிங்கம் (கனகநாயகம்) நேற்று முன்தினம் (11.02.2014) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மாரிமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-நாகம்மா தம்பதியரின் மருமகனும், நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் கலாமாலினி (ஜேர்மனி), இரவீந்திரன் (லண்டன்), குமுதினி பாமினி (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், மகேந்திரன் (ஜேர்மனி), உருத்திரகுமாரி (லண்டன்), கணேசநாதன், பரராயசேகரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், விதுர்ஷன், விஷ்மன், விபீஷன், மதுஷா, ருக்மனா, ரபீச்சனா, ஆரபி, அபிரா அர்ஷனா, சஜீன், கஜன், ஆஜித் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிற்சபேசு, சண்முகநாதன், திருவிளங்கம் மற்றும் விசாலாட்சி, மனோன்மணி, மீனாட்சி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பத்மநாதன், குகநாதன், காலஞ்சென்றவர்களான தேவன், கண்ணன், துரைராசா, முருகேசு மற்றும் சுப்பிரமணி, கமலாதேவி வசந்தமல்லிகா, இராசலட்சுமி, செல்வராணி, சந்திரா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2014) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடுவில் தெற்கு, கண்ணன் கடையடி,
உடுவில். 077 501 8156
(44646) (10.6)
தகவல்:
குடும்பத்தினர்.

## அறிவூட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம்.பெப்.13
யாழ்ப்பாண வர்த்தகத் தொழில் துறை மன்றமும் இலங்கை பணிப்பாளர் தனியார் நிறு வனமும் இணைந்து நடத்தும் 'சட்ட நடைமுறைகளூடாக தொழில் முயற்சியை வெற்றிகர மாக முன்னெடுத்தல்' என்ற தலைப் பிலான அறிவூட்டல் செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். கிறீன் கிறாஸ் சுற்றுலா விடுதியில் நடைபெறவுள்ளது.
இந்தச் செயலமர்வில் கம்ப னி களது சட்டபூர்வ தன்மை கள் மற்றும் கடைப்பிடிக்க வேண் டிய அடிப்படை தேவைப்பாடுகள், அவற்றின் நிதி, கணக்கீடு மற்றும் வரி முறைமைகள் தொடர் பான பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளன.
செயலமர்வில் பங்கு பற்ற ஆர் வமுடையோர் இலக்கம் 124, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந் துள்ள யாழ்ப்பாண வர்த்தகத் தொழில் துறை மன்றத்தின் அலுவலகத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற் கொள்ளலாம். (வ-14)

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பலசரக்கு கடையொன்றுக்கு நடத்துநர் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சுன்னாகத்தை அண்டியிருப்போருக்கும், இளைப்பாறிய உத்தியோகத்தர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
(44704) (10)
விவரங்களுக்கு :
077 386 7695/077 230 6642

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்-
19.02.1981

விண்ணில்
24.02.2013



அமரர்
சிவபாதம் சௌந்தரராசன் [S.S]
திதி: சதுர்த்தசி [13.02.2014 வியாழன்]

அன்பான எனது மகனே!
பண்பின் பொக்கிசமான சோதரனே! குடும்பத்தின் குலவிளக்கே!
எம்மை விட்டு பறந்துசென்றதேனோ! உன்னைப் பிரிந்து
கண்ணீர் மல்க நீ நடந்த பாதையைப் பார்த்து
ஏங்கித் தவிக்கின்றோம் ஐயா!

என்றும் உங்கள் நினைவில்
சி.இந்திரவதி [அம்மா]
சி.இந்திரஜித் [சகோதரன்]

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கலாவதி அதிஷ்டரட்ணம்



ஆண்டொன்று உமைப்பிரிந்து வாடுகின்றோம் உத்தமியே!
ஆறாத்துயர் எமக்களித்து பிரிந்துமேன் சென்றீர்?
பாசத்தின் உறைவிடமே! குடும்பத்தின் குலவிளக்கே!
உங்கள் அன்புக்கு ஈடுண்டோ இவ்வுலகிலே.
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

முதலியார் மகேசன் றோட்,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

சகோதர, சகோதரிகள்,
குடும்பம்.

(44645)(10.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
18.02.1988

மறைவு
15.01.2014



### அமரர் சரவணபவன் கஜமாறன்

கடந்த 15.01.2014 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு சரவணபவன் கஜமாறன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (14.02.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து சுன்னாகம் வரியப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

வரியப்புலம், சுன்னாகம். (44701)(10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி (ஈஸ்வரி) இராசலிங்கம்



யாழ்ப்பாணம், நீராவியடி, இல. 118, பிறவுண் வீதியைப் பிறப்பிடமாகவும், 25/6, பிறவுண்வீதி, முதலாம் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்டு, தற்போது டென்மார்க்கில் வசித்தவருமாகிய திருமதி மகேஸ்வரி இராசலிங்கம் நேற்றுமுன்தினம் (11.02.2014) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சங்கரப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், K. கமலாதேவி, S. சேதுபதி, R. கனகேஸ்வரி, S. சோதிமலர், S. முருகையா, S. மகாதேவன், JR. உமாதேவி (கனடா), T. பரமேஸ்வரி, S.வெற்றிவேல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் R. விஜய சறோஜா (விஜி-டென்மார்க்), R. ராஜ்குமார் (கண்ணன்-கனடா), S. றஜனி (ராஜி- ஜேர்மனி), R. ஸ்ரீகுமார் (அமரர்) ஆகியோரின் அன்புத் தாயும், N. ரவிச்சந்திரன் (டென்மார்க்), R. விஜித்தா (கனடா), V. சிற்சபேசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமி யும், R. பிரதாப், R. பிரியா, R. பிரீபன், R. பிரியந். R. அனீஸ் (டென்மார்க்), R. றுத்வி (கனடா), S. விதுர்ஷன், S. றிஷி, S. ஷரண் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.02.2014) வியாழக்கிழமை இலங்கை நேரம் 5.30 இக்கு டென்மார்க் Hurning இல் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புக்கு: டென்மார்க்
0045 97 209 025
0045 91 726 159
(44702) (10.6)

தகவல்: சகோதரி T. பரமேஸ்வரி (தயா)
47, மணிக்கூட்டு ஒழுங்கை, நீராவியடி,
T.P: 077 6510 194

## இதய அஞ்சலி



சின்னத்துரை
பரமேஸ்வரி



சின்னத்துரை
சிவனேசன்



சோதிலிங்கம்
மதீபன்



சுஜீகரன் யஸ்மிதா



சுஜீகரன் பதுமன்

ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக
நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக்
கழகத்தினதும் முன்னாள்
தலைவரும் நிலைய உறுப்பினருமான
**அமரர் சின்னத்துரை சிவனேசன்** அவரது
தயாரான **அமரர் சின்னத்துரை பரமேஸ்வரி**
மற்றும்
**சுஜீகரன் யஸ்மிதா, சுஜீகரன் பதுமன், சோதிலிங்கம் மதீபன்**
ஆகியோரின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம்.
இவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தி னருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ அற்புத
நர்த்தன விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

**ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் கனடா வாழ் நண்பர்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறையற்ற நியமனங்களை ரத்துச் செய்ய வேண்டும்

## அரச பொது ஊழியர் சங்கம் வடக்கு முதல்வருக்கு மனு

அம்பாறை, பெப்.13

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் முறையற்ற, அநீதியான முறையில் வழங்கப்பட்டுள்ள புதிய நியமனங்களை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கு அனுப்பிவைத்துள்ள மனு ஒன்றில் மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடமாகாணத்திலுள்ள சில மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளில் அட்டவணைப்படுத்தப்படாத மற்றும் அலுவலகப் பணியாளர் பதவிகளுக்குரிய நியமனங்கள் வழங்கலில், முறையற்ற, அநீதியான செயற்பாடுகள் கடந்த காலங்களில் நடைபெற்றுள்ளன.

இதனால் பல வருடகாலமாகக் கடமையாற்றும் பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் தொடர்ந்தும் அவர்களுக்கு நீதி வழங்கக் கோரி பல சாத்வீகப் போராட்டங்களை அண்மைக் காலமாக மேற்கொண்டு வருவதை நாமறிவோம்.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண சபை அமர்வில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தும் சில சபைகள் இந்தத் தீர்மானத்தைக் கவனத்தில் கொள்ளாது புறந்தள்ளி செயற்பட்டிருப்பதனால் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் எமது தொழிற் சங்கத்தின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேச சபை, கரைதுறைப்பற்று பிரதேசசபைகளில் புதிய நியமனங்கள் சபைகளின் செயலரினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த நியமனங்கள் நிரந்தர அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது.

இதன் காரணமாக பல வருடங்களாக குறித்த பதவிகளில் அமர்த்தப்படுவோமென நம்பிக்கையுடன் கடமை புரிந்து வந்த சாரதிகள், நூலகப் பணியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாண சபை அமைப்பதற்கு முன்னரும், பின்னரும் இடம்பெற்று வரும் இவ்வாறான செயற்பாடுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சி அமைச்சின் முன் அனுமதி பெறப்படாமல் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பின் அவற்றை உடன் ரத்துச் செய்வதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடமாகாண சபையின் தீர்மானத்துக்கு முரணாக செயற்பட்ட குறித்த சபைகளின் செயலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் தொடர்பில் அசமந்தமாக இருப்பின் எதிர்காலத்திலும் இத்தகைய செயற்பாடுகள் வடமாகாண சபையின் கீழ் செயற்படும் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகரிக்கவும், சபையின் தீர்மானத்தை உதாசீனப்படுத்துவதற்கும் சந்தர்ப்பமான அமையும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-30)

## 4 ஆம் குறுக்கு வீதி மக்கள் பாவனைக்கு

மட்டக்களப்பு, பெப்.13

ஜெய்க்கா வேலைத்திட்டத்தின் கீழ் 1 கோடி 70 லட்சம் ரூபா செலவில் வடிகாலமைப்புடன் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு, புதிய காத்தான்குடி, 4ஆம் குறுக்கு வீதி ஞாயிற்றுக் கிழமை மாலை பொது மக்கள் பாவனைக்கு உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த வீதியை சவுதி அரேபிய பேராசிரியர் அஷ்ஷேய்க் ஹூஸைன் அல் குறைஷ் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் நாடா வெட்டி திறந்து வைத்தனர். (ச)

## தெளிவூட்டும் செயலமர்வு

அம்பாறை, பெப்.13

அம்பாறை மாவட்டத்தில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக பிராந்திய ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டும் செயல மர்வு எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அம்பாறை மாவட்ட அரச அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான அழைப்புக் கடிதங்கள் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு அரச தகவல் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச)

## திருமலை மண்ணில் எவரும் அகந்தையுடன் வாழ முடியாது

### மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு

திருகோணமலை மண்ணில் நான் என்ற அகந்தையுடன் எவரும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்ததாக இல்லை. இங்குள்ள தெட்சண கைலாயத்தில் குடிகொண்டுள்ள கோணேஸ்வரர் உடனுறை மாதுமை அம்பாள் அருளாட்சி புரியும் இந்த மண்ணில் வாழ்பவர்கள் பயம் கலந்த பக்தியுடனேயே வாழ வேண்டும்.

இவ்வாறு மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கம் இளஞ்செழியன் தெரிவித்தார்.

'திருக்கோணேஸ்வரம்' தொன்மை மிகு மாதுமை உட னுறை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் வரலாறு உள்ளிட்ட தொகுப்பு நூல் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவர் இவ்வாறு தெரி வித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நமது மக்கள் ஓர் அறிவியல் பயணத்தைத் தொடர "திருக் கோணேஸ்வரம்" நூல் சிறந்த வழிகாட்டியாக அமையும். இந்த ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது. காலத்தால் அழியாத கோணேஸ்வரர் ஆலய வரலாற்றை உலகறிய பறைசாற்றும் அற்புதமான செயற்திட்டமாக இந்த நூல் வெளியீடு அமைந்துள்ளது.

எந்த ஆலயத்துக்கும் இல்லாத பல சிறப்பு திருக்கோணேஸ்வரத்துக்கு உண்டு. குளக் கோட்ட மன்னன் திருப்பணி செய்த ஆலயம். சிவபக்தன் இராவணன் வழிபட்ட சிறப்பும், திருஞான சம்பந்தர் தேவாரம் பாடிய வரலாறும் இந்த ஆலயத்தின் சிறப்புக்களாகும்.

இவ்வாறான ஒரு புத்தகத்தை நான் வெளியிடுவது பெருமையாகவுள்ளது. இந்த ஆன்மிக நூலின் பால் நாம் ஈர்க்கப் பட்டு இனி எமது மதத்தையும் இறை வனின் பெருமையையும் உலகறிய பறை சாற்றுவதே ஒவ்வொருவரின் கடமை- என்றார்.

திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இருந்து இந்த நூல் மேளதாள வாத்தியங்களுடன், கொடி, ஆலவட்டம் போன்ற பரிவாரங்களுடன் தொண்டர்களால் பல்லக்கில் வைத்து ஊர்வலமாக ஆலயத்தை சுற்றி இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ச-40)

## மாணவர்களுக்கு ஆலோசனைகள்

மட்டக்களப்பு,பெப்.13

அக்கரைப்பற்று தெற்கு தம்பிலு வில் இந்துமா மன்றத்தின் 2014 ஆம் ஆண்டின் விசேட கூட்டம் தம்பிலுவில், தாழையடி சிவன் ஆலய முன்றலில் நடைபெற்றது.

தம்பிலுவில் இந்துமா மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இந்தப்பகுதி உயர்தர மாணவர்களுக்கு பல ஆலோசனைகள் வழங்கப்பட் டன.

இந்தக் கூட்டத்தில் பல மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


### மரண அறிவித்தல்

#### சின்னத்துரை சிவநேசன்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிட மாகவும் குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவநேசன் நேற்று முன்தினம் (11.02. 2014) திங் கட்கிழமை அகாலமரணமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், வல் லிபுரம் கனகரத்தினம் -கமலாதேவி தம்பதியரின் அன்பு மரு மகனும், தர்மிளாவின் அன்புக் கணவரும், சிந்தூரி, கவீனா ஆகி யோரின் அன்புத் தந்தையும், தவநேந்திரன், பிரசன்னா, பிரதீபன் ஆகியோரின் அன்பு மைத்துன ரும், சிவானி, தேவிகா ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், அபிசன், அபினன், அன்சிகாவின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2014) வெள்ளிக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத் துச் செல் லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம் கோண்டாவில்
021 300 1104 077 3813721

தகவல் :
கனகரத்தினம்

### மரண அறிவித்தல்



சுசிகரன் யஸ்மிதா



சுசிகரன் பதுமன்

இருபாலை கோண்டாவில் வீதி, பழனி கோயில் றோட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுசி கரன் - சமீலா தம்பதியரின் பிள்ளைகளான யஸ்மிதா, பது மன் ஆகியோர் நேற்று முன்தினம் (11.02.2014) அதி காலை அகாலமரண மானார்கள்.

இவர்கள் ஜெயக்குமார்- தயாநிதி (சத்தியா), ஐயாத்துரை -கமலாதேவி (தேவி) ஆகியோரின் பேரப்பிள்ளைகளும் ஆவார்கள்.

இவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2014) வியாழக்கிழமை அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 5.00 மணியளவில் கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் :
0777 110427
சு. ஜெயக்குமார் (பேரன்)

### அந்தியேட்டி பிற்போடப்பட்டது

#### கந்தசாமி தேவரத்தினம் - வேலுப்பிள்ளை கந்தசாமி

துன்னாலை மத்தி கோவிற்கடவையைச் சேர்ந்த கந்தசாமி தேவரத்தினம் 10.01.2014, வேலுப்பிள்ளை கந்தசாமி 15.01.2014 இறைபதமடைந்தார்கள். அவர்களின் அந்தியேட்டி சபிண்டிகரண கிரியைகள் தவிர்க்க முடியாத காரணமாக 14.02.2014 அன்று நடைபெற மாட்டாது. பின்னர் நடைபெறும் தினம் அறிவிக்கப்படும்.

துன்னாலை மத்தி,
கோவிற்கடவை.
(C/12040)(10)
குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

#### திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை



கோண்டாவில் கிழக்கு, ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சின்னத்துரை நேற்று முன் தினம் (11.02. 2014) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சின்னத்துரையின் (கண்டாக்டர்) அன்பு மனைவியும், நன்னித் தம்பி, முத்துத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், சின்னத் தம்பி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசேஸ்வரி (சியாமளா, ஜேர்மன்), இரஞ்சிதமலர் (கலா, கனடா), தயாநிதி (சத்தியா), சாந்தினி (கொழும்பு), இராகினி (சுவிஸ்), கதிர் காமநாதன் (கனடா), காலஞ் சென்றவர்களான சிவநேசன், மகேசன் (ஜேர்மனி), தர்சிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், சோதிலிங்கம் (காந்தி, ஜேர்மனி), பாலசுந்தரம் (கனடா), ஜெயக்குமார், காலஞ்சென்றவர்களான சிவானந்தன் (வவு னியா), இரத்தினசபாபதி (மோகன், சுவிஸ்), சிவகௌரி (கனடா), தர்மிலா, கலைச்செல்வன் ஆகியயோரின் அன்பு மாமி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2014) வியாழக்கிழமை கோண்டாவிலில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6248151
0777 110427

தகவல் :
கதிர்காமநாதன் (மகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கமலை

பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்தப் பிணை விண்ணப்பம் எதிர்மனுதாரருக்கு அறிவித்தல் அனுப்பத் தகுதியுள்ள விண்ணப்பமா என்பது பற்றி முதலில் ஆராயப்படும். அதன் பின்னரே அந்த மனுவை மேல்நீதிமன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா அல்லது நிராகரிக்குமா என்பது தெரிய வரும்.

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியேல் றெக்ஷியன் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கந்தசாமி கமலேந்திரன், வேலணையில் வசிக்கும் ல.யசிந்தன் மற்றும் றெக்ஷியனின் மனைவி அனித்தா ஆகியோர் கடந்த டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட கமலுக்கு வடக்கு மாகாண சபை அமர்வில் பங்குபற்றுவதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில் தற்போது மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த-4)

### 61

டன் சேர்த்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 61 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் முன்னிலையில் அனுராதபுரம் சட்ட வைத்திய நிபுணர் டி.எல்.வைத்தியரட்ன தலைமையில் 22 ஆவது தடவையாக நேற்றுக் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை புதைகுழி தோண்டும் பணிகள் இடம்பெற்றன. இதன்போதே இரண்டு மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

இதேவேளை ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 2 மனித எலும்புக் கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டு 3 பெட்டிகளில் பொதி செய்யப்பட்டு மன்னார் நீதிவானின் உத்தரவுக்கமைய மன்னார் பொது வைத்தியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

புதைகுழி தோண்டும் பணி இன்று காலை மீண்டும் ஆரம்பமாகும். (த-56)

### இரண்டே

வயது-38) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தை யாவார்.

இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் நாவலர் வீதியூடாக வேகமாகச் சென்று ஆனைப்பந்திச் சந்தியைத் தாண்டிய போது. யாழ். ஆரியகுளம் பகுதியில் இருந்து பிரதான வீதியூடாக நல்லூர் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த ஓட்டோவுடன் மோதியது. இதனால் ஓட்டோ தடம் புரண்டது. மோட்டார் சைக்கிள் மின் கம்பத்துடன் மோதி நின்றது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் வாய் மற்றும் மூக்கு வழியாக இரத்தம் வெளியேறிய நிலையில் உடனடியாக அங்கு நின்றிருந்த மற்றொரு ஓட்டோவில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

விபத்தினால் ஓட்டோவில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதியான எஸ்.பத்மநாதன் (வயது 49) அவரது மனைவியான ப.மதிவதனி (வயது 48) பத்மநாதனின் தாயாரான எஸ். மனோன் மணி (வயது 73) ஆகியோரும் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில்

இதேவேளை, நேற்று முல்லைத்தீவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் எதிரேயிருந்த தூணுடன் மோதியதில் அதனைச் செலுத்திச் சென்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதான வீதியில் நேற்று முற்பகல் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் கண்டி அக்குறணை பகுதியைச் சேர்ந்த முஹம் மது ஹிஸ்மி (வயது -24) என்பவரே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் இவர் முல்லைத்தீவுக்குச் சென்று கொண்டிருந்தபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் நடப்பட்டிருந்த தூணுடன் மோதியதில் அவர் உயிரிழந்தார். அவரது சடலம் மாஞ்சோலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில்

மதவாச்சி- மன்னார் வீதியில் இறம்பைக்குளம் பகுதியில் நேற்று முற்பகல் வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதனால் அதில் பயணித்த இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்கள் பனேவ பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தவிர மாங்குளத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற ஹை ஏஸ் வாகன விபத்தில் இரண்டு சிறார்கள் உட்பட 5 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அதில் காயமடைந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் இன்னும் அதிதீவிர சத்திர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறார். அவ்வாறே புதுக்குடியிருப்பில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்ற விபத்தில் தாயும் மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதிவேகமே காரணம்

அதிவேகமாக மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களைச் செலுத்திச் செல்வதனாலேயே வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் - வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4-17)

### போர்

கான உத்தரவாதத்தையும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக்கொள்ளுமாறு பா.ஜ.கவின் தமிழகத் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

சம்பந்தனுடன்
ரகசிய சந்திப்பு

இது தொடர்பாக பா.ஜ.க.வின் மூத்த தலைவர்கள் இருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனைச் சென்னையில் இரகசியமாகச் சந்தித்துப் பேசினர். இலங்கையில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்கள்? உங்களின் யோசனைகளையும் தேர்தல் அறிக்கையில் சேர்க்கத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சம்பந்தனிடம் கூறியுள்ளனர். மத்தியில் அமைக்கப்படும் புதிய அரசு தூதரக ரீதியிலான நடவடிக்கைகளின் மூலம் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமா அல்லது இந்திரா காந்தி எப்படி கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டாரோ அதைப்போன்று (பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுத்து) ஈழ விவகாரத்திலும் மத்திய அரசு தீர்வு காண வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா என பா.ஜ.கவின் தலைவர்கள் சம்பந்தனிடம் கேட்டுள்ளனர்.

நாங்களே
புலியாகிவிடலாம்

இலங்கையில் நடந்த கொடுமைகளைப் பார்த்தபோது பேசாமல் விடுதலைப் புலி ஆகிவிடலாமா? என்று நான் கூடச் சில நேரங்களில் நினைத் தது உண்டு என்று பா.ஜ.க தலைவர் ஒருவர் இந்தச் சந் திப்பின்போது உணர்ச்சிவசப் பட்டு கூறியுள்ளார் என்றும் ஹிந்து வெளியிட்ட செய்தி யில் கூறப்பட்டுள்ளது.

அனைத்தையும் கேட்டுக்கொண்ட சம்பந்தன், ஈழத் தமிழர் பிரச்சினைக்கு இந்தியா எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தனக்குள் இருந்த சில யோசனைகளை முன் வைத்தார் என்றும் ஹிந்து தெரிவித்துள்ளது.

முடிவாக, ஈழப் பிரச்சினையில் காங்கிரஸ் அரசு செய்யத் தவறியதை மோடி தலைமையில் அமையும் புதிய அரசு அரசியலுக்கு அப்பாற்பட்டு நிச்சயம் செய்யும் என்று பா.ஜ.க தலைவர்கள் சம்பந்தனிடம் உறுதி மொழியளித்துள்ளனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள் ளது. (த-5)

### ஜெனிவா

யாளர் ஆகியோரிடம் சுட்டிக்காட்டினார் யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்த இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கிறேச் லொச்சன்.விசேட ஆலோசனையாளர் அடங்கிய குழுவினர், யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் நேற்று மாலை 4 மணியளவில் சந்தித்துக் கலந்துரையாடினர். சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த யாழ். ஆயர்,

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் அவர்கள் என்னிடம் கேட்டார்கள். மாகாண சபையின் செயற்பாடுகள் தொடர்பில் திருப்தியடைகின்றீர்களா என்று வினவினார்கள். வடக்கு மாகாண சபைக்கும், அரசுக்கும் இடையில் முறுகல் நிலை தொடர்கின்றது. வடக்கு மாகாண சபையுடன் அரசு முரண்படுவதால் மாகாண சபையைக் கொண்டு நடத்துவதில் கஷ்டமான நிலைமை காணப்படுகிறது என்று நான் அவர்களிடம் சுட்டிக்காட்டினேன்.

வடக்கு மாகாண சபையில் இலங்கை அரசுக்குக் கோபமூட்டக் கூடிய பிரேரணைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதனால் இன்னமும் முரண்பாடுகள் வலுப்பெற்றுச் செல்கின்றன. எனவே வடக்கு மாகாண சபையும் - அரசும் இணைந்து செயற்படவேண்டும் என்பதை அவர்களிடம் வலியுறுத்தியிருந்தேன்.

விசாரணை வேண்டும்

வடக்கு மக்களின் விருப்பம் தற்போது என்னவாக இருக்கின்றது என்று அவர்கள் என்னிடம் கேள்வியெழுப்பினர். அதற்கு, கடந்த காலப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பில் நிச்சயமாக விசாரிக்கப்பட வேண்டும். இலங்கையில் மாத்திரம் அல்ல அவை வெளியிலும் விசாரிக்கப்படவேண்டும். இந்த விசாரணைக்கான கோரிக்கை ஜெனிவாவில் முன்வைக்கப்படவேண்டும் என்று எங்கள் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

இதனால் உங்களுக்கு என்ன பயன் என்று தூதுவர் மீளவும் என்னிடம் கேட்டார். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கிடைக்க வேண்டும். அத்துடன் அவர்களுக்கு நீதியும், நியாயமும் கிடைக்கவேண்டும். மக்களால் பெரும்பாலும் முன்வைக்கப்படுகின்ற காணாமற்போனோர் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்குத் தகுந்த பதில் இன்னமும் வழங்கப்படவில்லை.

போதைப் பழக்கம்

போரின் பின்னர் தற்போது எங்கள் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருக்கின்றது. குடிப் பழக்கம் மற்றும் பாலியல் பலாத்காரம் போன்ற செயற்பாடுகள் அதிகரித்திருக் கின் றன. இவை போரினால் ஏற்படும் காயங்கள் என்பதையும் அவர்களுக்கு சுட்டிக் காட்டினேன் -என்றார் ஆயர். (த-5)

### ஜெனிவாவில்

இந்தத் தீர்மான வரைவு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் இணை அனுசரணையிலேயே சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 25 ஆவது கூட்டத் தொடரில் முன்வைக்கப்படும் பிரேரணை தொடர்பிலான கலந்துரையாடல், பிரிட்டன் நாடாளுமன்றத்தின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவல்கள் அமைச்சில் நடைபெற்றது.

இதில் தமிழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் பங்கெடுத்திருந்தனர். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் லீ ஸ்கொட் மற்றும் சிபொஹானி மக்டொச் இருவரும் தலைமை வகித்தனர்.

இலங்கை இதுவரையில் நம்பமான உள்ளகப் பொறி முறை விசாரணையை ஆரம்பிக்கவில்லை. இதனால் பிரிட்டன் அரசு, சர்வதேசப் பங்காளர்களுடன் இணைந்து சர்வதேச விசாரணை ஒன்றை இலங்கை மீது நடத்த வேண்டும். இலங்கைக்கு எதிரான பிரேரணையைச் சர்வதேச ஒத்துழைப்புடன் நிறைவேற்றுவதற்குச் சரியான தருணம் இதுவென்று பிரிட்டன் அரசு கருதுகின்றது. இந்த ஒத்துழைப்பை வழங்கக் கூடிய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பிரிட்டன் அரசு பணியாற்றி வருகின்றது. இலங்கையில் நீண்டகால நிலையான சமாதானத்தை உருவாக்கவும், நீதி நியாயத்தைக் காலதாமதமின்றிப் பெற்றுக் கொடுக்கவும் இந்தப் பிரேரணை வழிவகுக்க வேண்டும். இதேவேளை இலங்கை அரசு பிரேரணையை நடைமுறைப்படுத்தத் தவறின், இலங்கை அரசின் பயணங்களை முடக்குதல், அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் குறித்த கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (த-5)

### காணாமற்

மாதம் யாழ்.மாவட்டத்தில் அவை இடம்பெறவுள்ளன.

1990 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடையில் காணாமற்போனவர்கள் தொடர்பிலேயே ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளது. யாழ்ப்பாணத்தில் நாளை வெள்ளிக்கிழமை முதல் நான்கு நாள்கள் இந்த அமர் வுகள் இடம்பெறவுள்ளன.

நாளை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலும், நாளை மறுநாள் சனிக்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலும், எதிர்வரும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்திலும் இந்த அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த அமர்வில் சாட்சியமளிக்க 262 பேர் ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்டுள்ளனர்.

அமர்வுகளுக்குரிய ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் நாளையிலிருந்து அமர்வுகள் இடம்பெறும் என் றும் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார். (த-5-11)

### வடமாகாண

படுத்தும் துருப்புச்சீட்டாகவே வடமாகாண சபை காணப்படுகின்றது என்றும் அரசு குற்றம் சுமத்தியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பானது கொழும் பில் அமைந்துள்ள அக்கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது,

இன்று புலம்பெயர் தமிழர்கள் பயன்படுத்தும் ஒரு துருப்புச் சீட்டாகவே இந்த வட மாகாண சபை காணப்படு கிறது. இலங்கையில் மழை பெய்கிறது என அமெரிக்காவில் இருந்து கொண்டு குடைபிடிக்க முடியாது என்பதை இந்த வட மாகாணசபையினர் முதலில் புரிந்துகொள்ளவேண்டும்.

பிரச்சினைகள் குறித்து அரசோடு பேச அவர்களை நாம் அழைக்கிறோம். அப்படி பேசினால் நிச்சயமாக சிறந்த தொருதீர்வுமுன்வைக்கப்படும். இதற்கு அரசு என்ற ரீதியில் நாம் எப்போதும் தயார் நிலையிலேயே உள்ளோம். அப்பா இருக்கும்போது சித்தப்பா எதற்கு? எம்மோடு பேச வராவிடின் வடமாகாணசபைக்கே பாதிப்புகள் ஏற்படும் என்பதையும் நாம் இவ் வேளையில் கூறிக்கொள்ள வேண்டும். ஆகவே, வடக்கிலுள்ள பிரச்சினைகள் குறித்து முதலில் அரசோடு இணைந்து பேசி தீர்வை முன்வைக்க முயற்சிக்குமாறு நாம் இவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்" என்றார்.

### ஜெனிவாவுக்கு

கூறினார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த மாதம் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் நீங்கள் பங்குபற்றுவீர்களா ? என்று வடக்கு முதலமைச்சரி டம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர், தான் கூட்டத் தொடரில் பங்குபற்றப்போவதில்லை என்று குறிப்பிட்டார்.

அந்தக் கூட்டத் தொடருக்குப் பொருத்தமானவர் எமது மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தான் என்றும் அவர் கூறினார். அத்துடன் நாம் எமது நிர்வாக விட யங்களைப் பார்த்துக்கொள் கின்றோம். அரசியல் விடயங் களை எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்த்துக் கொள் வார்கள் என்றும் முதல்வர் குறிப்பிட்டார். (த-5)

### காணி பறிப்பு

தில் இடம்பெற்றுவரும் நில ஆக்கிரமிப்பு குறித்த வரைவுகள் இம் முறை உள்ளடக்கப்படும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ஜனவரி 31, பெப்ரவரி 1, 2 ஆகிய திகதிகளில் பிரிட்டன் சர்வக்கட்சி நாடாளுமன்றக் குழு, பிரிட்டன் தமிழர் பேரவை ஆகியன இணைந்து, வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வரும் இராணுவத்தின் ஆக்கிரமிப்பு குறித்து சர்வதேச மாநாட்டை நடத்தியிருந்தன.

இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டுக்குச்சென்ற கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் நேற்று முன்தினம் நாடு திரும்பினார்.

இந்நிலையில் அங்கு நடைபெற்ற மாநாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு இறுதி போருக்குப் பின்னர், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் இடங்களை இராணு வத்தினர் அரசின் அனுமதியுடன் திட்ட மிட்ட ஆக்கிரமித்துவருகின்றனர். இது இன அழிப்பை ஒத்த நடவடிக்கையாகும். தமிழினத்தை அழிக்கும் ஒரு முயற்சியாகவே இந்த நில ஆக்கிரமிப்பு இடம்பெறுகின்றது என்று லண்டனில் இடம்பெற்ற நில ஆக்கிரமிப்பு தொடர்பான மாநாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்துக் கூறியது.

மாநாட்டில் கலந்துகொண்டு சர்வ தேச நாடுகளின் பிரதிநிதிகள் அனை வரும் இதனை ஏற்றுக்கொண்டனர். இது தொடர்பில் ஐ.நா. மனித உரிமை சபையினூடாக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். எனவே, ஜெனிவா மாநாட்டில் அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையில் நில ஆக்கிரமிப்பு குறித்த சரத்துகள் இருக்கும் என நம்புகின்றோம்- என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யூனியன்ஸ், பிறைற் ஸ்ரார் அணிகள் இரண்டாம் சுற்றில்

வலி. வடக்கு, பெப். 13

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் தெல்லிப்பழை யூனியன்ஸ், பிறைற் ஸ்ரார் அணிகள் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் மோதத் தகுதி பெற்றுள்ளன.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் போட்டிகள் நடைபெற்றன.

தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டதில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 5:0 எனற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் சித்தன்கேணி கலைநகர் விளையாட்டுக் கழகமும் பண்டத்தரிப்பு பிறைற்ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன. பிறைற் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது. (த-86)

## இன்றைய ஆட்டங்கள்



வலி. வடக்கு, பெப். 13

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் தலைவர் 2013 வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் பதினொரு பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

ஈவினை கலைமகள் விளையாட்டுக்கழகம் எதிர் அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகம்.

அராலி கலைவாணி விளையாட்டுக்கழகம் எதிர் விளான் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம். (த-86)

↓ ↓ ↓

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத் தில் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றன.

அதில் பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட்டுககழக அணி மோத வுள்ளது.

பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

↓ ↓ ↓

யாழ்ப்பாணம், பெப்.13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வல்வை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வியாழக் கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலட்டி விளையாட்டுகழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# யாழ். பல்கலைக்கழக அணி ஆறு இலக்குகளால் வெற்றி



துடுப்பெடுத்தாடும் யாழ். பல்கலை அணி.

வலி. வடக்கு, பெப். 13

கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் அமரர்களான விக்ரம், இராஜன், கங்கு ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 30 பந்துப்பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் ஆறு இலக்குகளால் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டுக் கழகமும் யாழ்ப் பாணம் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக விளையாட்டுக்கழகம் 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.

தேவவிதுரன் ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களையும், தசீந்தன் 36 ஓட்டங்களையும், விதுஸ் 34 ஓட்டங் களையும், தனஞ்ஜெயகுமரா 32 ஓட்டங்களையும், அச்சுதன் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 15 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தீபன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சுஜன், யாதவன் தலா 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 33, 35 ஓட்டங்களுக்கு தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் காமாட்சியம்பாள்விளையாட்டுக்கழகம்25.1பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

சுஜன் 36 ஓட்டங்களையும், சுதர்சன் 27 ஓட்டங்களையும், திவாகர் 19 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரி களாக 11 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த றொமேஸ் 3.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 6 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், விதுஷ் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், தரணிதரன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், தவேந்திரன் 23 ஓட்டங்களைக் கொடுத்து ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள். (த-86)

# அராலி பாரதி, ஜேம்ஸ் அணிகள் இரண்டாம் சுற்றில் மோதத் தகுதி



வலி. வடக்கு பெப் 13

தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:-

அராலி பாரதி விளையாட்டுக் கழகமும் அராலி துணைவி சென் நியூ ஸ்ரார் விளை யாட்டுக்கழகமும் மோதிக் கொண்டதில் அராலி பாரதி விளையாட்டுக் கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் முதல் கோலை சென்நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் பெற்று முன்னிலையில் இருந்த வேளை தொடர்ந்து நான்கு கோல்களை பாரதி விளையாட்டுக் கழகம் பெற்றது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் இரு அணிகளிலும் வீரர்கள் இருவர் மஞ்சள் அட்டை காட்டி மத்தியஸ்தரினால் எச்சரிக்கப்பட்டார்கள்.

ஆட்ட நிறைவில் சென் நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை 4:1 என்ற கோல் கணக்கில் பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றிகொண்டு இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

மற்றுமொரு ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழகமும் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழகம் இறுதி நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டு 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாம் சுற்றில் விளையாடத் தகுதி பெற்றது.

இந்தப் போட்டியில் அண்ணா விளையாட்டுக்கழக வீரர்கள் மூவரும், ஜேம்ஸ் விளையாட்டுக்கழக வீரர் ஒருவரும் மஞ்சள் அட்டை காட்டப்பட்டு மத்தியஸ்தரினால் எச்சரிக்கப்பட்டார்கள். (த-86)

## கரவெட்டி பிரதேச உதைபந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், பெப். 13

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (த-23)

## போட்டி நிரல் தயாரிப்பு இன்று

யாழ்ப்பாணம், பெப். 13

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட (வடமராட்சி வடக்கு) பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கான பிரதேச விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான அட்டவணை இன்று வியாழக் கிழமை பி.ப.2.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தயாரிக்கப்பட இருப்பதனால் விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் கேட்டுள்ளார். (த)

## பூப்பந்தாட்ட சங்கத்தின் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். மாவட்டப் பூப்பந்தாட்ட சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று வியாழக் கிழமை மாலை 5 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (த-23)

# ஆண்களில் நிலாஜோதி; பெண்கள் பிரிவில் பாரதி

*தாச்சிப் போட்டியில் சம்பியன்*

யாழ்ப்பாணம், பெப்.13

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான தாச்சிப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் புங்குடுதீவு நிலாஜோதி விளையாட்டுக்கழக அணியும், பெண்கள் பிரிவில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழக அணியும் வெற்றி பெற்று சம்பியனாகின.

மேற்படி போட்டிகள் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு புங்குடுதீவு நஷரேத் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் பெண்களுக்கான போட்டிகள் ஆரம்பமாகின. பெண்கள் பிரிவில் நான்கு கழகங்கள் மோதிக் கொண்டன. இறுதிச் சுற்றில் புங்குடுதீவு பூாரதி விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு நஷரேத் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. இடைவேளை வரை நடைபெற்ற போட்டியில் பாரதி விளையாட்டுக்கழகம் மூன்று புள்ளிகளையும் நஷரேத் விளையாட்டுக்கழகம் 2 புள்ளிகளையும் பெற்று ஏட்டிக்குப் போட்டியாக நின்றன.

இடைவேளையைத் தொடர்ந்து நடந்த போட்டியில் புங்குடுதீவு நஷரேத் 1 புள்ளியைப் பெற்று தனது புள்ளிகளை மூன்றாக உயர்த்த புங்குடுதீவு பாரதிவிளையாட்டுக்கழகம் தொடர்ந்து 5 புள்ளிகளைப் பெற்று மொத்தம் 8 புள்ளிகளைத் தனதாக்கியது. இறுதியில் 8:3 என்ற புள்ளி அடிப்படையில் புங்குடுதீவு நஷரேத் விளையாட்டுக்கழகத்தை வென்றது புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழகம்.

தொடர்ந்து ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் 6 கழகங்கள் மோதிக் கொண்ட போதும் இறுதிப் போட்டிக்கு புங்குடுதீவு நிலாஜோதி விளை யாட்டுக்கழகமும் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழகமும் தெரிவாகி மோதிக் கொண்டன.

இடைவேளை வரை இரு கழகங்களும் தலா மூன்று புள்ளிகளைப் பெற்றிருந்தன. இடைவேளையின் பின் நடந்த போட்டியில் பாரதி விளையாட்டுக்கழகம் ஒரு புள்ளியையும் நிலாஜோதி விளையாட்டுக்கழகம் மூன்று புள்ளிகளையும் பெற்றன. இதில் புங்குடுதீவு நிலாஜோதி விளையாட்டுக்கழகம் 6:4 என்ற புள்ளி வித்தியாசத்தில் புங்குடுதீவு பாரதி விளையாட்டுக்கழகத்தை வென்று இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவாகியது. (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கிறார் பிரட் ஹொக்




பிரட் ஹொக்

உலகக் கிண்ண 20/20 தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் 43 வயதான பிரட் ஹொக் இடம்பெற்றுள்ளார்.

உலகக் கிண்ண 20/20 தொடர் பங்களாதேஷில் மார்ச் 16 ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை நடைபெற இருக்கிறது.

இதற்கான 15 வீரர்கள் கொண்ட ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 43 வயதான சகலதுறை வீரர் பிரட் ஹொக் இடம் பிடித்துள்ளார். இவர் கடந்த 2012ஆம் ஆண்டில் நடந்த 20/20 உலகக் கிண்ணத்தில் கடைசியாக விளையாடினார். இதன்பின் ஆஸ்திரேலிய அணிக்காகப் பங்கேற்கவில்லை.

சமீபத்தில் நடந்த பிக்பாஷ் தொடரில் அவர் சிறப்பாக விளையாடியதே, இம்முறை அணியில் இடம்பெற காரணமாக அமைந்துள்ளது.

இந்தத் தொடரில் பிரட் ஹொக் களமிறங்கினால், 20/20 வரலாற்றில் அதிக வயதில் விளையாடிய வீரர் என்ற பெருமை பெறுவார்.

மேலும் 39 வயதான பிரட் ஹட்ஜுக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவரும் பிக்பாஷ் தொடரில் சிறப்பாக விளையாடியதே அணியில் இடம்பிடித்ததற்கு காரணமாகும்.

அணி விவரம்: ஜோர்ஜ் பெய்லி(அணித்தலைவர்), கிறிஸ்டியன், கவுல்டர்நைல், பல்க்னர், பின்ச், ஹடின், ஹொக், ஹட்ஜ், மக்ஸ்வெல், முரிஹெத், மிட்செல் ஜோன்சன், ஸ்டார்க், வோர்னர், வொட்சன், வைட். (த)

# நேகாவுடன் யுவராஜ்

இந்திய கிரிக்கெட் வீரர்கள் தற்போது விளையாட்டை விட நடிகைகளுடன் ஊர் சுற்றுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஏற்கனவே இந்திய அணியின் இளம் அதிரடி கிரிக்கெட் வீரர் விராட் கோஹ்லி நியூசிலாந்தில் இந்தி நடிகை அனுஷ்கா சர்மாவுடன் சுற்றுலாவில் ஈடுபட்டு வருகிறார்.

இதேபோல இந்திய அணியின் மூத்த வீரரான யுவராஜ் சிங்கும் நடிகை நேகா தூபியாவுடன் ஊர் சுற்றி வருகிறார். இருவரும் பல இடங்களில் ஒன்றாக ஊர் சுற்றியுள்ளனர். (த)




யுவராஜ் சிங்




# இந்திய அணியைத் துரத்தும் சோகம்

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் இரண்டாவது இடத்தையும் இழக்கும் அபாயக் கட்டத்தில் இந்திய அணி உள்ளது.

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி கண்ட இந்திய அணி, தரவரிசையிலும் பின்னடைவைச் சந்திக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பமாகும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா வெல்லும் பட்சத்தில், இந்திய அணி இரண்டாவது இடத்திலிருந்து மூன்றாவது இடத்துக்குப் பின் தள்ளப்படும்.

111 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருக்கும் ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்துக்கு முன்னேறும். அதே நேரத்தில் 133 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கும் தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியாவிடம் தொடரை இழந்தாலும் கூட அதன் தரவரிசையில் எவ்வித மாற்றமும் இருக்காது.

இந்திய அணி நாளை வெலிங்டனில் தொடங்கவுள்ள நியூஸிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியடையும் பட்சத்தில், ஆஸ்திரேலியா தொடரைச் சமநிலை செய்யுமாயின் இரண்டாவது இடத்தைப் பிடித்துவிடும்.

எனினும் தென்னாபிரிக்காவிடம் அவுஸ்திரேலியா தொடரை இழக்கும் பட்சத்தில் டெஸ்ட் தரவரிசையில் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# ஐ.பி.எல் சூதாட்டத்தில் டோனி, ரெய்னா தொடர்பு ?




டோனி, ரெய்னா

ஐ.பி.எல். சூதாட்டத்தில் இந்திய அணித் தலைவரும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவருமான டோனி மற்றும் ரெய்னாவுக்கும் தொடர்பு இருப்பதாக திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக விசாரணை செய்த அறிக்கை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 170 பக்கங்களை கொண்ட அந்த அறிக்கையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சூதாட்டத்தில் ஈடுபட்ட ஆறு பேர் தற்போது இந்திய அணிக்காக விளையாடி வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி, சுரேஷ் ரெய்னா ஆகியோருக்கும் ஆட்ட நிர்ணயம் மற்றும் சூதாட்டத்தில் தொடர்பு உண்டு என்று கைது செய்யப்பட்ட சூதாட்ட முகவரிடம் நடத்திய விசாரணை மூலம் தெரிய வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

விக்ரம் அகர்வால் (ஹோட்டல் உரிமையாளர்), குருநாத் மெய்யப்பன் (சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முகாமை உறுப்பினர்), கிரிக்கெட் வீரர்கள் டோனி, சுரேஷ் ரெய்னா மற்றும் இன்னும் சிலருக்கு ஆட்ட நிர்ணயத்தில் என்னென்ன தொடர்புகள் இருந்தன என்று தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் உத்தம் ஜெயின் சொல்லியிருக்கிறார்.

கடந்த மே 12ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடந்த சென்னை சுப்பர் கிங்ஸ் - ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் இடையிலான ஆட்டத்தில் சூதாட்டம் நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இந்த ஆட்டத்தில் சென்னை அணி 130 முதல் 140 ஓட்டங்கள் வரை எடுக்கும் என்று குருநாத் மெய்யப்பன் தனது கணிப்பை விண்டு தாரா சிங்கிடம் (இந்தி நடிகா) கூறியுள்ளார். அவர் சொன்னது போலவே ஏறக்குறைய நடந்துள்ளது.

சென்னை அணி அந்த ஆட்டத்தில் 141 ஓட்டங்களே எடுத்தது. ஆனால் இதன் மூலம் வைத்து மட்டுமே குருநாத் மெய்யப்பன், ஆட்ட நிர்ணயம் செய்தார் என்று அர்த்தம் கிடையாது. ஏனெனில் மெய்யப்பனுக்கு அது தொடர்பான தகவல்கள் நிறையத் தெரிந்து இருந்தது அல்லது அவருக்கு அந்த அணியின் ரகசியத் தகவல்கள், திட்டங்கள், ஆட்டத்தின் நிலைப்பாடுகள் அனைத்தையும் எளிதாகப் பெறும் நிலை இருந்தது.

இது போன்ற தகவல்கள் மற்றவர்களுக்குக் கிடைத்திருக்காது. சென்னை - ராஜஸ்தான் அணிகள் இடையிலான ஆட்டத்தை நிர்ணயம் செய்வதற்கு ஓர் ஒப்பந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று ஏப்ரல் 27ஆம் திகதி நடந்த இரவு விருந்து ஒன்றில் அகர்வால் உத்தம் ஜெயினிடம் தெரிவித்ததாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக தொகையாக ஏலம் போனார் யுவராஜ் சிங் 14 கோடிக்கு






ஏழாவது இந்தியன் பிறிமியர் லீக் தொடருக்கான வீரர்களுக்கான ஏலம் பெங்களூரில் நேற்றுக் காலை முதல் நடைபெற்றது. இந்த ஏலத்தில் நட்சத்திர வீரர் யுவராஜ்சிங் அதிக தொகையான 14 கோடி (2.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) இந்திய ரூபாவுக்கு ஏலமெடுக்கப்பட்டார். றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்ணய விலையை விட (2 கோடி) 7 மடங்கு விலைக்கு வாங்கியது.

இரண்டாவதாக பெரிய தொகையாக தமிழக வீரரான தினேஷ் கார்த்திக்கை 12.5 கோடி ரூபாவுக்கு டெல்லி அணி ஏலத்தில் எடுத்துள்ளது. மூன்றாவது தொகையாக இங்கிலாந்து அணியின் கெவின் பீற்றர்சனை 9 கோடி ரூபா கொடுத்து டெல்லி டேர் டெவில்ஸ் தக்கவைத்துக் கொண்டது.

பல நாடுகளைச் சேர்ந்த 514 வீரர்களை ஏலத்தில் எடுக்க 8 அணிகள் போட்டியிடுகின்றன. மொத்தம் ரூ.275 கோடிக்கு வீரர்களை ஐ.பி.எல். அணிகள் ஏலம் எடுக்கின்றன.

ஏலம் எடுக்கப்பட்ட வீரர்கள் விவரம் வருமாறு:

7ஆவது ஐ.பி.எல். தொடருக்கான முதல் வீரராக முரளி விஜயை டில்லி அணி 5 கோடி ரூபாவுக்கு தேர்வு செய்துள்ளது.

மேலும் டெல்லிக்கான அடுத்த வீரராக கெவின் பீற்றர்சன் 9 கோடி ரூபாவுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். கெவின் பீற்றர்சனை ஏலம் எடுக்க அனைத்து அணிகளுமே போட்டியிட்டமை குறிப்பிடத் தக்கது. அதிகபட்சமாக யுவராஜ்சிங்கை பெங்களூர் அணி 14 கோடி ரூபாவுக்கு தேர்வு செய்துள்ளது. இலங்கை வீரர் ஜெயவர்த்தனவை எந்த அணியும் ஏலம் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜக் கலிஸ் கொல்கத்தா அணியில் 5.5 கோடி ரூபாக்கு ஏலம் போனார்.

இந்தியாவின் அதிரடி ஆட்டக்காரரான வீரேந்திர சேவாக்கை 3.2 கோடி ரூபாவுக்கு பஞ்சாப் அணி ஏலத்தில் எடுத்துள்ளது. ஆஸ்திரேலிய அணியின் அதிரடி ஆட்டக்காரரான டேவிட் வோர்னரை முதல் வீரராக சண் ரைசர்ஸ் அணி 5.5 கோடி ரூபாக்கு ஏலம் எடுத்துள்ளது.

ஆஸ்திரேலிய அணியின் ஜோர்ஜ் பெய்லியை பஞ்சாப் அணி 3.25 கோடி ரூபாக்குத் தேர்வு செய்துள்ளது. மேற்கிந்தயத் தீவுகள் அணியின் அணித்தலைவரும். சகலதுறை வீரருமான டரன் சமியை 3.50 கோடி ரூபாவுக்கு சண் ரைசர்ஸ அணி தேர்வு செய்துள்ளது. தென்னாபிரிக்காவின் டு பிளஸ்சிஸ்ஸை சென்னை அணி 4.75 கோடி ரூபாக்கு ஏலத்தில் எடுத்துள்ளது. நியூசிலாந்தின் பிரண்டன் மக்கலமை 3.25 கோடி ரூபாவுக்குச் சென்னை அணி ஏலத்தில் எடுத்துள்ளது. ஆஸ்திரேலியாவின் மைக் ஹஸியை 5 கோடி ரூபாவுக்கு மும்பை அணி தேர்வு செய்துள்ளது.

இந்தியாவின் அமித் மிஸ்ராவை 4.75 கோடி ரூபாவுக்கு சண் ரைசர்ஸ் அணி தேர்வு செய்துள்ளது. இந்தியாவின் வேகப் பந்து வீச்சாளரான சகீர்கானை 2.6 கோடி ரூபாவுக்கு மும்பை இந்தி யன்ஸ் அணி தேர்வு செய்துள்ளது. இந்தியாவின் புஜாரா 1.9 கோடி ரூபாவுக்கு பஞ்சாப் அணியில் இடம்பிடித்தார். தென்னாபிரிக்காவின் டுமினி 2.2 கோடி ரூபாக்கு டெல்லி அணியில் தேர்வு செய்யப்பட்டார். இந்தியாவின் றொபின் உத்தப்பா 5 கோடி ரூபாவுக்கு கொல்கத்தா அணியில் தேர்வு செய்யப்பட்டார். ஆஸ்திரேலியா அணியின் பிரட் ஹொட்ஜ் 2.4 கோடி ரூபாவுக்கு ராஜஸ்தான் அணியில் தேர்வு செய்யப்பட்டார். ஆஸ்திரேலியா அணியின் ஷோன் மார்ஷ் 2.2 கோடி ரூபாவுக்கு பஞ்சாப் அணியில் தேர்வு செய்யப்பட்டார். இந்தியாவின் மனோஜ் திவாரி 2.8 கோடி ரூபாவுக்கு டெல்லி அணியில் இடம்பிடித்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான டுவானே ஸ்மித்தை 4.5 கோடி ரூபாவுக்கு சென்னை அணி தேர்வு செய்துள்ளது. (கு)

இலங்கையின் விசா ஆலோசனை வரலாற்றில் மிகப்பெரும் திருப்புமுனை
முதன்முறையாக:-

**கனடாவில் படிக்க உழைக்க**

**5 வருட விசா**

நம்பமுடியாவிட்டால் வென்றுவந்த விசாவை அக்குவேறு ஆணிவேறாகப் பரிசோதித்துவிட்டு மனநிறைவோடு எம்மோடு இணைந்து கொள்ளலாம்

இவ்வாய்ப்பு சில மனிதருக்கு சொற்ப காலம் மட்டுமே நீடித்திருக்கும்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com

# தப்பிப் பிழைத்தது இலங்கை

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது 20/20 போட்டியில் இறுதி வரை போராடி வெறும் 2ஓட்டங்களால் தோற்றது பங்களாதேஷ் அணி. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனை அடுத்துமுதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் குசல் பெரேரா 64 ஓட்டங்களையும் குலசேகர 31 ஓட்டங்களையும் பெற்றார். பங்களாதேஷ் மஸரபி மோர்ட்ஸ சொகைப் அல் கசன் மற்றும்அரபாத் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். தொடர்ந்து 169 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் 20பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று 2 ஓட்டங்களால்

தோல்வியைத் தழுவியது. அவ்வணி சார்பாக வெற்றிக்காக இறுதி வரை போராடிய அனமுல் ஹகக் 58 ஓட்டங்களையும் தமிம் இக்பால் 30 ஓட்டங்களையும் சொகைப் அல் ஹசன் 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் குலசேகர, பெரேரா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் மலிங்க மென்டீஸ ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் குசல் பெரேரா தெரிவு செய்யப்பட்டார். (400)




**A/L I.C.T**

2014 பரீட்சைக்கான வழிகாட்டல் விசேட வகுப்பு
ஒவ்வொரு வியாழனும் 3.30 தொடக்கம் 5.30 வரை
ஆரம்பம்:- 13.02.2014
எமது பழமையான ஆசிரியர்
அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்
பொருளியற் கல்லூரி
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.

**பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்**

af பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்கு French அரசாங்கம் மற்றும் French Embassy ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் (Only Official Centre) Alliance Française de Jaffna (AF) மட்டுமே. திருமணம் மூலம் France செல்பவர்களுக்கும் France இல் French படிப்பதற்கு / தொழில் புரிவதற்கும் எமது Certificates மட்டுமே Embassy இல் அங்கிகரிக்கப்படுகிறன.

புதிய வகுப்புகள்; விரைவில்... 021 222 8093
வடமாகாணத்தில் ஒரே முகவரி 61, Kachcheri-Nallur Road, Jaffna (கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் /Racca வீதியில் British Council அருகில்)

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

மக்கள் வங்கி முகாமைத்துவ உதவியாளர்
வெள்ளி 10 மணி
சனி, ஞாயிறு 11 மணி
[illegible] அபிவிருத்தி உத்தியோகத்தர்
ஞாயிறு 1.00 மணி
[illegible] நிலைக்கள முகாமைத்துவ உதவியாளர்
ஞாயிறு 1.00 மணி
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு யாழ்நகர்.
075 4164564

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது [illegible]க்கப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்

Batch1: 13.02.2014
Batch2: 15.02.2014
Batch3: 20.02.2014
Batch4: 22.02.2014

**தொழிற்பயிற்சிகள்**

* ஏயார் கொண்டிசனிங்
* MOBILE PHONE REPAIRING
* ELECTRONICS
* ELECTRICAL WIRING AND REWINDING

சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.
ஆரம்பம் 15/02/2014 சனி 9AM
விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
NO 23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P:- 077 8249949
NEW ASIAN CENTER
NO 56/15,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு:- 01. வெளிநாடு செல்பவர்களுக்கு குறுகிய கால பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.
02. O/L சித்தியடையாத மாணவர்களும் அனுமதிக்கப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.